விலை
ரூபா 20
பக்கங்கள்
28

# உதயன்

34°c - 27°c
தெளிவான
வானிலை

சுடர் 31 | கதிர் 134 | வள்ளுவர் ஆண்டு 2047 | பங்குனி 26, வெள்ளிக்கிழமை 08.04.2016


9 இலட்சம் ரூபா பெறுமதியான 4 கிலோகிராம் கஞ்சா மீட்பு



பக். 02

# தமிழ், சிங்கள மாநிலங்கள் இடையிலான கூட்டாட்சி

## தனது வரைவை முன்மொழிந்தது வடக்கு அரசு



யாழ்ப்பாணம், ஏப்ரல் 8
வடக்கு மாகாண சபையினால் உருவாக்கப்பட்ட அரசியல் தீர்வுத் திட்ட வரைவு நேற்றுச் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது. தீர்வுத் திட்ட வரைவானது, தமிழ் மக்களின் வரலாற்று உண்மைகள், தீர்வுக்கான முன்மொழிவுகள், எதிர்பார்க்கும் அதிகாரப் பரவலாக்கம் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. அதில் முக்கியமானவை வருமாறு:-

**அரசியல் தீர்வுக்கான முன்மொழிவுகள்**

- இலங்கையானது பெரும்பான்மையாகத் தமிழ்ப் பேசும் பிரதேசத்தைக் கொண்ட வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் ஒரு மாநிலமாகவும் மற்றும் பெரும்பான்மையாகச் சிங்களம் பேசும் பிரதேசத்தைக் கொண்ட ஏனைய ஏழு மாகாணங்களும் மற்றொரு மாநிலமாகவும் வேண்டும்.
- கொழும்புப் பிரதேசமானது தனியானதோர் நிர்வாகத்தைக் கொண்டு நாட்டின் தலைநகர அலகாக அங்கீகரிக்கப்படல் வேண்டும்.
- தமிழ்ச் சமூகத்தால் நூற்றாண்டுகளாகப் பேணப்பட்டுவந்த தனித்துவத் தன்மையின் அடிப்படையில், எந்தவொரு சமூகத்தைச் சேர்ந்த மக்களும் ஏனைய சமூகங்களில் ஆதிக்கம் செலுத்தவோ அல்லது அவர்களில் தங்கியிருப்பவர்களாக இருக்கும் வகையில், அவர்களைச் சார்ந்திருக்கவோ வேண்டிய தில்லை என்பதை உறுதிசெய்து கொள்வதற்கும், ஒற்றையாட்சி முறைக்குரிய அரசுக்குப் பதிலாகக் கூட்டாட்சி முறைக்குரிய அரசை நிறுவவேண்டியது அத்தியாவசியமாகின்றது.
- அதிகாரமானது ஒரு சமூகத்தில் குவிக்கப்படும் அபாயத்தைத் தவிர்த்து, அதிகாரங்கள் சகல சமூகங்களுக்கிடையேயும் சமனாகப் பகிரப்படுவதை முழு நாட்டினதும் நாடாளுமன்றப் பிரதிநிதிகள் உறுதி செய்தல் வேண்டும்.
- ஒவ்வொரு மாநில அரசினதும் தன்னாட்சிப் பிராந்திய அரசினதும் சுயாட்சியானது கூட்டாட்சி அரசினால் அங்கீகரிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.
- குடியரசின் கொடியானது மக்கள் பிரிவுகளைப் பிரதிபலிக்கும் விதத்தில் இருப்பதை இல்லாதொழிக்க வேண்டும்.
- மாநில எல்லைகளுக்குட்பட்ட அரச நிலங்கள் மாநில அரசின் கட்டுப்பாட்டுக்கு கீழாக வருதல் வேண்டும்.
- மாநில அரசுக்கு முழுமையான பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படல் வேண்டும்.
- தீவிரவாதத் தடுப்பு (தற்காலிக) ஏற்பாடுகள் சட்டம் நீக்கப்பட்டு, நாட்டின் பொதுவான குடியியல் சட்டமானது மீண்டும் கொண்டு வரப்படல் வேண்டும்.
- முன்னாள் போராளிகளைப் பொது வாழ்க்கையினுள் மீளக் கொண்டுவருவதன் பொருட்டு, படைக்குறைப்பு, படைக்கலைப்பு மற்றும் மீள வொருங்கமைத்தல் செயன்முறையானது வடக்கு - கிழக்கில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

**புதிய அரசமைப்பில் எதிர்பார்ப்பது**

- இலங்கைக் குடியரசு சமஷ்டி மாநில அரசுகளின் ஒன்றியம் ஆகும். ஒவ்வொரு மாநில அரசும் சுவிற்ஸர்லாந்தின் கன்ரன் முறைமை அடிப்படையிலான உள்ளக சுயநிர்ணய உரிமையைக் கொண்டிருக்கும்.
- குடியரசில் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகள் அரச கரும மற்றும் தேசிய மொழிகளாகவும் ஆங்கில மொழியானது ஓர் இணைப்பு மொழியாகவும் இருக்கவேண்டும். குடியரசானது வெஸ்ற்மினிஸ்ரர் முறையிலான அரசாகச் செயற்படவேண்டும்.
- குடியரசின் நாடாளுமன்றமானது மக்கள் பிரதிநிதிகள் சபை மற்றும் செனட் சபை (மேல்சபை) என இரண்டு சபைகளைக் கொண்டதாக அமைந்திருக்கும்.
- சிறுபான்மை இனத்தவர்களின் பாதுகாப்பு ஏற்பாடு (சோல்பரி யாப்பின் 29 ஆவது உறுப்புரை போன்ற ஏற்பாடு) தேவையானதாகும்.
- கலப்பு தேர்தல் முறை உருவாக்கப்பட வேண்டும். நாடாளுமன்றம் மற்றும் மாநிலங்களுக்கு தெளிவான தொகுதி முறையும், உள்ளூராட்சி மன்றங்களுக்கு வட்டார முறையும் வரையறுக்கப்படவேண்டும்
- அரசமைப்பானது சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அடிப்படை மற்றும் மனித உரிமை மற்றும் இதர உரிமைகள் தொடர்பான சாசனங்களில் கூறப்பட்டவை தொடர்பான நடைமுறைக்கான ஏற்பாடுகள் புதிய அரசமைப்பில் உள்வாங்கப்படல் வேண்டும்.

**பின்னிணைப்பு**

- சமஷ்டி அரசு, தேசிய பாதுகாப்பு - தேசிய நிதி - வெளிவிவகாரம் உள்ளிட்ட விவகாரங்களில் தனித்துச் சட்டம் இயற்ற முடியும்.
- மாநில அரசு காணி - பொலிஸ் உள்ளிட்ட 42 விடயங்களில் தனித்துச் சட்டம் இயற்ற முடியும்.
- முஸ்லிம்களுக்கு சுயாதீன பிரதேசத்தை உள்ளடக்கிய வடக்கு - கிழக்கு மாநிலமும், மலையக தமிழ்பேசும் மக்களின் சுயாதீன பிரதேசத்தை உள்ளடக்கியதாக மற்றைய மாநிலமும் அமையும்.
- மாநில நாடாளுமன்றம், அமைச்சரவை இருக்கும். இதன் பதவிக்காலம் 5 வருடங்கள்.
- மாநில முதலமைச்சரின் ஆலோசனைக்கு அமைய ஜனாதிபதி, சமஷ்டி அரசின் பிரதிநிதியை மாநிலத்துக்கு நியமிப்பார்.
- முதலமைச்சரின் ஆலோசனையின் அடிப்படையில் மாநில நாடாளுமன்றை அழைக்கவோ - ஒத்திவைக்கவோ - கலைக்கவோ சமஷ்டி அரசின் பிரதிநிதி அதிகாரம் கொண்டிருப்பார்.
- மாநில விவகாரங்கள் தொடர்பில் எந்தவொரு சட்டங்களையும் சமஷ்டி அரச நாடாளுமன்றத்தினால் நிறைவேற்ற முடியாது.
- மாநில பொலிஸ் துறைக்கு தலைமை தாங்கும் மாநில பொலிஸ்மா அதிபர் தலைவராய் இருப்பார். அவர் தமது கடமைகளையும் - பொறுப்புக்களையும் சட்ட மற்றும் ஒழுங்கு அமைச்சரான முதலமைச்சரின் பணிப்புகளுக்கு அமைய நிறைவேற்றுவார். (த-வ-5-ரி5)

(வரைவின் முழு வடிவம்
16ஆம், 17ஆம் பக்கங்களில்)

## காங்கேசன்துறைக் கடலில் நுழைந்த 11 பேர் கைது

### தென்னிலங்கையர் என்கிறது கடற்படை

யாழ்ப்பாணம். ஏப். 8
காங்கேசன்துறை கடற்பரப்பில் 40 அடி நீளமான படகில் சந்தேகத்துக்கு இடமான முறையில் பயணித்துக் கொண்டிருந்த தென்னிலங்கையைச் சேர்ந்த 11 பேர் நேற்றைய தினம் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.
இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களிடமிருந்த மீன்பிடி உப கரணங்கள் புதிதாக இருந்ததோடு அளவுக்கதிக மான சிலிண்டர்களும் காணப்பட்டுள்ளன. வலை எதுவும் காணப்படவில்லை. இதனால் அது தொடர்பில் சந்தேகம்



பக். 25

## இந்திய மீனவர் 13 பேர் கைது

யாழ்ப்பாணம், ஏப். 8
இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்ததோடு, மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் தடுப்பிலிருந்த 76 பேர் விடுதலையாகி இந்தியாவுக்குச் சென்றடைய முன்னரே இந்திய மீனவர்கள் மீண்டும் அத்து மீறியுள்ளனர். அத்துமீறிய இந்திய மீனவர்கள் 13 பேர் நேற்றுக் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.
இந்திய

பக். 25

## வடக்கின் தீர்வு வரைவு மீது 12 ஆம் திகதியன்று விவாதம்

### 16 ஆம் திகதி சம்பந்தனிடம் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 8
வடக்கு மாகாண் சபையின் அரசியல் தீர்வுத் திட்ட வரைவு நேற்றுச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
இந்த வரைவுமீதான விவாதம் எதிர்வரும் 12 ஆம் திகதி முழுமை பெற்று, அன்றைய தினமே தீர்வுத் திட்டம் இறுதி செய்யப்பட்டு, 16 ஆம் திகதி எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தனிடம் யாழ்ப்பாணத்தில் வைத்துக் கையளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
இலங்கையின் புதிய அரசமைப்புக்கு, அரசியல் தீர்வுத் திட்டத்தைத் தயாரித்துக் கையளிப்பதற்கு வடக்கு மாகாண சபை 19 உறுப்பினர்களைக் கொண்ட குழுவை நியமித்தது. இந்தக் குழு தனது தீர்வுத் திட்ட வரைவை, மாகாண சபையில் நேற்றுச் சமர்ப்பித்தது.
வடக்கு மாகாண முதலமைச்சர்

பக். 23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# முள்ளிவாய்க்கால் மனித அவலத்தின்போது முஸ்லிம் சமூகத்தின் மௌனம் நியாயமற்றது

## வடக்கு ஆளும் கட்சி உறுப்பினர் அஸ்மின் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.8
முள்ளிவாய்க்காலில் ஒரு பெரும் மனித அவலம் இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் முஸ்லிம் சமூகத்தின் மௌனம் நியாயப்படுத்த முடியாத ஒன்றேயாகும் என்று தெரிவித்துள்ள வடக்கு மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினர் அஸ்மின், அரசியல் ரீதியாக தமிழ் - முஸ்லிம் சமூகங்களுக்கு இடையில் பல்வேறு நம்பிக்கையூட்டும் விடயங்கள் இடம்பெற்றுள்ள போதும், அவை எதுவும் பெரிதாகக் கருத்தில் எடுத்துக் கொள்ளப்படவில்லை என்றும் குறிப்பிட்டார்.

வடக்கு மாகாண சபையின் அரசியல் தீர்வுத் திட்ட வரைபு சபையில் நேற்று சமர்ப்பிக்கப்பட்டது. அதன் மீதான விவாதம் இடம்பெற்ற போது அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

**நியாயம் கிடைக்கும்**

அரசியல் யாப்பை முன்மொழிவதன் நோக்கம், குறித்த ஆளுகைப் பிரதேசத்தின் மக்கள் தங்களுடைய நல்வாழ்வை அமைதியாகவும், முன்னேற்றகரமாகவும், பாதுகாப்பாகவும் முன்னெடுப்பதற்கேயாகும். இலங்கையில் இதுவரையில் அரசியல் யாப்புகள் அத்தகைய உயரிய அடைவுகளை மக்களுக்குப் பெற்றுத் தரவில்லை. பல இனங்கள் வாழுகின்ற இலங்கை போன்ற ஒரு நாட்டில் இனங்களுக்கிடையில் ஐக்கியம், அமைதி, பரஸ்பர புரிந்துணர்வு என்பவற்றோடு கூடிய பாதுகாப்பானதும் சுதந்திரமானதுமான நிலைத்து நிற்கும் அபிவிருத்திக்குமான சூழல் அரசியல் யாப்பின் மூலம் உத்தரவாதப்படுத்த வேண்டும்.

இதனை இப்போது தேசிய வேலைத் திட்டமாக நாம் முன்னெடுக்கின்றோம். இதனால் இந்த நாட்டின் அனைத்து மக்களும் நன்மையடைவார்கள் என்பது எமது எதிர்பார்ப்பு. இதனூடாக நீண்டு நிலைத்திருக்கும் இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு கிட்டும் என்பதும், தமிழ் மக்களுடைய கோரிக்கைகளுக்கு ஒரு நியாயமான பதில் கிடைக்கும் என்பதும் எமது எதிர்பார்ப்பாகும்.

**முஸ்லிம் சமூகத்தின் நிலைப்பாடு**

முஸ்லிம் சமூகம் சார்ந்து அதிலும் வடக்கு முஸ்லிம்கள் சார்ந்து நாம் மிகவும் தெளிவான நிலைப்பாடுகளுடன் இருக்கின்றோம். இந்த நாட்டிலே பிரிபடாத இலங்கைக்குள் தமிழ் மக்களுக்கான தீர்வு சமூக நீதியின் அடிப்படையில் முழு அளவில் பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும். தமிழ் மக்களுக்குப் பெற்றுக் கொடுக்கப்படும் தீர்வின் மூலம் அந்தப் பிரதேசத்தில் வாழ்கின்ற முஸ்லிம் மக்கள், சிங்கள மக்கள் அரசியல், சமூக, பொருளாதார ரீதியான எவ்விதமான பாதிப்புகளுக்கும் உள்ளாகக் கூடாது என்கின்ற இரண்டு அடிப்படைகளில் நாம் இந்த விடயத்தை நோக்குகின்றோம்.

**நம்பிக்கையீனங்கள்**

முஸ்லிம் மக்களைப் பொறுத்த வரையில் தமிழ் மக்களுடைய விடயத்தில் சில நம்பிக்கையீனங்கள் தோற்றுவிக்கப்பட்டிருக்கின்றன. வடக்குக் கிழக்கில் 1980 ஆம் ஆண்டுகளுக்கு முந்தைய காலங்களில் தமிழ்-முஸ்லிம் மக்களுக்கிடையிலான உறவிலும் அதற்குப் பிந்திய காலங்களில் தமிழ் - முஸ்லிம் உறவுகளிலும் பெரும் வித்தியாசங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவ நம்பிக்கையேற்படும் விதத்தில் பல்வேறு சம்பவங்கள் நிகழ்ந்தேறியிருக்கின்றன, அவற்றுக்கு ஒரு சாராரை மாத்திரம் குற்றம் சொல்ல முடியாது. பரஸ்பரம் இரண்டு சமூகங்களும் அதற்குப் பொறுப்புக் கூற வேண்டியவைகளே.

**சம்பவங்கள்**

2012 ஆம் ஆண்டு கிழக்கு மாகாண சபைத் தேர்தல் தமிழ் - முஸ்லிம் உறவைப் பலப்படுத்தி, அப்போதைய அராஜக ஆட்சிக்குச் சவாலாக சிறுபான்மை சமூகங்களின் ஆட்சியை அமைக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம் கிட்டியது, அதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முழு அளவிலான விட்டுக் கொடுப்புகளையும் செய்து உடன்படத் தயாராக இருந்த சமயத்தில் முஸ்லிம் காங்கிரஸ் அந்த வாய்ப்பை நழுவவிட்டது. இது இரண்டு சமூகங்களுக்கும் ஒரு பெரும் இழப்பாகும்.

2012 ஆம் ஆண்டுகளில் ஜெனிவா மனித உரிமை விசாரணை ஆணைக் குழுவிவகாரம் கூர்மையடைந்திருந்த சந்தர்ப்பத்தில், ஒரு சில முஸ்லிம் கட்சிகள் அரசுக்கு ஆதரவாகச் செயற்பட்டமை அங்கீகரிக்க முடியாத விடயமாகும்.

வாழ்வின் எழுச்சி சட்டமூலத்தை இழக்குமொரு தவறாகவே இருக்கின்றது.

முள்ளிவாய்க்காலில் ஒரு பெரும் மனித அவலம் இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் முஸ்லிம் சமூகத்தின் மௌனம் நியாயப்படுத்த முடியாத ஒன்றேயாகும்.

கிழக்கிலங்கையில் தமிழ்க் கிராமங்களில் மனித அவலங்களை ஏற்படுத்தியதில் முஸ்லிம் ஊர்காவல் படைவீரர்களுக்கு தொடர்புகள் இருக்கின்றன என்று சொல்லப்படுகின்றது, அவ்வாறு இடம்பெற்றிருக்குமானால் அதுவும் பெரும் தவறேயாகும். இவ்வாறே, 1985 ஆம் ஆண்டுகளுக்குப் பிந்திய காலத்தில் கிழக்கிலங்கையில் முஸ்லிம் சமூகத்தவர் மீதான படுகொலைகள், பள்ளிவாசல்களில் வணக்க வழிபாடுகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவர்கள் மீதான கொலை வெறித்தாக்குதல்கள், 1990 ஆம் ஆண்டுகளில் வடக்கு முஸ்லிம்கள் மீதான பலவந்த வெளியேற்றம், ஆயுதக் குழுக்களுக்கும் இலங்கை அரசுக்கும் இடையிலான பேச்சின் போது முஸ்லிம்களுடைய விவகாரங்கள் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டமை என்பவற்றால் இரண்டு சமூகங்களுக்கு இடையிலான பரஸ்பர நம்பிக்கை சீர்குலைக்கப்பட்டிருக்கின்றது.

**தமிழரசுக் கட்சியின் நியாயமான செயற்பாடு**

ஆனால் அரசியல் ரீதியாக இரண்டு சமூகங்களுக்குமிடையில் பல்வேறு நம்பிக்கை தருகின்ற விடயங்கள் இடம்பெற்றுள்ளன. ஆனால் அவை பெரிதாகக் கருத்தில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. இலங்கை தமிழரசுக் கட்சி யாப்பில், ஐக்கிய இலங்கை சமஷ்டியின் அங்கமாகிய சுயநிர்ணய உரிமைக் கொள்கைப்படி ஒரு சுயாட்சித் தமிழரசும், ஒரு சுயாட்சி முஸ்லிம் அரசும் நிறுவி இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களுடைய அரசியல் பொருளாதார கலாசார விடுதலையைக் காண்பதே இந்தக் கட்சியின் நோக்கமாகும் என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

முஸ்லிம்களுக்கென்று தனிக் கட்சிகள் தோன்றாத காலத்தில் இவ்வாறு தமிழரசுக் கட்சி தெரிவித்திருப்பது முஸ்லிம் சமூகத்தை அதனுடைய தனித்துவத்தோடு அங்கீகரித்திருக்கின்றமையை தெளிவாகக் கோடிட்டுக் காட்டுகின்றது. இது காலத்தால் மறைக்கப்பட்ட ஓர் அம்சமாக இருக்கின்றது.

1972 ஆம் ஆண்டு அரசியல் நிர்ணய சபைக்கு தமிழரசுக் கட்சி முன்வைத்த ஆலோசனைகளில் வட-கிழக்கு மாநிலம் என்பதைப் போலவே தென்கிழக்கு மாநிலம் என்ற கோரிக்கையும் முன்வைக்கப்பட்டிருக்கின்றது. இதுவும் முஸ்லிம் அரசியல் கட்சிகள் இல்லாத சூழ்நிலையில் முன்வைக்கப்பட்ட முன்மொழிவாகும். ஆனால் இதுவும் காலத்தால் மறைக்கப்பட்டிருக்கின்றது.

**கிட்டுவுடனான உடன்பாடு**

1987 ஆம் ஆண்டுகளில் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் போது வடக்கையும் கிழக்கையும் இணைத்தல் தொடர்பான சர்ச்சை எழுந்த சந்தர்ப்பத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கிட்டு என்று அழைக்கப்படுகின்ற திரு சதாசிவம் கிருஸ்ணகுமாருக்கும் முஸ்லிம் காங்கிரஸ் இயக்கத்தின் எம்.ஐ.எம். மொஹிதீனுக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் கிழக்கு மாகாணத்தில் அப்போதிருந்த 34 சதவீத முஸ்லிம்களின் சனத்தொகை விகிதாசாரம் வடக்கும் கிழக்கும் இணைகின்ற போது 15 சதவீதமாக குறைந்து வரும் நிலை இருப்பதை முஸ்லிம் சமூகம் அங்கீகரிக்காது என்று குறிப்பிட்டதற்கு அமைய, அந்த சனத்தொகை வீதாசாரத்தை 34 சதவீதமாக பேணிக் கொள்தல் என்ற உடன்பாடு எட்டப்பட்டிருக்கின்றது. ஆனால் இது பல சந்தர்ப்பங்களில் வெளியில் சொல்லப்படுவதில்லை.

**கூட்டமைப்பின் பொறுப்பு**

2010 ஆம் ஆண்டுக்குப் பிந்திய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எல்லாத் தேர்தல் அறிக்கைகளிலும் முஸ்லிம் சமூகம் அங்கீகரிக்கின்ற ஒரு தீர்வையே எதிர்பார்க்கின்றோம் என்ற விடயம் மிகவும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டு வந்திருக்கின்றது. இவ்வாறான நம்பிக்கையூட்டும் பல்வேறு விடயங்கள் தமிழ்-முஸ்லிம் அரசியலில் இடம்பெற்றாலும், இன்னமும் தமிழ் மக்களின் அரசியல் தலைமைகள் முஸ்லிம் மக்களின் நம்பிக்கையை முழுமையாக வெற்றி கொண்டதாக இல்லை. எனவே தமிழ் அரசியல் தலைவர்களுக்கு முன்னால் இருக்கின்ற பெரும் பொறுப்பாக இருப்பது தங்களுடைய நேர்மையை, தங்களுடைய சமூகநீதியை, தங்களுடைய கோரிக்கைகளில் இருக்கின்ற நியாயத் தன்மைகளை முஸ்லிம் மக்களோடும், அரசியல் தலைவர்களோடு வெளிப்படைத் தன்மையோடு கலந்துரையாடுவதேயாகும்.

**முஸ்லிம் சமூகத்தோடு பேசுங்கள்**

முஸ்லிம் சமூகம் என்பது வெறுமனே அங்கிருக்கும் அரசியல் கட்சிகள் மாத்திரம் அல்ல. முஸ்லிம் காங்கிரஸோடு மாத்திரம் பேசுவது முஸ்லிம் சமூகத்தோடு பேசியதற்கு சமமாகாது. அங்கிருக்கும் ஏனைய கட்சிகள், சிவில் சமூகத்தவர்கள், பெண்கள், இளைஞர்கள், பல்கலைக்கழக சமூகத்தவர்கள், புத்திஜீவிகள், மார்க்கத் தலைவர்கள் என பல மட்டங்களோடும் நேரடியாகப் பேசுவது சிறப்பானது.

இவ்வாறாக முஸ்லிம் மக்களின் நம்பிக்கையை வெல்வதனூடாக தமிழ் மக்களிற்கான தீர்வு விடயத்தில் மாத்திரமன்றி இரண்டு சமூகங்களின் ஐக்கியமான எதிர்கால வாழ்விற்கும் நாம் வழிசமைக்க முடியும் என்பது எனது நம்பிக்கை. எனவே முன்வைக்கப்பட்டிருக்கின்ற முன்மொழிவுகள் விடயத்தில் உடனடியாக இறுதியான தீர்மானங்களை மேற்கொள்ளாது உரியகால அவகாசம் வழங்கி மக்களின் கருத்துக்களை அறிய வேண்டும் - என்று தெரிவித்தார். (ற-5-ரி5)

# 9 இலட்சம் ரூபா பெறுமதியான 4 கிலோகிராம் கஞ்சா மீட்பு

யாழ்ப்பாணம், ஏப்.8
சுமார் 4 கிலோகிராம் கஞ்சாவை வீட்டில் மறைத்து வைத்திருந்து விற்பனை செய்து வந்த குற்றச்சாட்டில் 2 பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது என்றும், அந்தப் பெண் களில் ஒருவர் தென்பகுதியைச் சேர்ந்தவரைத் திருமணம் செய்துள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இளவாலைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பண்டத்தரிப்பு - பனிப்புலம் பகுதியில் உள்ள ஒரு வீட்டில் வைத்து நேற்றுமுன்தினமிரவு குறித்த பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று இளவாலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆர்.சேனாநாயக்க தெரிவித்தார்.

அந்த வீட்டிலிருந்து ஆயிரத்து 835 கிராம், ஆயிரத்து 830கிராம் நிறைகளைக் கொண்ட கஞ்சாப் பொதிகள்



இரண்டையும் சேர்த்து மொத்தம் 3 கிலோ 665 கிராம் நிறையுடைய கஞ்சா மீட்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு கைப்பற்றப்பட்ட கஞ்சாவின் பெறுமதி 9 இலட்சத்து 16 ஆயிரத்து 250 ரூபா எனக் கணக் கிடப்பட்டுள்ளது என்று பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்தார். கஞ்சா விற்பனையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர்கள் 43 மற் றும் 36 வயதுடைய குடும்பப் பெண்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

தமக்குக் கிடைத்த இரகசியத் தகவலின்படி குறித்த வீட்டை பொலிஸார் முற்றுகையிட்டனர். அதன் போது இரு பெண்களும் தப்பியோட முயற்சித்துள்ளனர். எனினும் அவர்கள் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர். அவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்றும் பொலிஸ் பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்தார். (ற-ஐ-4,107)

**சஞ்சிகை அறிமுகமும் இறுவட்டு வெளியீடும்**

ஆறுதல் நிறுவனத்தின் காலாண்டு வெளியீடான ஆறுதல் சஞ்சிகையின் அறிமுக விழாவும், பாடு பாப்பா எனும் இறுவட்டு வெளியீட்டு நிகழ்வும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளன.

ஆறுதல் நிறுவன நிறைவேற்று அதிகாரி சுந்தரம் டிவகலாலாவின் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் சஞ்சிகையின் வெளியீட்டுரை, நயவுரையை யாழ். பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜாவும், பாடு பாப்பா இறுவட்டு வெளியீட்டு உரை, அறிமுக உரையை பலாலி ஆசிரியபயிற்சிக்கலாசாலையின் முன்னாள் அதிபர் சோ.பத்மநாதனும் நிகழ்த்தவுள்ளனர். (ற-ஐ-ரி)

## யாழ்ப்பாணம் மாநகரசபை
## ஆதனவரி அறிவித்தல் - 2016
## தண்ட அறவீட்டிலிருந்து தவிர்த்துக் கொள்ளல்

2016 ஆம் ஆண்டு இரண்டாம் கந்தாயத்துக்கான ஆதன வரியினை 2016.06.30 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு முன்னராக எவ்வித தண்டமுமின்றி இவ் அலுவலகத்தில் செலுத்தலாம் எனவும், குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் வரிப்பணங்களுக்கு மேலதிகமாகக் கீழ்க்குறிப்பிடப்படும் விவரப்படி விறாந்துச் செலவு அறவிடப்படும் எனவும் இத்தால் அறியத்தருகின்றேன்.

**வெற்றுக்காணிகள் மற்றும் குடியிருப்பு காணிகள் 15%**
**ஏனைய காணிகள் 20%**

காலாண்டுக்குரிய ஆதனவரியை அக்காலாண்டின் முதல் மாதத்தின் 31 ஆம் திகதிக்குள் செலுத்தி 5% வரிக்கழிவினைப் பெற்றுக்கொள்ள முடியும். நிலுவை உட்பட 2016 ஆம் ஆண்டுக்கான வரியினைச் செலுத்தி ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். குறித்த நிலுவைத் தொகையினைச் செலுத்தாத பட்சத்தில் மாநகர சபைக் கட்டளைச் சட்டம் அத்தியாயம் 252 பிரிவு 252 (1) இன் படி நடுக் கட்டல் மூலம் அசைவுள்ள பொருள்கள் கைப்பற்றப்பட்டு அறவிடப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை யும் அறியத்தருகின்றேன்.

நேரடியாகச் செலுத்துபவர் அலுவலகத்துக்கு சமுகமளித்து பணத்தினைச் செலுத்தலாம் எனவும் காசோலையாகவோ காசுக்கட்டளையாகவோ செலுத்துவோர் மாநகரசபை ஆணையாளர், யாழ்ப்பாணம் என அனுப்பிச் செலுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**ஆணையாளர்,**
**மாநகரசபை அலுவலகம், யாழ்ப்பாணம்.**

## ஆதனவரிப் பெயர்மாற்றம்

யாழ்.மா்நகர சபைக்குட்பட்ட வட்டாரம் -21 அராலி வீதியில் ஆதன இலக்கம் 48 என்ற இலக்கத்தைக் கொண்ட ஆதனம் "சொந்தக்காரர்" என ஆதன வரிப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த இலக்கத்தில் உள்ள ஆதனத்தின் மொத்த பரப்பளவு நெ.பர.03 குளி 7.34 ஆகும்.

இதில் நெற்பரப்பு 1 ¾ இற்கு புத்தளம் கொழும்பு வீதி, ஜில்லையடி, இல.03 MCS பில்டிங்கில் வதியும் மரைக்கார் செயனுள் ஆப்தீன் கைம்பெண் சாஹிபாபேகம் (றசீத் மகள் சாஹிபா பேகம்) முன்னைய முகவரி இல.43, 5ஆம் குறுக்குத்தெரு, பொம்மைவெளி, அராலி வீதி, யாழ்ப்பாணம் என்பவர் தனது கணவர் மரைக்கார் செய்னுள் என்பவரால் பிரசித்த நொத்தாரிசு MM மன்சூர் முகதாவில் 1987 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் அராலி வீதியில் குறித்த காணியை கொள்வனவு செய்ததாகவும், 1990 இல் முஸ்லிம் மக்கள் இடம்பெயர்ந்த பொழுது தாமும் இடம்பெயர்ந்து புத்தளம் சென்றதாகவும் அங்கு (புத்தளத்தில்) உடைமைகளை இழந்ததுடன் 1994 இல் தனது கணவர் மரைக்கார் செய்னுள் ஆப்தீன் இறந்துவிட்டதாகவும் தன்னால் குறித்த பிரசித்த நொத்தாரிசு MM மன்சூர் அவர்களைச் சந்திக்க முடியவில்லை எனவும், பின்னர் குறித்த நொத்தாரிசு காலமாகிவிட்டதாக அறிந்தேன் என்றும் காணி பதிவகத்தில் பூரணதேடுதல் செய்தும் குறித்த அறுதி சாதனத்தைக் கண்டுபிடிக்க முடியாத நிலையில் பிரசித்த நொத்தாரிசு யோ.சத்தியநாதன் முகதாவில் உறுதி இல. 538, 2003.07.11 ஆம் திகதிய உறுதிமூலம் இவ்வெளிப்படுத்தல் சாதனம் நிறைவேற்றி உள்ளேன் என வெளிப்படுத்தி உள்ளார். பின்னர் குறித்த ஆதனத்தை மரைக்கார் செய்னுள் ஆப்தீன் கைம்பெண் சாகீபா பேகமும், மரைக்கார் செய்னுள் ஆப்தீன் மகள் சலிசா பேகமும் பிரசித்த நொத்தாரிசு யோ.சத்தியநாதன் முகதாவில் உறுதி இல. 539/11.07.2003 மூலம் யாழ்ப்பாணம் ஓட்டுமடம் பொம்மைவெளி அராலி வீதியில் வதியும் கனகராசா பகீரதனுக்கு அறுதியாக வழங்கப்பட்டு குறித்த கனகராசா பகீரதன் பெண் சுரேந்தினி என்பவர்களால் இணுவில். இணுவில் மேற்கு, கந்தசாமி கோயிலடியைச் சேர்ந்த நடராசா ஸ்ரீகரனுக்கு அறுதியாக வழங்கப்பட்டு பிரசித்த நொத்தாரிசு சாந்தகுமாரி சிவபாதம் முகதாவில் நிறைவேற்றிய அறுதி உறுதிமூலம் இணுவில் மேற்கு கந்தசாமி கோயிலடியைச் சேர்ந்த நடராசா ஸ்ரீகரனுக்கு ஓட்டுமடம், பொம்மைவெளி அராலி வீதியைச் சேர்ந்த கனகராசா பகீரதனும் பெண் சுரேந்தினி ஆகியோரால் நாகலிங்கம் சுந்தரேஸ்வரனுக்கு அறுதியாக வழங்கப்பட்டுள்ளது. மேலும் பிரசித்த நொத்தாரிசு சிவபாதம் முகதாவில் நிறைவேற்றிய அறுதி உறுதி இல. 2297/ 16.07.2005 மூலம் யாழ்ப்பாணம், கொட்டடி, இல.130 முத்தமிழ் வீதியைச் சேர்ந்த நாகலிங்கம் சுந்தரேஸ்வரனும் பெண் துரைச்செல்வி ஆகியோர் சிவலிங்கப்புளியடி 101/1 ஓட்டுமடம் வீதியைச் சேர்ந்த பழனிவேல் சத்தியசீலனும் பெண் மைதிலிக்கு வழங்கப்பட்டு அவர்கள் பிரசித்த நொத்தாரிசு S.சிவபாதம் முகதாவில் நிறைவேற்றிய அறுதி உறுதி இல. 2572/11.02.2006 மூலம் ஊர்காவற்றுறை, தம்பாட்டி, நாரந்தனை வடக்கைச் சேர்ந்த சின்னத்தம்பி இலட்சுமணனுக்கு அறுதியாக வந்தடைந்துள்ளது.

ஆதன விவரம்: வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று, வண்ணார் பண்ணை தென்மேற்கு, இறை இறசாலிக்குளம், கரைவயல் பொம்மை வயல் இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் S. சுப்பிரமணியம் அவர்களின் வரைபட இல. 2837A/2015.10.21 இல் துண்டு 1 எனக்காட்டப்பட்ட நெற்.பர. 3 குளி 7.354 ஆகும். இதற்கு எல்லை,

**கிழக்கு:- 12 அடிஒழுங்கை**
**வடக்கு:- 10 அடி ஒழுங்கை**
**மேற்கு:- நடேசு மேனகாவும் மற்றையவர்களும்**
**தெற்கு:- றோட்டு.**

தற்போது இவ் ஆதனம் சின்னத்தம்பி இலட்சுமணன் தனது பெயருக்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத் துக்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்துக்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது சின்னத்தம்பி இலட்சுமணன் என்னும் பெயருக்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதன பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்புக்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ஆணையாளர்,**
**மாநகரசபை.**

## ஆதனப் பெயர்மாற்ற அறிவித்தல்

யாழ். மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் - 09, நடுத்தெரு ஒழுங்கை ஆதன இலக்கம் 12 என்ற இலக்கத்தை கொண்ட ஆதனம் "தம்பு " கனகரட்ணம் பெண் சின்னம்மா என ஆதனவரிப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை 219 கண்டி வீதி, அரியாலை யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த கனகரட்ணம் நடராஜா, தற்போது 62, Donnington Road, Worcester Park, London, KT48EN,UKஇல் வசிப்பவரான கனகரட்ணம் செல்லத்துரை ஆகியோரால் தமது தத்துவ உரித்தாளரான இல 400/2 நாவலர் வீதி அரியாலை, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கனகரட்ணம் இராஜேந்திரன் மூலமாக குறித்த ஆதனம் தமது தாயார் கனகரட்ணம் சின்னம்மாவிற்கு சீதனமாக வழங்கப்பட்டதென்றும் அவர் 1984 காலமாகியதால் தமக்கு (மூன்றுபேருக்கும்) வந்து விட்டதென பிரசித்த நொத்தாரிஸ் தியாகலிங்கம் கணதீபன் முகதாவில் நிறைவேறிய உறுதி இலக்கம் 146/ 2015.05.25 மூலம் வெளிப்படுத்தி இதே நொத்தாரிஸ் முகதாவில் நிறைவேறிய நன்கொடை உறுதி இல. 589/25.05.2015 மூலம் இல. 219 கண்டி வீதி, அரியாலை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கனகரட்ணம் நடராஜா குறித்த ஆதனத்தில் 1/3 பங்கையும் இதே நொத்தாரிஸ் முகதாவில் நிறைவேறிய நன்கொடை உறுதி இல. 601/24.06.2015 மூலம் இல. 62, Donnington Road, Worcester Park, London, KT48EN,UK ஐச் சேர்ந்த கனகரட்ணம் செல்லத்துரை தனது 1/3 பங்கையும், கனகரட்ணம் இராஜேந்திரனுக்கு நன்கொடையாக வழங்கி முழுவதும் கனகரட்ணம் இராஜேந்திரனுக்கு கிடைக்கப்பெற்றுள்ளது.

ஆதன விவரம்: வட மாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி அரியாலை இறை சுண்டுக்குளி "பேருவெளிக்கு வடக்கிற் பெரிய புலம்" இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் V.T. பாலசுப்பிரமணியம் அவர்களது வரைபட இலக்கம் 5698/14.05.2013 ஆம் திகதிய வரைபடத்தின் படி நில.பர.04 குளி 09.9 இற்கு எல்லை.

கிழக்கு: காசிப்பிள்ளை பெண் நவமணியினதும், பொன்னுத்துரை கைம்பெண் செல்லம்மா
வடக்கு: இராசையா மகள் பிரேமினி
மேற்கு: நடுத்தெரு ஒழுங்கை
தெற்கு: புஸ்பராசா மகள் ரதியினதும், அழகக்கோன் மகள் ருக்குமணியினதும் ஆதனம்

தற்போது இவ்வாதனத்தை கனகரட்ணம் இராஜேந்திரன் என்பவரால் தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் உரிய ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது கனகரட்ணம் இராஜேந்திரன் என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகர சபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆணையாளர்,
மாநகரசபை.

(சி.22301) (13.18.17)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீங்களும் ஆங்கில ஆசிரியராகலாம்

* ஆங்கிலத்தினை அடிப்படையிலிருந்து கற்று ஆங்கில ஆசிரியராக விரும்புபவர்களுக்கும்
* ஆங்கிலத்தினை முழுமையாகக் கற்பதற்கு விரும்புபவர்களுக்கும்
* ஆங்கில மொழிமூல கற்கை நெறிகளைப் பின்பற்ற உள்ளவர்களுக்கும்
* ஆங்கில அறிவினை மேலும் விருத்தி செய்ய விரும்பும் ஆங்கில ஆர்வலர்களுக்குமான மிகக் குறைந்த கட்டணத்தில் 6மாத கற்கைநெறி.

(Trainer Training (Teacher Training Diploma)

→ 500 மணித்தியாலங்களில் நீங்களும் மிகச்சிறந்த ஆங்கில ஆசிரியர்
→ அனைத்தும் அடிப்படையிலிருந்து.(The Stracture of Language and oral situation approaches)
→ நவீன அணுகுமுறைகள்
→ Psychology, Leadership, Personality development.
→ Teaching practice
→ How to use the Techniques and teaching aids effectively in English

New batches Start On : 9.am (16.04.2016) சனி (weekend batch)
9.am (18.04.2016) திங்கள் (Week day batch)

4th, 5th Batch இல் இணைய பதிவுகளுக்கு முந்துங்கள்

ELAS
English Language Adventure School
Sir Pon Ramanathan Road, Thirunelveli, Jaffna.
T.P: 021 221 2410, 076 697 3040


# சிங்கப்பூரில் உள்ளவை போன்று இலங்கையிலும் வைத்தியசாலை

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.8
சிங்கப்பூரில் உள்ள மௌன்ட் எலிசபெத் வைத்தியசாலையைப் போன்று, சகல வசதிகளையும் கொண்ட முழுமையான வைத்தியசாலைகள் மூன்றை இலங்கையிலும் நிறுவுவதற்குச் சுகாதார போசாக்குகள் மற்றும் சுதேச வைத்திய அமைச்சர் ராஜித சேனாரத்ன தீர்மானித்துள்ளார்.

சுகாதார அமைச்சராகப் பதவி வகிக்கும் காலத்துக்குள் இந்த மூன்று வைத்தியசாலைகளையும் நிறுவ இருக்கின்றேன் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த மூன்று வைத்தியசாலைகளையும் நிறுவுவதற்கு ரஷ்யா, ஒஸ்ரியா மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகளிடமிருந்து இரண்டு திட்ட அறிக்கைகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

அத்துடன் புற்று நோயாளர்களுக்குத் தேவைப்படும் சிகிச்சைகள் தொடர்பாக நவீனமான வைத்தியசாலையொன்றை நிறுவி வழங்குவதற்கு ஜேர்மனி முன்வந்துள்ளது என்றும், அதை நிர்மாணிப்பது தொடர்பாக காணிகளும் தெரிவு செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-ஜ-22)


## சிறிகுமரன் ரெக்ஸ்

தட்டாதெருச் சந்தியில் புது வருடத்தை முன்னிட்டு விசேட விலைக்கழிவில் புத்தம் புதிய தெரிவுகள்



இந்தியாவில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட அனைத்து ரக ஆடைகளையும் நம்ப முடியாத விசேட விலைக்கழிவில் பெற்றுக்கொள்ளலாம்.

விசேடமாக Office Wear Sarees

* பட்டுச்சாறி
* பன்சிசாறி
* கொட்டன்சாறி
* சல்வார்
* சல்வார் துணி
* TOPவகைகள்
* ரவுசர்,சேட்

என்பவற்றை மலிவாகப் பெற்றுக்கொள்ள

சிறிகுமரன் ரெக்ஸ்
770,K.K.S. றோட், தட்டாதெரு சந்தி, யாழ்ப்பாணம்.



“ மாசற்ற நீரே குறைவற்ற செல்வம் ”




இச்சலுகை 30.04.2016 வரை மட்டுமே

* உங்கள் கிணற்று நீர் பருகுவதற்கு உகந்ததா என்பதில் சந்தேகமா ?
* மேலதிக கல்சியம், மக்னீசியம், நைட்ரைட் ஒரு பிரச்சினையா?
* மலத்தொற்று கிருமிகள் போன்ற உயிர்க்கொல்லி நோய்க்கிருமிகள் உங்கள் கிணற்று நீரிலும் இருக்கலாம் என அச்சமா?
* போத்தலில் அடைக்கப்பட்ட நீருக்கான செலவு அதிகமா?
* மேற்குறிப்பிடப்பட்டவை போன்ற அனைத்து பிரச்சினைகளுக்கும் நம்பிக்கை உத்தரவாதத்துடனான தீர்வு எம்மிடம் மட்டுமே...
* UV உடனான HI-PURE RO நீர் சுத்திகரிப்பு இயந்திரத்தின் மூலம் 100% தூய நீரை உங்கள் வீட்டிலேயே பெற்று பயன் பெறலாம்.
* அனைத்து நீர் சுத்திகரிப்பு தொடர்பான சிறந்த தீர்வுக்கு எங்களை நாடுங்கள்.

EVER PURE HI-TEC (PVT) LTD
341,K.K.S ROAD ,JAFFNA.
TEL:- 0215677567,0773626230



## தென்னிந்திய திருத்தல யாத்திரை

நாள்கள் - 16 யாத்திரிகர் - 10
ஆரம்பம் - 20.05.2016

தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா, கேரளா, பாண்டிச்சேரி ஆகிய ஐந்து மாநிலங்களுக்கு ஊடாக திருத்தல யாத்திரை தரிசிக்கும் ஆலயங்கள்.

உச்சிப்பிள்ளையார், பிள்ளையார்பட்டி, மணக்குளவிநாயகர், காணிப்பாக்கவிநாயகர், திருப்பதி, சிதம்பரம், திருவெண்ணாமலை, காளகஸ்த்திரி, ஏகாம்பரேஸ்வரர், திருவானைக்காவல், திருவாரூர், திருவிடைமருதூர், திருவையாறு, தஞ்சாவூர், இராமேஸ்வரம், உத்திரகோசமங்கை, திருப்புளாணி, நவபாஷாணம், குருவாயூர், ஐயர்மலை, சிவன்மலை, பொற்கோயில், பத்மநாதசுவாமி, கொடுங்களூர் பகவதி அம்மன், சுசீந்திரம், கபாலிஸ்வரம், பஞ்சவடி, அனந்தமங்கலம், ஆஞ்சினேயர், மதுரைமீனாட்சி, கன்னியாகுமரி, மைசூர் சாமுண்டீஸ்வரி, நந்திகோயில், ஸ்ரீரெங்கம், ஸ்ரீரெங்கபட்டிணம், சமயபுரம், மேல்மருவத்தூர் பிரம்மா கோயில், 9 நவக்கிரக ஆலயங்கள் தனித்தனியாக, திருநள்ளாறு சனிபகவான் உட்பட ஆறுபடை வீடுகள் (திருச்செந்தூர், பழனி, பழமுதிர்சோலை, திருத்தணிகை, திருப்பரம்குன்றம், சுவாமிமலை) குன்றக்குடி, பைரவன்பட்டி பைரவர், காமாட்சி, வனத்திருப்பதி, திருக்கடையூர் அபிராமி உட்பட 60 இற்கு குறையாத ஆலயங்கள் தரிசிக்கலாம்.

முக்கியமாக கும்பகோணம் மகாமயை குளத்தில் கும்பமேளா நடந்த இடத்தில் 90 நாள்களுள் நீராடினால் தோஷங்களும் பாவங்களும் நீங்கும் என்பது ஐதீகம் புனித குளத்தில் நீராட விஷேஷ ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.

கட்டணங்கள் உட்பட மேலதிக விவரங்களை கேட்டு அறிந்து பதிவுசெய்யவும்

கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன் (ராஜன் - மகன்)
59.3/6, செட்டியார்தெரு, கொழும்பு - 11
T.P: 0777 680 102, 0777 362 154
F.B.sridevisriranganathan.thuraiappa



## மாபெரும் மலிவு விற்பனை

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு
இன்று 01.04.2016 தொடக்கம் எதிர்வரும் 14.04.2016 வரை

ராசி கலக்ஷன்ஸ் (ராசி சில்க்ஸ்)

இந்தியாவில் இருந்து விசேடமாக தருவிக்கப்பட்ட நவீன டிசைன்களினாலான ஆடைத் தினுசுகள்

| | | |
|---|---|---|
| சாறிகள்(சீக்குயின்ஸ்) | 4000/= | 1500/= |
| மொடல் சாறி | 5500/= | 2000/= |
| கொட்டன் சாறி | 1000/= | 500/= |
| நெற் சல்வார் | 6000/= | 4000/= |
| கொட்டன் சல்வார் | 5000/= | 2500/= |
| TOP | 1600/= | 800/= |
| T சேட் | 1800/= | 800/= |
| மொடல்சேட் | 1800/= | 900/= |



இது மட்டுமன்றி அனைத்து ஆடைவகைகளும் மாபெரும் மலிவு விற்பனை. இன்றே விரையுங்கள். உங்களுக்குப் பிடித்தமானதை அள்ளிச் செல்லுங்கள்.

ராசி கலக்ஷன்ஸ் (ராசி சில்க்ஸ்)
Rasi Collections

இல.199, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 021 222 5571



## யாழ்ப்பாணத்தில் காண்டம் வாசிக்கப்படுகின்றது

ஸ்ரீ கௌசிக அகஸ்திய நாடி சோதிட நிலையம் (pvt)Ltd

P. ஜெய்சங்கர்

கொழும்பில் கடந்த 25 வருடங்களாக,கௌசிக அகஸ்திய முனிவர்களால் எழுதப்பட்ட ஏட்டுச் சுவடிகள் மூலம், தங்களின் கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம், கல்வி, திருமணம், குழந்தைகள், தொழில்வாய்ப்புகள் வெளிநாட்டுப் பயணம் போன்றவற்றைக் கூறிப் புகழ் பெற்ற சோதிடர்களால் தற்போது யாழ்ப்பாணத்தில் பலருடைய வேண்டுகோளுக்கு இணங்கி கீழ் கண்ட முகவரியில் காண்டம் வாசிக்கப்படுகின்றது.

தொடர்புகளுக்கு:
384 A, நாவலர் வீதி, (கைலாசபிள்ளையார் கோயில் சந்தி, நல்லூர்)
தொலைபேசி: 021 221 7944
கொழும்பு முகவரி:
19,1/1, கொத்தலாவல மாவத்தை, பம்பலப்பிட்டி
தொலைபேசி: 011 258 6180/ 011 258 6208
(ச. 22235) (12.18)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்தாண்டு கால குதூகலத்தில் சொப்ட்லொஜிக் உடன் இணைந்திடுங்கள்

softlogic max

**250 மில்லியனுக்கு மேல் பெறுமதியான தள்ளுபடிகள் மற்றும் பரிசுகள்**

Panasonic 32" LED

3 வருட உத்தரவாதம்
6,999/- மாத்திரம் செலுத்தி எடுத்துச் செல்லுங்கள்

SAMSUNG 32" LED JOY PLUS

மீதி வட்டியில்லாத 15 மாத தவணைக் கொடுப்பனவு முறையில்

3 வருட உத்தரவாதம்
6,999/- மாத்திரம் செலுத்தி எடுத்துச் செல்லுங்கள்

இலவச DVD

DEL Laptop 3543 i3

DELL

ரூ. 85,999/-
மாதம் ரூ. 5,200/-
15 மாதங்கள் இலவசம்

FREE Printer

6 வது Generation இல் புதிய மடிக்கணினியை 14,999/- செலுத்தி எடுத்துச் செல்லுங்கள்

Panasonic 32" LED 32sv7

ஆரம்ப கட்டணம் 9,999/-
மற்றும் இலவச Home theater (XH166)

FREE Home Theatre

**இந்தச் சலுகைகள் எமது கிளையில் மட்டுமே**

தொடர்புகளுக்கு:

softlogic MAX
maximum experience

பிரதான கிளை

இல.420, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (KFC கட்டடம்)

0777 397734 / 021 567 8989 / 077 982 4213

## 2016 சித்திரைப் புதுவருடத்தை முன்னிட்டு...

இந்தியன் செலக்ஷனின்

# இந்தியன் பஜார்

## வழங்கும்

## மாபெரும் விசேட விலைக்கழிவுகள்



உங்களுக்குத் தேவையான திருமண பட்டுப் புடைவைகள் விதம் விதமான அழகிய சாறி வகைகள் மற்றும் அனைத்து வகையான ஆடைகளையும் மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.





### சல்வார் துணிகள்

சில்க் 2 டொப் சல்வார் துணி
~~1500/-~~ 1000/-

சில்க் 3 டொப் சல்வார் துணி
~~2000/-~~ 1500/-

குண்டன் 2 டொப் சல்வார் துணி
~~1500/-~~ 1200/-

கொட்டன் 3 டொப் சல்வார் துணி
(Special) ~~3000/-~~ 2500/-

இடம் : யாழ்.வீரசிங்க மண்டபம்.
காலம் : 30.03.2016 முதல் 15.04.2016 வரை

புடைவை விற்பனையில் மாபெரும் புரட்சி

# அம்பாள்

## ரேட் (பிறைவேற் லிமிடெட்)

சித்திரைப் புதுவருடத்தை முன்னிட்டு மிகத் தரமான உடைகள்

## மிகப்பெரிய மலிவு விற்பனை

- கொட்டன் துணிகள் பல வண்ணங்களில்
- ரொப் வகைகள்
- சல்வார் துணிகள்
- பல விலைகளில் பல டிசைன்களில் சில்க், கொட்டன் சாறிகள்
- சிறுவர்களுக்கான சோளிகள், குருதாக்கள்
- வேட்டிகள் இன்னும் பற்பல.

ஒவ்வொரு வாடிக்கையாளரையும் திருப்திப்படுத்தும் எமது சேவை.

தெரிவுகளுக்கு முந்துங்கள்

பணத்தினை மீதப் படுத்துங்கள்

தரமானவற்றை மலிவாகப் பெறுங்கள்

அதிர்ஸ்டத்தினை தவற விடாதீர்கள்



**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய மாநகரசபைக் கட்டடத் தொகுதி, முதல் மாடி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

12 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
வேலுப்பிள்ளை இராஜரட்ணம்
(செல்வம்)
(முன்னாள் உரிமையாளர்- R.B புக்கிங் சென்ரர் )

மண்ணில்
24 . 04 . 1953



விண்ணில்
08 . 04 . 2004

எங்கள் தெய்வமே அப்பா
எங்கள் உள்ளம் ஏங்குகிறதப்பா
அப்பா உங்களை தேடுகின்றது
நாங்கள் தொலைத்த நீங்களில்லாத
நாள்கள் எல்லாம் மறுபடியும் வருமா?
பூமியிலே மீண்டும் நீங்கள் வந்து
புன்னகைக்கும் நாள்களும் இனி வருமா?
வண்ணமில்லாத ஓவியமாய் நாங்கள் இங்கு
மீண்டுமொரு ஜென்மம் வேண்டும்
உங்களோடு நாங்கள் வாழ்வதற்கு
என்றும் உங்கள் அழியா நினைவுகளோடு....

யாழ்ப்பாணம். (ஜே/160)(11.18) மனைவி, மக்கள், மருமக்கள், பேரன்.



7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
20 . 09 . 1990



விண்ணில்
08 . 04 . 2009

அமரர் தவராசா டக்சன்

அன்புக்கு இலக்கணமாய்
அறிவுக்கு எடுத்துக்காட்டாய்
பண்புக்கு முன்மாதிரியாய்
பாசத்துக்கு அர்ப்பணிப்பாய்
எம்முடன் வாழ்ந்தாய்!
ஆண்டுகள் ஏழாயினும்
என்றும் உன் நினைவுடன்...

டக்சன் ரவல்ஸ்,
தம்பகாமம், பளை.
குடும்பத்தினர்
077 279 1551


# பசிலின் மகனுக்குச் சமையல் செய்ய அமெரிக்கா சென்ற கடற்படையினர்

## விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு, ஏப்.8
பசில் ராஜபக்சவின் மகனின் வீட்டில் சமையல் வேலைகளைச் செய்வதற்காக, இலங்கைக் கடற்படையினர் இருவர், இராஜ தந்திரக் கடவுச்சீட்டில் அமெரிக்காவுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது அது தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மகிந்த ராஜபக்ச ஆட்சிக்காலத்தில் கலிபோர்னியாவில் உள்ள பசில் ராஜபக்சவின் மகனின் வீட்டில் சமையல் செய்வதற்காக இரண்டு கடற்படையினர் அனுப்பி வைக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. இலங்கைத் தூதரகத்தில் தோட்ட வேலை செய்பவர்கள் என்று கூறியே இவர்களுக்கு இராஜதந்திரக் கடவுச்சீட்டு பெறப்பட்டு, அமெரிக்காவுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். எனினும் அவர்கள் பசில் ராஜபக்சவின் மகனின் வீட்டில் உணவு சமைத்துப் பரிமாறுபவர்களாகவே பணியாற்றியிருந்தனர் என்பது விசாரணையில் இருந்து தெரிய வந்துள்ளது. கடற்படையினரில் ஒருவர் திருமணத்துக்காக நாடு திரும்பியபோது, புஸ்ப ராஜபக்சவின் உத்தரவின்பேரில், இராஜ தந்திரக் கடவுச்சீட்டை வைத்திருந்தார் என்று கைது செய்யப்பட்டார்.

இரண்டாவது கடற்படைச் சிப்பாய், கடந்த ஆண்டு ஜனவரி மாதம் ஜனாதிபதித் தேர்தல் முடிந்த பின்னர், நாடு திரும்பினார் என்றும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த இராஜதந்திரக் கடவுச்சீட்டுகளுக்கு 2017 வரை அமெரிக்காவில் வதிவிட உரிமை வழங்கப்பட்டிருந்தது என பெரும் மோசடிகள், அதிகார துஷ்பிரயோகங்கள் குறித்து விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழு கண்டறிந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-4)

## பீஜிங் சென்றார் பிரதமர் ரணில்

கொழும்பு,ஏப்.8
சீனாவுக்கான மூன்று நாள் பயணத்தை மேற்கொண்டு நேற்றுமுன்தினம் கொழும்பில் இருந்து புறப்பட்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சீனத் தலைநகர் பீஜிங் சென்றடைந்தார். பீஜிங் விமான நிலையத்தில் பிரதமரை, சீன அதிகாரிகளும், இலங்கைத் தூதரக அதிகாரிகளும் வரவேற்றனர். நேற்று முன்தினம் சைனா வேல்ட் வியூ விடுதியில் தங்கிய பிரதமர், சீனத் தலைவர்கள், அதிகாரிகளுடனான சந்திப்புக்களை நடத்தினார் என்று தெரிவிக்கப்பட் டுள்ளது.

இந்தப் பயணத்தின் போது முக்கியமாக, கொழும்புத்துறைமுக நகரத் திட்டத்தைத் தாமதித்ததற்காக, சீன நிறுவனம் கோரும், 125 மில்லியன் டொலர் இழப்பீடு தொடர்பாகப் பேச்சு நடத்தப்படும் என்று ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

துறைமுக நகரத் திட்டம் இடைநிறுத்தப்பட்டதால், நாளொன்றுக்கு 3 லட்சத்து 80 ஆயிரம் டொலர் இழப்பு ஏற்படும் என்றும், இந்த திட்டத்தைநடைமுறைப்படுத்தும் சீனாவின் தொடர்பாடல் கட்டுமான நிறுவனம் தெரிவித்திருந்தது. இதன்படி கடந்த ஒரு ஆண்டு காலத்துக்காக 125 மில்லியன் ரூபா இழப்பீடு தர வேண்டும் என்றும் அந்த நிறுவனம் இலங்கை அரசைக் கோரியுள்ளது என்றுதெரிவிக்கப் படுகிறது.

இது தொடர்பாக ஏற்கனவே நடத்தப்பட்ட பேச்சு தோல்வியில் முடிந்திருந்தது. குறித்த தொகை இழப்பீட்டை வழங்க முடியாது என்றும், தாம் இதுபற்றி பேச்சு நடத்தவுள்ளோம் என்றும் பெருநகர அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். (ற-ஐ-4)


29 ஆம் ஆண்டு நினைவலைகள்



சற்குணநாதன்
நந்தகோபன்

ஆண்டுகள் இருபத்து
ஒன்பதானாலும்
உன்பூரிப்பு வதனம் பூப் போல
தோன்றி மறையுதடா
நந்தன் எனும் நாமம் மறைந்ததோ
உன் பிரிவால் வாடும்
அம்மா, அக்காமார், தம்பி, தங்கை
மற்றும் உறவினர்கள்.

தகவல்:
திருமதி இ. சற்குணநாதன்
மீசாலை மேற்கு,
மீசாலை.

மலர்வு 17.09.1969 உதிர்வு 08.04.1987
(70252) (12.17.20)



எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
சுப்பையா கணேசு

தோற்றம்
14. 02.1943

மறைவு
07.04.2008

எட்டு ஆண்டுகள் எட்டிப் பிடித்தது இன்றுடன்
சொட்டு(ம்) ஆறவில்லை எம் மனம் தங்கள் இழப்பினை
விட்டுப் பிரிந்த நிமிடத்தில் ததும்பிய விழிநீர் வழிநடத்திச்
செல்லுமப்பா எம் வாழ்வின் எல்லைவரை
என்றும் நீங்கா நினைவுடன்

டச் றோட், மானிப்பாய். குடும்பத்தினர்.



5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் வைரமுத்து
குழந்தைவேலு

மண்ணில்
20 . 10 . 1925

விண்ணில்
08 . 04 . 2011

ஐந்தாண்டுகள் ஓடி மறைந்தாலும்
உங்கள் நினைவு என்றென்றும் எங்கள் மனதில்
நிறைந்திருக்கும் காலங்கள் விடைபெறலாம் ஆனாலும்
எம் கண் முன்னே நிழலாடும் உங்கள் நினைவுகள்
என்றும் எம்மை விட்டு அகலாது

(69778) (12.18)

இலுப்பையடி வீதி,
கோண்டாவில் கிழக்கு.
குடும்பத்தினர்.
நயினாதீவு -02


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோழி இறைச்சியை அதிக விலைக்கு விற்போர் மீது சட்ட நடவடிக்கை

## நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் யாழ்ப்பாண இணைப்பாளர் தெரிவிப்பு

> புறோயிலர் கோழி இறைச்சியை தோல் நீக்கிக் கொடுத்தால் குறித்த விலைகளில் விற்கலாம். தோலுடன் விற்பனை செய்வதானால், முன்னதாக கடையில் விலைப்பட்டியலை விளம்பரப் படுத்துதல் வேண்டும்

யாழ்ப்பாணம்,ஏப்.8

விதிக்கப்பட்ட கட்டுப்பாட்டு விலைகளுக்கு மாறாக கோழி இறைச்சியை அதிக விலைக்கு விற்பனை செய்யும் வர்த்தகர்கள் தொடர்பான முறைப்பாடுகள் கிடைக்கும் பட்சத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் யாழ்ப்பாண இணைப்பாளர் த.வசந்தசேகரன் தெரிவித்துள்ளார்.

புறொயிலர் கோழி இறைச்சிக்கு கட்டுப்பாட்டு விலை விதிக்கப்பட வேண்டியது அவசியம் எனக் கோழி இறைச்சிப் பாவனையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

சாதாரண நாள்களில் 510 மற்றும் 520 ரூபா விலைக்கு விற்பனையாகும் ஒருகிலோ கோழி இறைச்சியின் விலை, பண்டிகை நாள்களில் 540 ரூபா தொடக்கம் 560 ரூபா வரை வியாபாரிகளால் எந்தவித முன்னறிவித்தலுமின்றி விற்கப்படுகின்றன என்றும் அவர்கள் குற்றஞ்சாட்டி யுள்ளனர்.

குருநகரிலுள்ள புறொயிலர் கோழி விற்பனையாளர்கள் உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இவ்விதம் 540 ரூபாவுக்கு விற்பனை செய் துள்ளனர். புறொயிலர் கோழி யிறைச்சிக்கு கட்டுப் பாட்டு விலை அறிவித்து, அந்த விலைக்கு விற்பனை செய்யப்படு கிறதா என்பதையும் கண்காணிக்கவேண்டும்என்றுபொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் கேட்டபோதே நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் யாழ்ப்பாண இணைப்பாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

புறோயிலர் கோழி இறைச்சியை தோல் நீக்கிக் கொடுத்தால் குறித்த விலைகளில் விற்கலாம். தோலுடன் விற்பனை செய்வதானால் முன்னதாக கடையில் விலைப்பட்டியலை விளம்பரப்படுத்துதல் வேண்டும்.

கோழியை உரித்து பதப்படுத்தி, குளிரூட்டி, பைகளில் அடைத்து விற் பனை செய்யும்போது அதனுடைய கட்டுப்பாட்டு விலை 480 ரூபாவாக இருக்கும். இதுவே எம் முடைய வர்த்தமானியில் வெளியிடப் பட்ட இறுதிக் கட்டுப்பாட்டு விலை. உடன் கடைகளில் உரித்து விற்பனை செய் யும் இறைச்சிகளுக்கு இந்த விலை பொருந்தாது. அவர்கள்வழமையான விலையை எழுதிக் காட்சிப்படுத்துதல் வேண்டும்.

இவ்வாறு விற்பனை செய்யப்படாத கடைகளில் நாம் நடவடிக்கை எடுப்பதுடன், இறைச்சியையும் பறிமுதல் செய்யும் நிலை ஏற்படும். எனினும் விலை முறைகேடுகள் தொடர்பாக எமக்குப் பாவனையாளர்களிடம் இருந்து முறைப்பாடுகள் கிடைக்கும் பட்சத்தில், மாவட்ட அரச அதிபர் முன்னிலையில் கோழி இறைச்சி விற்பனையாளர்களுடன் கலந்துரை யாடி இந்த இறைச்சிகளுக்கான கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிக்க முடியும். இந்தநடைமுறையைச்செயற்படுத்துவதற்கு நீண்டகாலம் தேவைப்படலாம்.- என்றார். (ற-ஐ-ரி5,51)

# வற்றாப்பளை பன்னிச்சை மர பிரச்சினைக்குச் சுமுகத் தீர்வு

முல்லைத்தீவு,ஏப்.8

வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயத்தின் பராமரிப்பில் ஆலய பொங்கலின் போது தீர்த்தக்குடம் இறக்கி இளைப்பாறும் பன்னிச்சை மரத்தின் அருகில் தனி நபர் ஒருவரால் அமைக்கப்பட்ட வேலியை அகற்றி, மீண்டும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் எல்லைக் கல்லுக்கு உட்பட்டபிரதேசத்தில்அமைத்துவருகின்றனர்.

வற்றாப்பளை அம்மன் கோவில் பொங்கல் உற்சவத்தின்போது, சிலாவத்தைக் கடலில் தீர்த்தம் எடுத்தே பொங்கல் உற்சவம் இடம்பெறுவது வழக்கம். அவ்வாறு எடுத்துக் கொண்டு கடலில் தீர்த்தம் எடுத்துத் திரும்பி வரும் போது மூன்றாம் கட்டைச் சந்தியில்உள்ள புனித பன்னிச்சை மரத்தின் கீழ் தீர்த்தக் குடங்களை இறக்கி வைத்து இளைப்பாறிய பின்னரே ஆலயத்துக்குக் கொண்டு செல்வது வழக்கமாக மேற்கொள்ளப்படுமொன்றாகும்.

அவ்வாறு இளைப்பாறும் புனிதமான பன்னிச்சை மரத்தின் கிளைகள் கடந்த வருடம் அருகே உள்ள வயல் காணியைக் கொள்வனவு செய்த ஒருவரால் வெட்டப்பட்டன.

அதையடுத்து வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகத்தினர் மரத்தைச் சுற்றி சிமெந்தினாலான இளைப்பாறும் கட்டைக் கட்டுவதற்கு முன்வந்தனர். அதற்கு எதிராக குறித்த நபரான காணி உரிமையாளரால் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் வழக்கு தொடுக்கப்பட்டுவிசாரணைகள் நடைபெற்று வந்தன.

விசாரணைகளின் பின்னர் கடந்த மாதம் 31ஆம் திகதி ஆலய நிர்வாகத்தினர் மரத்தைச்சுற்றி சிமெந்துக் கட்டைக் கட்டுவதற்கு முறைப்படி வீதி அபிவிருத்தித் திணைக்களமற்றும்பிரதேச சபையின் அனுமதிகள் பெறப்பட்டுள்ளன எனவும், அதனடிப்படையில் இதனைத் தடுத்து நிறுத்த முடியாது எனவும் வழக்காளி இது குறித்து மேன் முறையீடு செய்ய விரும்பின் வவுனியாமேல் நீதிமன்றில் தாக்கல் செய்யலாம் எனவும் மாவட்ட நீதிமன்றத்தால் தீர்ப்புவழங்கப்பட்டது.

இதனை அடுத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவோடு இரவாக காணி உரிமையாளர் புனிதமான பன்னிச்சை மரத்தோரம் புதிதாக ஒரு வேலியை அமைத்து தன்னுடைய பழைய வேலியை அடையாளம் தெரியாதவாறு மறைத்திருந்தார்.

அவருடைய இந்தச் செயலை அடுத்து ஆலய நிர்வாகத்தினர் முல்லைத்தீவு அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் மற்றும் முல்லைத்தீவு பொலிஸ் உயர் அதிகாரிகளின் கவனத்துக்கு அதனைக் கொண்டு வந்தனர்.

இதன் பின்னர் அப்பகுதியில் புனித பன்னிச்சை மரம் தொடர்பான பேச்சு இடம்பெற்றது. அத்தோடு ஆலய நிர்வாகத்தினர் மீண்டும் சீமெந்துக் கட்டை அமைப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டனர். அவ்வேளை குறுக்கிட்ட பொலிஸார் முரண்பாடான நிலையில்கட்டுஅமைக்கப் படக்கூடாது என்று தெரிவித்து தடை விதித்தனர். நிலைமைகளை விளங்கிக் கொண்டு விடயத்தை ஆராய்ந்த மாவட்ட அரச அதிபர், குறித்த நபர் வேலி போட்ட பிரதேசத்துக்குள் இளைப்பாறும் கட்டை அமைக்க வேண்டாம் என்றும், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தலையீட்டால் குறித்த வேலி பிடுங்கப்பட்டதன் பின்னர் கட்டை அமைக்கலாம். தற்போது மிகுதிப் பகுதியில் மாத்திரம் கட்டைஅமைக்குமாறும் தெரிவித்தார்.

இதனை அடுத்து வற்றாப்பளை ஆலைய நிர்வாகத்தினர் புனித பன்னிச்சை மரத்தின் பாதிப் பகுதிக்கு இளைப்பாறும்கட்டுஅமைக்க அத்திபாரம் இட்டனர். இந்த நிலையில் நேற்று முன்தினம் திடீர் என குறித்தநபர் தனது முடிவை மாற்றி புனித பன்னிச்சை மரத்தோரம் அமைக்கப்பட்ட வேலியை அகற்றி, மீண்டும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் எல்லைக் கல்லுக்கு உட்பட்ட பிரதேசத்தில் வேலி அமைத்து வருகின்றார்.

இதனைஅடுத்துபிரச்சினை சுமுகமாகத் தீர்க்கப்பட்டது என்று தெரிவித்த வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகத்தினர் இரு சமுகத்தினரிடையேயும் நிலவிவந்த புரிந்துணர்வுடன் கூடிய சுமுகமான உறவு நிலை தொடர்வதற்கு வாய்ப்புஏற்பட்டுள்ளது என்றும் தெரிவித்தனர். (ற-ஐ-21,102)

### கவிதைப் பட்டறை

யாழ்ப்பாணம், ஏப்.8

ஏழாலை மாதர் அபிவிருத்திச் சங்கமும், தெல்லிப்பழை கலை இலக்கியக்களமும் இணைந்து நடத்தும் கவிதைப் பட்டறை நாளை சனிக்கிழமையும், நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் காலை 9 மணியிலிருந்துமாலை 3மணி வரை மல்லாகம் மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது என்று மாதர் அபிவிருத்திச் சங்கத்தினரும், கலை இலக்கியக் களத்தினரும் தெரிவித்துள்ளனர். (ற-ஐ-ரி)

### விண்ணப்பம் கோரல்

இலங்கைத் திறந்த பல் கலைக்கழகத்தின் சமூக விஞ்ஞானத்துறையால், சமூகவியல் சான்றிதழ் கற்கைநெறி, சமூக விஞ்ஞானத்தில் கலைமாணி, இளைஞர் அபிவிருத்தியில் டிப்ளோமா போன்ற கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன.


இந்தக் கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள் பிறவுண் வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள யாழ். பிராந்திய நிலையத்திலும், 155ஆம் மைல் கல், கண்டி வீதி, கிளிநொச்சியில் அமைந்துள்ள கற்கை நிலையத்திலும் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்று யாழ். பிராந்திய உதவிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ற-ஐ-ரி)

# பேஸ்புக் மூலமான காதலால் நகைகளை இழந்தார் யுவதி

## நான்கரை லட்சம் ரூபா நகைகளுடன் தலைமறைவான பொறியியலாளர் கைது

யாழ்ப்பாணம், ஏப்.8

முகநூல் மூலம் அறிமுகமாகி, பெண்ணொருவரைக் காதலித்து திருமணம் புரிவதாகக் கூறி ஏமாற்றி, அவரிடமிருந்து 4 லட்சத்து 65 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளையும், பணத்தையும் ஏமாற்றிப் பெற்ற குற்றச்சாட்டில் குடியியல் (சிவில்) பொறியியலாளர் ஒருவர் நேற்று யாழ்ப்பாணப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.



சவுதி அரேபியாவில் பணிப்பெண்ணாகக் கடமையாற்றிய வவுனியாவைச் சேர்ந்த இளம் பெண் ஒருவருடன், 2012 ஆம் ஆண்டு முகநூல் மூலம் அறிமுகமாகிய நபரொருவர் தான் கனடாவில் வசிக்கின்றேன் என்றும், தான் திருமணமாகாதவர் என்றும் கூறியுள்ளார்.

பின்னர் 2015 ஆம் ஆண்டு காலப் பகுதியில் குறித்த பெண் வவுனியாவுக்கு திரும்பிவந்த பின்னர் தான் விரைவில் இலங்கைக்கு வரவுள்ளேன் என்றும், அந்தப் பெண்ணைத் திருமணம் புரிய விரும்புகின்றேன் என்றும் தெரிவித் துள்ளார்.

அதை நம்பிய அந்தப் பெண்ணும் அவருடன் தொடர்ந்தும் முகநூல் மூலமாக தொடர்பு கொண்டு வந்துள்ளார். இந்த வருடம் ஜனவரி, பெப்ரவரி மாத காலப்பகுதியில் பெண்ணுடன் தொடர்பு கொண்ட குறித்த இளைஞன், தனக்கு முல்லைத்தீவு பகுதியிலிருந்து பெருமளவு தங்கம் கிடைத்துள்ளது என்றும், அதனைக் கடையில் விற்பனை செய்வதற்குப் பற்றுச்சீட்டுக்களுடன் உள்ள நகைகள் தேவையாகவுள்ளன என்றும், எனவே அவரிடம் நகைகளை எடுத்துக் கொண்டு பஸ்ஸில் யாழ்ப்பாணத்துக்கு வருமாறும் கூறியுள்ளார்.

குறித்த பெண்ணும் அவ்வாறு வரும் போது கச்சேரிக்கு அண்மையில் அவரை இறங்குமாறு கூறி உந்துருளியில் ஏற்றிச் சென்றுள்ளார். இடையில் கோயிலொன்றைக் கண்டு அதனை வணங்கி விட்டுச் செல்வோம் எனக் கூறி, பெண் உள்ளே சென்றவுடன் அவரிடமிருந்த தங்க நகைகள் அடங்கிய பையுடன் அந்த இளைஞன் மாயமாகி விட்டார்.

சம்பவம் தொடர்பாக குறித்தபெண்ணால் யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது. அதனடிப்படையில் விசாரணைகளை மேற்கொண்டிருந்த யாழ்ப்பாணப் பொலிஸார், நேற்று முன்தினம் குறித்த சந்தேக நபரை வவுனியாவில் வைத்துக் கைது செய்து நேற்று யாழ்.நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தினர்.

சந்தேக நபரை இந்த மாதம் 19ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு [illegible] உத்தரவிட்டார். சந்தேகநபரிடமிருந்து சில நகைகளும் பணமும் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-ஐ-103)

### சைக்கிளைத் திருடியவர் கட்டி வைத்துக் கவனிப்பு

உரும்பிராயில்பெண்ணொருவரது சைக்கிளைத் திருடிக் கொண்டு ஓடியவர் என்று கூறப்படும் நபரை, வீதியால் சென்றோர் பிடித்து மின் கம்பத்தில் கட்டி வைத்துத் தாக்கிய பின்னர் பொலிஸாரிடம்ஒப்படைத்துள்ளனர்.

உரும்பிராய்ப் பகுதியில் நேற்று மாலையில் பெண் ஒருவர் கடை ஒன்றுக்கு வந்துள்ளார். அவ்வாறு வந்தவர், தான் பயணித்த சைக்கிளைக் கடையின் அருகே நிறுத்தி விட்டுச் சென்றுள்ளார். இதனைஅவதானித்த ஒருவர் சைக்கிளைத் திருடிக் கொண்டு ஓடியுள்ளார்.

தனது சைக்கிளை, இனம் தெரியாத ஒருவர் எடுத்துச் செல்வதனைஅவதானித்த பெண், அவலக் குரல்எழுப்பியுள்ளார். இதனால் சைக்கிளைத் திருடிச் கொண்டு ஓடியவரை வீதியால் சென்றவர்கள் மடக்கிப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். (ற-ஐ-4,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரட்டை வேடம் போடாமல் அரசு மீனவருக்குத் தீர்வு வழங்க வேண்டும்

## சாள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. வலியுறுத்து

மன்னார், ஏப்.8

அரசு இரட்டை வேடம் போடாமல், கடந்த காலங்களில் பல்வேறு வகையிலும் பாதிக்கப்பட்டு, தமது வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்ப முயற்சிகளை மேற்கொள்ளும் மீனவர்களுக்கு உரிய தீர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் - இவ்வாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

மத்திய கடற்றொழில் அமைச்சரால் முல்லைத்தீவு மீனவர்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாதமை வேதனை அளிக்கின்றது என்றும்-அவர் தெரிவித்தார்.

அண்மையில் முல்லைத்தீவுக்கு வருகை தந்த கடற்றொழில் அமைச்சர், முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்களுடைய வாழ்வாதாரத்தைப் பாதிக்கும் வகையில் சட்ட விரோதமாக மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தெரிவித்த போதிலும், மீனவர்களுடைய வருகையும் சட்டவிரோத தொழில்களும் தொடர்ச்சியாக இடம்பெறுகின்றமை தொடர்பாக ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் குறிப்பிடப்பிட்டுள்ளதாவது:-

மூன்று தசாப்தங்களுக்கு மேலாக போரினால் பாதிக்கப்பட்டு,தற்பொழுது நடைபெற்றுவரும் நல்லாட்சி அரசின் நல்லிணக்க செயற்றிட்டத்துக்கு அமைவாக ஒரளவேனும் முல்லைத்தீவு மீனவர்கள் நிம்மதி அடைவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டாலும், அது நடைமுறையில் சாத்தியப்படாது எனத் தோன்றுகிறது.

முல்லைத்தீவு மாவட்டத்துக்கு வந்திருந்த கடற்றொழில் அமைச்சர், முல்லைத்தீவு மாவட்ச்செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பங்குபற்றிய போது, தென் பகுதி மீனவர்களின் அத்துமீறிய வருகையை தடைசெய்யுமாறும், தடைசெய்யப்பட்ட சிலிண்டர் கடற்றொழில் முறையை தடைசெய்ய வேண்டும் என்றும், ஒளி பாய்ச்சி கடற்றொழிலில் ஈடுபடு வதையும் தடை செய்ய வேண்டும் என்றும் கோரிக்கைகள் விடுக் கப்பட்டன.

கடற்றொழில் அமைச்சர் அதனைக் கவனத்தில் எடுத்து தென் பகுதி மீனவர்களின் வருகை நிறுத்தப்படும் என்றும், அதேபோன்று சிலிண்டர் கடற்றொழில் முறையை கரையிலிருந்து 12 கிலோ மீற்றருக்கு அப்பால் செய்ய முடியும் எனவும், ஒளி பாய்ச்சி கடற்றொழிலில் ஈடுபடுவது முற்றுமுழுவதுமாகத் தடை செய்யப்படும் என்றும் உறுதியளித்திருந்தார். முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் பிரதி பணிப்பாளரிடம் அதற்கான உத்தரவை வழங்கியிருந்தார்.

இது இவ்வாறிருக்க கடந்த இரண்டு நாள்களாக மாத்தளை கடற்பகுதியில் மீனவர்கள் இரண்டு கிலோ மீற்றர் கடற்பகுதியில் ஒளி பாய்ச்சி சிலிண்டர் மூலம் கடற் றொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

இது தொடர்பாக முல்லைத்தீவு மீனவர்கள் குறித்த அத்துமீறிய கடற்றொழில் நடவடிக்கையை நிறுத்தக் கோரியபோதும்,அதனை நிறுத்த முடியாதுள்ளது என்று மீனவர்கள் என்னிடம் முறையிட்டுள்ளனர்.

அது தொடர்பாக பொலிஸாரிடம் முறையிட்டால் தென்பகுதி மீனவர்கள் கடற்றொழிலில் ஈடுபடமுடியும் எனத் தெரிவிக்கின்றனர் என்று பாதிக் கப்பட்டுள்ள மீனவர்கள் கூறுகின்றனர்.

மத்திய கடற்றொழில் அமைச்சரின் வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை. இது வேதனையளிக்கின்றது. அரசு இரட்டை வேடம் போடாமல் கடந்த காலங்களில் பல்வேறு வகையிலும் பாதிக்கப்பட்டு தமது வாழ்வாதாரத்தை கட்டியெழுப்ப முயற்சிகளை மேற்கொள்ளும் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மீனவர்கள் மீது நல்லிணக்க அடிப்படை யில் அவர்களின் வாழ்வாதாரத்தை பாதிக்காத வகையில் செயற்பாடுகளை மேற்கொண்டு உதவ வேண்டும் - என்றுள்ளது. (ற-ஜ-21)



## புது வருட கலாசார நிகழ்வில் இரு மொழிகளில் தேசிய கீதம்

வவுனியா, ஏப்.8

வவுனியா வடக்கு, தெற்கு கல்வி வலயங்கள் இணைந்து ஏற்பாடு செய்த புதுவருட கலாசார நிகழ்வில் இரு மொழிகளிலும் தேசிய கீதம் பாடப்பட்டுள்ளது.

தமிழ், சிங்கள புதுவருட பிறப்பை முன்னிட்டு நேற்றுக்காலை வவுனியா சைவப் பிரகாச மகளிர் கல்லூரியில் இடம்பெற்ற கலாசார நிகழ்வின் போதே இவ்வாறு இரு மொழிகளிலும் தேசிய கீதம் பாடப்பட்டுள்ளது.

நிகழ்வில் வவுனியா தெற்கு கல்வி வலயப் பணிப்பாளர் திருமதி அன்ரன் சோமராஜா, மேலதிக மாவட்டச் செயலாளர், சர்வ மத குருமார் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், கல்வியியலாளர்கள் மற்றும் வடக்கு, தெற்கு கல்வி வலயங்களைச் சேர்ந்த பாடசாலைகளின் 500க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர்.

அத்துடன் வவுனியா மாவட்டத்தில் தமிழ்-சிங்கள மக்களின் இன நல்லுறவை சித்திரிக்கும் கலை,கலாசார பாரம்பரிய விளையாட்டுக்கள், முட்டி உடைத்தல், கயிறு இழுத்தல் என மாலைவரை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ற-ஜ-402,21)

## இன்றும் நாளையும் மின் தடை

யாழ்ப்பாணம், ஏப். 8

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று வெள்ளிக்கிழமையும் நாளை சனிக்கிழமையும் காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை பின்வரும் பகுதிகளில் மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என்று மின்சார சபையினர் அறிவித்துள்ளனர்.

இன்று, யாழ். பிரதேசத்தில் அல்லைப்பிட்டி, மண்கும்பான், மண்டைதீவு, சோளாவத்தை, வங்களாவடி, மண்கும்பான் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை, மண்கும்பான்கடற்படைமுகாம்,மண்டைதீவு கடற்படை முகாம் ஆகிய இடங்களிலும்-கிளிநொச்சிப் பிரதேசத்தில் கோணாவில், யூனியன் குளம், அக்கராயன், ஸ்கந்தபுரம்ஆகிய இடங்களிலும், வவுனியாப் பிரதேசத்தில் நேரியகுளத்திலிருந்து செட்டிகுளம் வைத்திய சாலை, பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், வி.சி.கே. ஆலை ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும்.

நாளை சனிக்கிழமை யாழ். பிரதேசத்தில் அம்பலவாணர் வீதி, உடுவில், ஆர்க்லேன், ஸ்ரீலங்கா பாடசாலை வீதி, இராமலிங்கம் வீதி, சோமணான் தோட்டம், உடுப்பிட்டி வி.சி., நாச்சிமார் கோயிலடி, கொற்றாவத்தை, பொலிகண்டி, ஆலடி, நெடியகாடு, வெள்ளறோட், உடுப்பிட்டிச் சந்தி, உடுப்பிட்டி நாவலடி, வன்னிச்சி அம்மன் கோயிலடி, பாரதி சனசமூக நிலையத்தடி, பழைய பொலிஸ் நிலையத்தடி, வல்வெட்டித்துறைச் சந்தி, உடுப்பிட்டி வாசிக சாலைச் சந்தி, பொக்கணைச் சந்தி, கெருடாவில், தொண்டமானாறு, மயிலியதனை, சிதம்பராக் கல்லூரி ஆகிய இடங்களிலும் மின் தடைப்படும்.

அன்றைய தினம் கிளிநொச்சிப் பிரதேசத்தில் டொன்பொஸ்கோ, வன்னிவிளாங்குளம், ஒட்டறுத்தகுளம், வடகாடு, பாலிநகர், அம்பாள்புரம், கொல்லவிளாங்குளம், ஐம்பது வீட்டுத்திட்டம், பாண்டியன்குளம், நட்டாங்கண்டல், கரும்புள்ளியான், தென்னியங்குளம், உயிலங்குளம், பாரதி நகர், மாங்காக்குடியிருப்பு, ஆலங்குளம், கல்விளான், இரணைமடு, திருவையாறு, கிருஷ்ணபுரம், அம்பாள்குளம், பாரதிபுரம், மலையாளபுரம், விநாயகபுரம், விவேகானந்தநகர், அறிவியல் நகர், மாஸ் இன்ரிமேற், மாஸ் அக்ரிவ், பொறியியல் பீடம், விவசாய பீடம், பார்ம் கவுஸ், நோர்த் காகிள்ஸ் அகிரி பூட்ஸ், கிளிநொச்சி, இலங்கை தொலைத் தொடர்பு நிலையம், கிளிநொச்சி வைத்தியசாலை, விக்கிரமரட்ண பிறைவேற் லிமிட்டெட், 66 ஆம் இராணுவ படைமுகாம், பிள்ளையார் அரிசி ஆலை, துணுக்காய் பலநோக்கு கூட்டுறவுச் சங்க அரிசி ஆலை, ஆகிய பிரதேசங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என வடமாகாண மின் வழங்கல் கட்டுப்பாட்டு நிலைய மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ற-ஜ-ரி)

## திருட்டுக் குற்றச்சாட்டு; சந்தேகநபருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஏப்.8

இளவாலை, வடலியடைப்பில் கடை உடைத்து அலைபேசி மீள் நிரப்பு அட்டைகள், சிகரெட் பெட்டிகள், அலைபேசி உட்பட 16 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான பொருள்களைத் திருடிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சந்தேக நபரை எதிர்வரும் 18ஆம் திகதி வரை விளக்கமறியலில்வைக்குமாறு மல்லாகம் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பள்ளச்சுட்டி பண்ணாலைப்பகுதியைச் சேர்ந்த 22 வயதுடைய சந்தேக நபரே இவ்வாறு திருட்டுச் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சந்தேகநபர் பொலிஸார் தன்னைக் கைது செய்ய வருகிறார்கள் என அறிந்து கடந்த வாரம் ஒரு வகை நச்சு விதை உட்கொண்டு உடல் நலப் பாதிப்பால் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்திருந்தார். சிகிச்சை முடிந்து வந்தபோது குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

(ற-ஜ-4,107

# ஆடம்பர வீடுகளை விடுத்து கல் வீடுகள் அமைத்துத் தருக

## ஒட்டுசுட்டான் மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, ஏப்.8

இயற்கை இடர்களால் அதிகம் பாதிக்கப்படும் வன்னிப் பிரதேசங்களுக்கு ஆடம்பர, அதிநவீன பொருத்து வீடுகள் வேண்டாம். இடரின்போது பாதுகாப்பாக வாழக்கூடிய கல்வீடுகளே வேண்டும் என ஒட்டுசுட்டான் பிரதேசத்தைச் சேர்ந்த பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள் ளனர்.

மீள் குடியேற்ற அமைச்சால் 65 ஆயிரம் பொருத்து வீட்டுத் திட்டங்கள் வழங்கப்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்டு,அதற்கான விண்ணப்பப் படிவங்களும் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. ஆனால் குறித்த பொருத்து வீடுகள் எமது மக்களுடைய வாழ்க்கைக்கு உகந்தவை அல்ல எனவும், அவர்களுக்கு கல்வீடுகளே அமைத்துக் கொடுக்கப்பட வேண்டும் என்றும்-வடக்கு மாகாண முதலமைச்சர் உட்பட வடக்கைச் சேர்ந்த அரசியல் தலைவர்களால் மீள் குடியேற்ற அமைச்சுக்குப் பல முறை தெரிவிக்கப்பட்டிருந்தது.

வன்னி மாவட்டம் கடந்த காலங்களில் ஏற்பட்ட இயற்கை இடர்களால் அதிகம் பாதிக்கப்பட்டது. பொது மக்களால் சாதாரணமாகக் கட்டப்பட்ட தற்காலிக வீடுகள் அதிகமாகச் சேதமாகியுள்ளன.

தற்போது மீள் குடியேற்ற அமைச்சால் அமைத்து வழங்கவுள்ளதாகக் கூறப்படும் பொருத்து வீடு களும் இயற்கை இடர் களின் போது தாக்கு பிடிக்குமா என்பது தெரியவில்லை. எனவே எங்களுக்கு பாதுகாப்பான கல் வீடுகளை அமைத்து தாருங் கள் என ஒட்டுசுட்டான் பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் கோரிக்கை விடுத்துள் ளனர்.

பொருத்து வீடென்பது எமக்கு பொருந்தாத ஒன்றாகும். 21 லட்சம் ரூபா செலவில் அமைக்க வேண்டிய வீட்டை நாம் பொருத்து வீடாக அமைப்பதிலும் பார்க்க பத்து லட்சம் ரூபா செலவில் பாதுகாப்பான வீட்டை அமைக்க முடியும். அத்துடன் இந்தச் செலவில் இரு குடும்பங்களுக்கு வீடுகளை அமைக்க முடியும். இங்கு வாழும் மக்கள் நவீன வசதியை விரும்புபவர்கள் அல்ல. 100 வீதமானோ ரும் முழுநேர விவசாயிகள்.

இவர்கள் இயற்கை அழிவுகளாலும் திருடர்களாலும் எதிர்கொள்ளும் சவால்களை முறியடித்து நிம்மதியாகவும் , சுதந்திரமாகவும்,பாதுகாப்பாகவும் வாழ்வதற்கு அடக்கமான, ஆடம்பரமற்ற, அதிகாத்திரமான வீடொன்றை அமைக்க,பணத்தை வழங்குங்கள். - என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (ற-ஜ-500)

## புத்தாண்டு விழாப் போட்டிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

கொழும்புத்துறை, ஏப்.8

கொட்டடி கிராம அபிவிருத்திச் சங்கமும், சனசமூக நிலையமும் இணைந்து நடத்தும் புத்தாண்டு விழாவில் மாவட்ட மட்டத்திலான பொது அறிவுப் போட்டி, மரதன் ஓட்டப் போட்டி மற்றும் மாணவர் கௌரவிப்பு என்பவை இடம் பெறவுள்ளன என்று நிலையத் தலைவர் தெரிவித்துள்ளார்.

ஜே/80 தொடக்கம் ஜே/86 வரையிலான கிராம அலுவலர்கள் பிரிவுகளுக்குட்பட்ட புலமைப்பரிசில், க.பொ.த.(சா.த) -க.பொ.த (உ.த) பரீட்சைகளில் சித்தியடைந்த மாணவர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

விண்ணப்பப் படிவங்களை நிலையத்திலும், சத்திரச்சந்தி ஜெகதா மொபைல் நிலையத்திலும் பெற்று,பங்குகொள்ள முடியும். நிகழ்வில் சமூக மட்டத்தில் சேவை ஆற்றி சிறப்புப் பெற்றவர்களுக்கான சமூக திலகம் விருதுகளும் வழங்கப்பட வுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஜ-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோதமான துப்பாக்கிக்கு அனுமதி பாதுகாப்பு அமைச்சு வழங்கியது சரியா?

## ஆலோசனை பெற்று நீதிமன்றத்துக்கு அறிவிக்குமாறு அரச சட்டத்தரணிக்கு யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி பணிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.8
ஈ.பி.டி.பி உறுப்பினர் என்று கூறப்படும் ஒருவரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட சட்டவிரோதமான கைத்துப்பாக்கிக்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியமை சட்ட ரீதியானதா என்பது குறித்து ஆலோசனை பெற்று நீதிமன்றத்துக்கு அறிவிக்குமாறு அரச சட்டத்தரணிக்கு யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் பணித்துள்ளார்.

அரசின் அனுமதிப்பத்திரம் இல்லாமல், சட்டவிரோதமாக கைத்துப்பாக்கி ஒன்றை வைத்திருந்தார் என்பதற்காக ஈபிடிபி கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் என தெரிவிக்கப்படும் விமலதாஸுக்கு எதிராக சட்டமா அதிபரால் யாழ்.மேல் நீதிமன்றத்தில் துப்பாக்கிகள் சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கில் சம்பந்தப்பட்ட கைத்துப்பாக்கியை அதே கட்சியில் முன்னர் உயர் நிலை உறுப்பினராக இருந்த கமலேந்திரன் (கமல்) கொழும்பு இரத்மலானை விமான நிலையத்தில் இருந்து விமான மூலமாக யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு வருவதற்கு அந்தத் துப்பாக்கியின் இலக்கத்தைக் குறிப்பிட்டு பாதுகாப்பு அமைச்சால் அனுமதியளிக்கப்பட்ட கடிதம் ஒன்று சான்றுப் பொருளாக நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

அதேநேரம் குறித்த துப்பாக்கியின் இலக்கத்தைக் குறிப்பிட்டு அந்தத் துப்பாக்கி இலங்கை அரசுக்கு சொந்தமானதல்ல. அது அரசால் வழங்கப்படவில்லை என்று தெரிவித்து பாதுகாப்பு அமைச்சால் வழங்கப்பட்ட கடிதம் ஒன்றும் இந்த வழக்கில் இந்தத் துப்பாக்கி சம்பந்தமான ஆவணமாக நீதிமன்றத்தில் இலக்கமிடப்பட்டிருக்கின்றது.

இந்த நிலையிலேயே சட்டவிரோதமான துப்பாக்கி எனக் குறிப்பிட்டு, அதனை வைத்திருந்த குற்றத்துக்காகத் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கில் சட்டவிரோதமான துப்பாக்கிக்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்க முடியுமா? அது சட்டரீதியானதா? என்பதை சட்டமா அதிபரிடமிருந்து ஆலோசனை பெற்று நீதிமன்றத்துக்கு அறிவிக்குமாறு நீதிமன்றம் அரச சட்டத்தரணிக்கு பணித்துள்ளது.

2013 ஆம் ஆண்டு ஸ்ரான்லி வீதியில் உணவு விடுதியொன்றில் சந்தேகத்துக்கிடமான முறையில் ஒருவரின் நடமாட்டம் இருப்பதாக இரகசியத் தகவல் கிடைத்தது. அதனையடுத்துப் பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவின் 5 பேர் கொண்ட குழுவாக சம்பவ இடத்துக்குச் சென்றோம். எங்களில் 3 பேர் உணவு விடுதியின் உள்ளே சென்று உளவு பார்த்தனர். அந்த நேரம் நானும் மற்றுமொருவரும் உணவு விடுதியின் வெளியில் நின்று நிலைமைகளை அவதானித்தோம்.

விமலதாஸ் வெளியில் தெரியத்தக்க வகையில் கைத்துப்பாக்கியொன்றை இடுப்பில் சொருகியிருந்த நிலையில் உணவு விடுதியின் உள்ளே காணப்பட்டார்.

உணவு விடுதியின் உள்ளே உளவு பார்த்த பொலிஸார் இருவர், எதிரியை நெருங்கி அவருடைய இரண்டு கைகளையும் பிடித்து அவரைத் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தனர். பின்னர் துப்பாக்கி மீட்கப்பட்டது என்று பயங்கரவாதப் பிரிவு அதிகாரி ஒருவரால் சாட்சியமளிக்கப்பட்டது.

துப்பாக்கியைக் கைப்பற்றியதும் அவரிடம் விசாரணை நடத்தியபோது, எதிரி தான் ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் எனத் தெரிவித்தார். ஆயினும் அதனை உறுதிப்படுத்துவதற்கு அவரிடம் எதுவிதமான அடையாள அட்டையோ, ஆவணமோ இருக்கவில்லை. எனவே, உடனடியாக அவரைக் கைது செய்து யாழ்ப்பாணம் பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவுக்குக் கொண்டு சென்று துப்பாக்கிகள் சட்டத்தின் கீழ் அவரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியபோது அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

துப்பாக்கியை வைத்திருக்கப் பாதுகாப்பு அமைச்சால் அனுமதியளித்திருந்த அந்தக் கடிதத்தின் பிரதியொன்று ஈபிடிபி கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் அனுப்பி வைக்கப்படுகின்றது என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

கைப்பற்றப்பட்ட துப்பாக்கியின் இலக்கத்தைக் குறிப்பிட்டு, இந்தத் துப்பாக்கி, இலங்கை அரச ஆயுதக் கிடங்கு பட்டியலில் இல்லாத துப்பாக்கி எனவும், இது அரசுக்குச் சொந்தமானதல்ல எனவும், அரசால் இந்தத் துப்பாக்கி வழங்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப் பட்டிருப்பதாகக் கூறியதையடுத்து, அந்தக் கடிதம் ஓர் ஆவணச் சான்றாக நீதிமன்றத்தில் இலக்கமிடப்பட்டது.

2009 ஆம் ஆண்டு ஜூன் மாதம் கந்தசாமி கமலேந்திரன் இந்தத் துப்பாக்கியை அதற்குரிய 50 சன்னங்களுடன் இரத்மலானையில் இருந்து பலாலிக்குக் கொண்டு செல்வதற்கு பாதுகாப்பு அமைச்சு ஏன் அனுமதி வழங்கியது என்பது பற்றி பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளிடம் விசாரணை நடத்தப்படவில்லை. இந்த முதலாவது கடிதத்தின் பிரதி ஈ.பி.டி.பி. கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவுக்கு அனுப்பப்பட்டுள்ளது என்று அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், இது குறித்து அவரிடமும் விசாரணை நடத்தப்படவில்லை.

அதேபோன்று அது அரசுக்கு சொந்தமான துப்பாக்கியல்ல என்று 2013 ஆம் ஆண்டு அதே பாதுகாப்பு அமைச்சு கடிதம் மூலம் அறிவித்துள்ளமை சம்பந்தமாகவும் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளிடம் விசாரணை நடத்தப்படவில்லை. ஆகவே, இந்தக் கடிதங்கள் தொடர்பாக சட்டமா அதிபருடன் ஆலோசனை நடத்தி இந்த வழக்குத் தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய மேல் நடவடிக்கை குறித்து நீதிமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்று அரச சட்டத்தரணிக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் பணித்துள்ளார். இந்த வழக்கு மே மாதத்துக்கு ஒத்தி வைக் கப்பட்டுள்ளது. (ற-ஜ-4)



யாழ்ப்பாணம் சாவகச்சேரியைச் சேர்ந்த 73 வயதான வயோதிபரொருவர் தனது மோட்டார் சைக்கிளில் மாற்றங்களைச் செய்து அழகூட்டியுள்ளார். அதனை இளைஞர்கள் முதல், முதியவர்கள் வரை வியப்புடன் பார்வையிட்டு வருகின்றனர் (ற-ஜ.101)

## கிராமத்துக்கு ஒரு மில்லியன் திட்டங்களைச் சமர்ப்பிக்கலாம்

### தென்மராட்சி பிரதேச செயலர் தெரிவிப்பு

சாவகச்சேரி,ஏப்.8
2016 ஆம் ஆண்டுக்கான கிராமத்துக்கு ஒரு மில்லியன் ரூபா வேலைத்திட்டத்துக்கு ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் உள்ள கிராம சமூக மட்டக் குழுக்கள் முன்னுரிமை அடிப்படையில் வேலைத் திட்டத்தைத் தெரிவு செய்து எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும் என தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் அறிவித்துள்ளார்.

மக்களால் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்படும் வேலைத் திட்டங்கள் பத்து லட்சம் ரூபா செலவில் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சால் கிராமிய கட்டமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ளன.

வீதிகள், குளங்கள் புனரமைப்பு, உட்கட்டுமானம், சிறிய அளவிலான மின்சார வேலைத் திட்டம், பாலங்கள் உட்பட கிராமத்தில் அவசியம் என மக்களால் முன்வைக்கப்படும் வேலைத்திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்குமாறும் அறிவிக்கப் பட் டுள்ளது.

இதேவேளை ஒரு கிராமத்துக்கு ஒரு மில்லியன் ரூபா வேலைத்திட்டத்தை ஐந்து கிராமங்கள்வரை ஒன்றிணைத்து ஒரு வேலைத்திட்டத்தை மேற்கொள்ள முடியும் என்றும் ஒரு கிராமத்தில் ஐந்து திட்டங்கள்வரை முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்படலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் பிரதேசத்தில் உள்ள 60 கிராம அலுவலர் பிரிவுகளில் கிராம சமூக மட்ட அமைப்புக்களால் தெரிவு செய்யப்பட்ட 79 வேலைத் திட்டங்கள் முன்வைக்கப்பட்டு, அனைத்து வேலைத்திட்டங்களும் குறித்த காலப் பகுதிக்குள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. (ற-ஜ-9)

## இன்னிசை விருந்து

யாழ்ப்பாணம், ஏப்.8
யாழ்ப்பாணம் விழிப் புலனற்றோர் சங்கத்தின் 40 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, முதன் முறையாக விழிப் புலனற்றோர் சங்கம் வழங்கும் இன்னிசை விருந்து, நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு மன்னார் நகர சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஆசிரியை செல்வி செபமாலை பெனடிக்ரா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக வடமாகாண போக்குவரத்து மற்றும் மீன்பிடித் துறை அமைச்சர் பா.டெனீஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார். (ற-ஜ-106)

## அரச ஊழியர்களுக்கு சிங்கள வகுப்புகள்

சாவகச்சேரி,ஏப்.8
சிங்கள மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், வடமாகாண முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சி அலகுடன் இணைந்து, வடமாகாண அரச திணைக்கள அலுவலகங்களில் கடமையாற்றும் அலுவலர்களுக்கான , தொடர் சிங்கள மொழிப் பயிற்சிவகுப்புகளை மாகாணத்திலுள்ள ஐந்து மாவட்டங்களிலும் நடத்துவதற்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

இந்த வகுப்புக்களில் கலந்துகொள்ள விரும்பும் அலுவலர்களின் விவரங்களை எதிர்வரும் 11 ஆம் திகதிக்கு முன்னர் "பணிப்பாளர் முகாமைத்துவ பயிற்சி அலகு 68 குறோசெற் வீதி சுண்டுக்குளி யாழ்ப்பாணம்" என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு திணைக்களத் தலைவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஜ-9)

## வெட்டுக்கிளித் தாக்கத்தால் பாதிப்புற்ற விவசாயிகள் விவரம் சேகரிப்பு

மன்னார், ஏப்.8
வன்னி மாவட்டத்தில் "வெட்டுக்கிளி"த் தாக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகள் தொடர்பில் உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகளது விவசாய நிலங்களில் "வெட்டுக்கிளியின்" தாக்கம் அதிகரித்த நிலை காணப்பட்டமையால் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தனர். அவர்களது விவசாய நடவடிக்கைகளும் பாதிப்படைந்திருந்தன.

பாதிக்கப்பட்ட விவசாயிகள் இதுகுறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் கவனத்துக்குக் கொண்டு சென்றிருந்தனர். நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் விவசாய அமைச்சர் ஆகியோரின் கவனத்துக்கு விடயத்தைக் கொண்டு சென்றார்.

இந்த நிலையில் பாதிக்கப்பட்ட விவசாயிகள் தொடர்பான அறிக்கையை உடனடியாக சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி செயலகம், பிரதமர் மற் றும் விவ சாய அமைச்சர் ஆகியோர் வன்னி மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களுக்குப்பணித்துள்ளனர். பாதிக்கப்பட்ட விவசாயிகள் மற்றும் விவசாயிகளுக்குஏற்பட்டநட்டம்தொடர்பாகவே உடனடியாக அறிக்கை சமர்ப்பிக்க வேண்டு கோள் விடுக்கப் பட்டுள்ளது.

இதற்கு அமைவாக பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நட்ட ஈட்டை பெற்றுக்கொடுக்க முடியும் என நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார். (ற-ஜ-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 110 மில். டொலர் செலவில் அபிவிருத்தித் திட்டங்கள்

## இலங்கை முதலீடுகள் சபை ஒப்பந்தம்

கொழும்பு,ஏப்.8
ஐந்து சிறிய நீர்மின் உற்பத்தி நிலையங்களை நிறுவுவது உட்பட்ட 110 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக 16 ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன என்று இலங்கை முதலீடுகள் சபை தெரிவித்துள்ளது.

இந்தத் திட்டங்களின் கீழ் ஆயிரத்து 250 நேரடி வேலைவாய்புக்கள் கிட்டக்கூடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீர் மின் உற்பத்தித் திட்டம் 18 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதி கொண்டுள்ளதோடு, இரத்தினபுரி, ஹல்துமுல்ல, மாத்தளை மற்றும் ஹாலி எலை ஆகிய பிரதேசங்களில் இவை நிர்மாணிக்கப்படவுள்ளன.

இரண்டு ஹோட்டல்களை நிர்மாணிக்கும் ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்பட்டுள்ளதோடு அவற்றுள் 64 அறைகளுடனான ஒரு ஹோட்டல் பலல்ல, வெலிகமவிலும், 28 அறைகளுடனான மற்றொரு ஹோட்டல் பலட்டுபான பிரதேசத்திலும் நிர்மாணிக்கப்படவுள்ளன.

> நீர் மின் உற்பத்தி திட்டம் 18 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதி கொண்டுள்ளதோடு, இரத்தின புரி, ஹல்துமுல்ல, மாத்தளை மற்றும் ஹாலிலெ ஆகிய பிரதேசங்களில் இவை நிர்மாணிக்கப்படவுள்ளன.

14 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் தொடர்மாடி வீட்டுத்திட்டமொன்றும் கொழும்பில் மேற்கொள்ளப்படவுள்ளது.

263 வேலைவாய்ப்புக்களுடனான இரு ஆடைத் தொழிற்சாலைகளை யாழ்ப்பாணத்திலும், பண்டார வளையிலும் நிறுவுவதற்கும் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன. அவற்றுக்கு 6 மில்லியன் அமெரிக்க டொலர் செலவாகுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவற்றைவிட மீன் உணவு உற்பத்திச்சாலையொன்று மன்னாரிலும், மின்சார உபகரணங்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலையொன்று சீதுவையிலும், பலதரப்பட்ட உற்பத்திகளை மேற்கொள்ளும் தொழிற்சாலையொன்று கொட்டாவையிலும் நிறுவப்படவுள்ளதோடு, மாலபேயில் உயர்கல்வி நிறுவனமொன்றும், கண்டியில் உள்ள ஏற்றுமதிகள் வலயத்தினுள் மருந்து வகைகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றும் நிறுவப்படவுள்ளன.

'எக்கனொமி நெக்ஸ்ற்' இணையத்தளம் இந்தத் தகவல்களைத் தெரிவித்துள்ளது. (ற-ஐ-22)

## 15 வயது மாணவி பொலிஸில் 17 வயதுக் கணவருடன் சரண்

கொழும்பு, ஏப்.8
காணாமற் போயுள்ளாரென பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்த 15 வயது மாணவி, மூன்று மாதங்களுக்குப் பின்னர், தனது 17 வயதுக் கணவருடன் ஊவா பரணகம பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் ஊவா பரணகமையில் இடம்பெற்றுள்ளது.

பாடசாலை சென்ற, குறிப்பிட்ட மாணவி, வீடு திரும்பாததால் மாணவியின் பெற்றோர் ஊவா பரணகமைப் பொலிஸ் நிலையத்தில் கடந்த ஜனவரி மாதம் முறைப்பாடு செய்திருந்தனர்.

முறைப்பாட்டையடுத்து, பொலிஸார் தேடுதல்களை மேற்கொண்டிருந்த வேளையில், மூன்று மாதங்களுக்குப் பின்னர் காணாமற் போயிருந்தார் என்று குறிப்பிடப்பட்ட மாணவி, தனது கணவருடன் ஊவா பரணகம பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார்.

இருவரும் இள வயதுக்காரர்கள் என்பதால் அவர்கள் விசாரணையின் பின்னர் வெலி மடை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படுவர் என்று - பொலிஸார் தெரிவித் தனர்.

மாணவிக்கு 15 வயது, அவரது கணவனுக்கு 17 வயது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற-ஐ)

## மே தினத்தைத் தனித்து நடத்த கூட்டு எதிர்க்கட்சி தீர்மானம்

கொழும்பு, ஏப்.8
நாடாளுமன்றத்தில் எதிரணியாகச் செயற்படும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட கூட்டு எதிர்க்கட்சியானது, தனது மே தினப் பேரணி யைக் கூட்டு எதிர்க்கட்சி யின் மே தினம் எனத் தனியாக நடத்தவுள்ளது.

சுதந்திரக் கட்சியின் ஆலோசகரான முன்னாள் ஜனாதிபதியும், நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்சவின் இல்லத்தில் கடந்த 5 ஆம் திகதி இடம்பெற்ற கூட்டு எதிர்க்கட்சிக் குழுக்களின் கூட்டத்தில் வைத்து மேற்குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது நிறைவேற்று ஜனாதிபதி முறைமை மற்றும்தேர்தல்முறைமையை மாற்றுதல் உள்ளிட்ட அரசமைப்புத் திருத்தத்துக்கு ஒத்துழைப்பை வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ற-ஐ-22)

## பாதுகாப்பை குறைத்தமை வருத்தமளிக்கிறது

– மகிந்த

இராணுவத்தின் பாதுகாப்பு குறைக்கப்பட்டமைவருத்தமளிக்கிறது என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சதெரிவித்துள்ளார்.

தனக்குபாதுகாப்புவழங்குவதற்காக 100 இராணுவத்தினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். அதில் 50 இராணுவத்தினர் விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளனர். எதிர்வரும் வாரங்களில் மீதமுள்ள 50பேரும்விலக்கிக்கொள்ளப் படவுள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தனதுபாதுகாப்புக்குறித்து அரசு மெத்தனப்போக்கைப் பின்பற்றி வருகின்றமை வருத்தமளிக்கின்றது. அரசு இவ்வாறு பாதுகாப்பு விடயங்களில் திடீரெனத் தீர்மானம் எடுத்தமை ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-ஐ-4)

## ஈராக் கப்பல்களின் மூலம் போதைப் பொருள் கடத்தல்

### தடுக்க கப்பல்கள் வாங்கவுள்ளது கடற்படை

கொழும்பு, ஏப்.8
போதைப் பொருள் வர்த்தகர்களால் ஆப்கானிஸ்தானிலிருந்தும், பாகிஸ்தானிலிருந்தும் எடுத்து வரப்படும் போதைப் பொருள்கள் மக்ராஸ் கடற்பகுதியில் வைத்து ஈராக்கியக் கப்பல்களில் ஏற்றப்பட்டு இலங்கை மற்றும் ஆபிரிக்க நாடுகளுக்கு அனுப்பப்படுகின்றன என்று சர்வதேச ஆய்வுகளில் தெரிவிக்கப்படுகின்றது.

போதைப் பொருள்களுடன் வந்த ஈராக்கிய கப்பலொன்று முதல்தடவையாக சிக்கிக் கொண்டதையடுத்து, இலங்கையின் கடல் எல்லைக்கு அப்பால், சர்வதேச கடல் எல்லைக்கும் இடையிலான கடல் பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்கு விரைவில் ஆறு பெரிய கப்பல்களை வாங்குவதற்கு கடற்படை தீர்மானித்துள்ளது என்று - கடற்படைத் தளபதியான வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக கோவையில் உள்ள கடற்படைத் தயாரிப்புக்கள் நிறுவனமொன்றிலிருந்து இரு கப்பல்கள் அடுத்த ஆண்டின் முற்பகுதியிலும், மேலும் நான்கு கப்பல்களை அமெரிக்கா, ரஷ்யா மற்றும் சீனாவிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் - கடற்படைத்தளபதி தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள்களை நாட்டுக்குள் எடுத்து வரும் சாத்தியமுள்ள அனைத்து சர்வதேச கடல் மார்க்கங்களும் கடற் படை மற்றும் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவுகளால் கண்காணிக்கப் படுகின்றன என்று - பாதுகாப்புப் பிரிவுகளுக்குப் பொறுப்பான உயரதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

மாதத்துக்கு ஒரு தடவை ஜனாதிபதியின் தலைமையில் கூடும் போதைப்பொருள்களை முடக்கும் செயலணிப் படைக்கு, போதைப் பொருள்கள் செயற்பாடுகளில் ஈடுபடும் கடற்படை, விமானப்படையினரும், புலனாய்வுப் பிரிவுகளும் சமுகமளிப்பதோடு, அங்கு தீர்மானிக்கப் படும் தீர்மானங்கள் பலப்படுத்தப்படவுள்ளன என்று கடற்படைத் தளபதி தெரிவித்துள்ளார். (ற-ஐ-22)

## நுரைச்சோலை நிலையத்தில் விசேட செயற்பாட்டுப் பிரிவு

கொழும்பு, ஏப்.8
நுரைச்சோலை அனல் மின்நிலையத்தின் சூழலில் விசேட செயற்பாட்டுப் பிரிவொன்றை நிறுவுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று மின்சக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பிரதியமைச்சர் அஜித்.பீ.பெரேரா தெரிவித்துள்ளார்.

நுரைச்சோலை அனல் மின்நிலையத்தின் செயற்பாடுகளை செயற்றிறன் மிக்கதாக முன்னெடுத்துச் செல்லுதல் மற்றும் பொறுப்புக் கூறலில் அதிகாரிகள் தங்கியிருக்க வேண்டியுள் ளது.

கொழும்பிலுள்ள மின்சார சபையின் தலைமையகத்தில்இருந்துகொண்டு நுரைச்சோலை அனல் மின் நிலையத்தைப் பற்றிய பொறுப்புக் கூறல் மற்றும் தீர்வுகள், தீர்மானங்களை மேற்கொள்வது பொருத்தமானதல்ல என்பதால், இந்தப்பிரிவு ஆரம்பிக்கப் படவுள்ளதுஎன்றுஅமைச்சர் அஜித். பீ.பெரேரா தெரிவித்துள்ளார். (ற-ஐ-22)

## ஐ.தே.கவின் மே தினம் இம்முறை பொரளையில்

கொழும்பு,ஏப்.8
ஐக்கியதேசியக்கட்சியின் மே தினப் பேரணியை பொறளையில் உள்ள கம்பல் மைதானத்தில் மிகக் கோலாகலமாக நடத்துவதென ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் கூடிய செயற்பாட்டாளர்கள் சபையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

'ஐக்கிய தேசியுக் கட்சியால் மாத்திரமேநாட்டின்அபிவிருத்தியையும் நல்லாட்சியையும்நல்லிணக்கத்தையும் உறுதிப்படுத்திவிட முடியும்' எனும் தொனிப் பொருளின்கீழ்இந்தமுறை மேதினப்பேரணியைநடத்துவதற்கும் தீர்மானிக்கப் பட்டுள்ளது. (ற-ஐ-22)

## சு.கவின் மே தினப் பேரணியை காலியில் நடத்தத் தீர்மானம்

கொழும்பு,ஏப்.8
சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மேதினப் பேரணியை காலியில் நடத்துவதற்கு சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு தீர்மானித்துள் ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் கடந்த நான்காம் திகதி அந்தக் கட்சியின் மத்திய செயற்குழு கூடிய போதே இந்தத் தீர்மானம் எடுக்கப் பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியைப் பிரதிநிதித் துவப்படுத்தும் அனைத்துக் கட்சிகள் மற்றும் புதிதாக கூட்டணியுடன் இணைத்துக் கொள்வதற்கு எதிர்பார்க்கப் படும் அனைத்துக் கட்சிகளையும் இந்த மேதினப் பேரணியில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுப்பதற்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்துள் ளது.

தென்பகுதி மக்களின்வேண்டுகோளுக்கு அமைய மே தினப் பேர ணியை காலியில் நடத்து வதற்குத் தீர்மானிக் கப்பட் டுள்ளது என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள் ளார். (ற-ஐ-22)

## ஜப்பானின் ஜெய்க்கா நிறுவனம் இலங்கை மின் துறைக்கு உதவும்

கொழும்பு, ஏப்.8
ஜப்பானின் 'ஜெய்க்கா' நிறுவனம், இலங்கை மின்சாரத் துறையில் அடுத்து வரும் 25 ஆண்டுகள் பிரதானமான திட்டங்களை வழி நடத்தும் என்றும், அவற்றில் நவீனமான எரிசக்தி உற்பத்தி மூலோபாயங்கள் உள்ளடங்கவுள்ளன என்றும், அந்த நிறுவனத்தின் தலைமைப் பிரதிநிதியான தியோஷி அமாடா தெரிவித்துள்ளார்.

ஜப்பானிய சர்வதேச ஒத்துழைப்புக்கள் நிறுவனமான (ஜெய்க்கா) ஓராண்டு கால ஆய்வொன்றை மேற்கொண்டதன் பின்னர் - மின்சார உற்பத்தி, விநியோகம், விரிவாக்கம் ஆகிய துறைகள் குறித்துக் கவனம் செலுத்தும். அதன்போது சுற்றுப்புறச் சூழல் மற்றும் சமுதாயம் சார்ந்து துறைகள் குறித்தும் கவனம் செலுத்தப்படும்.

இந்தச் செயற்பாட்டில் இலங்கை மின்சார சபையும் கூட்டுச் சேர்ந்து கொள்ளும். 2040 ஆம் ஆண்டில் மின்சார சபை முகம் கொடுக்க வேண்டி நேரலாம் என எதிர்பார்க்கப்படும் தொழில் நுட்பச் சவால்கள் குறித்தும் புதிய திட்டத்தில் கவனம் செலுத்தப்படும்.

இதனிடையே, ஜெய்க்காவின் புதிய திட்டமானது மின்சக்தித் துறையில் புதிய திருப்புமுனையொன்றை ஏற்படுத்தும் என்று மின்சார சபையின் செயலாளரான சுரேன்பட்ட கொட தெரிவித்துள்ளார். (ற-ஐ-22)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மகிந்தவின் பாதுகாப்பு நீக்கம் குறித்து உறுப்பினர்களிடையே கடும் சொற்போர்

கொழும்பு, ஏப்.8
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு வழங்கப்பட்டிருந்த இராணுவப் பாதுகாப்புப் பிரிவு நீக்கப்பட்டுள்ளது என்று வெளியாகியுள்ள தகவல் தொடர்பில் அரச தரப்பு உறுப்பினர்கள் மற்றும் பொது எதிரணி உறுப்பினர்களுக்கிடையில் சபையில் நேற்று முன்தினம் கடும் சொற்போர் மூண்டது.

நாடாளுமன்றம் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் கூடியது. சபாநாயகர் அறிவிப்பு, பொதுமனுத் தாக்கல், வாய்மூல விடைக்கான கேள்விச்சுற்று ஆகியவை முடிவடைந்த பின்னர், நாடாளுமன்ற நிலையியற் கட்டளையின் 23 : 2 ஆம் பிரிவின் கீழ் விசேட கூற்றொன்றை விடுத்து சர்ச்சைக்குப் பிள்ளையார் சுழிபோட்டார் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன.

முன்னாள் ஜனாதிபதிக்குப் பாதுகாப்பு வழங்கி வந்த விசேட பயிற்சி பெற்ற கொமாண்டோ பிரிவைச் சேர்ந்த மீதமுள்ள 50 பேரும் ஏப்ரல் 10 ஆம் திகதியளவில் நீக்கப்படவுள்ளனர். இதன் மூலம் இராணுவப் பிரிவு முழுமையாக நீக்கப்படுகின்றது. இது பயங்கர நிலைமையாகும். அவரது உயிருக்கும் அச்சுறுத்தலாகும். இப்படி பொலிஸ் சேவையை மட்டும் வழங்க எடுத்த முடிவு தவறானது, அநீதியானது.

குறிப்பாக, சாவகச்சேரியில் தற்கொலை அங்கிகள் மீட்கப்பட்டுள்ள நிலையில், அரசு இப்படியொரு முடிவை எடுத்திருக்கக்கூடாது. அந்த முடிவு நிறுத்தப்பட வேண்டும். மகிந்தவுக்கான பாதுகாப்பு பலப்படுத்த வேண்டும். எனவே, இது விடயத்தில் அரசின் நிலைப்பாடு என்ன? என்று வினாத் தொடுத்தார் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ்.

இதற்குப் பதிலளித்த சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஷ்மன் கிரியெல்ல,
சபாநாயகரே, முன்னாள் ஜனாதிபதியின் உயிரைப் பாதுகாக்கவேண்டிய கடப்பாடு எமக்கும் இருக்கின்றது. இராணுவத்தில் 103 பேரும், பொலிஸில் 103 பேருமாக அவரின் பாதுகாப்புக்காக 206 பேர் வழங்கப்பட்டுள்ளனர். பாதுகாப்பு என்பது குறைக்கப்படவில்லை. பொது எதிரணியால் தான் முன்னாள் ஜனாதிபதிக்கு உயிர் அச்சுறுத்தல் இருக்கின்றது. இவர்கள் தான் மகிந்தவின் பாதுகாப்பு நீக்கப்பட்டுள்ளது என உலகுக்குப் பரப்புரை செய்கின்றனர். போரை முடித்தவர் பற்றிப் பேசுகின்றனர். ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட பொன்சேகாவின் பாதுகாப்பு யாவும் ஐந்து நிமிடங்களில் மீளப்பெறப்பட்டன. ஆனால், நாம் அப்படி செய்யவில்லை. எமக்கு வேறு நிகழ்ச்சி நிரல் இல்லை. பாதுகாப்பு குறைக்கப்படவுமில்லை- என்றார்.

இதன்போது ஒழுங்குப்பிரச்சினையொன்றை எழுப்பிய நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ சபை முதல்வரின் கூற்றை சவாலுக்குட்படுத்தினார்.

> பாதுகாப்பு என்பது குறைக்கப்படவில்லை. பொது எதிரணியால்தான் முன்னாள் ஜனாதிபதிக்கு உயிர் அச்சுறுத்தல் இருக்கின்றது. இவர்கள் தான் மகிந்தவின் பாதுகாப்பு நீக்கப்பட்டுள்ளது என உலகுக்குப் பரப்புரை செய்கின்றனர். போரை முடித்தவர் பற்றி பேசுகின்றனர்.

சபாநாயகரே, தினேஷ் குணவர்த்தன எழுப்பிய கேள்விகளுக்கு உரிய வகையில் பதில் வழங்கப்படவில்லை. தற்போது பொலிஸ் பாதுகாப்பு இருந்தாலும், மே மாதமளவில் இராணுவப் பாதுகாப்பை நீக்குவதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இந்தத் தீர்மானம் நடைமுறைப்படுத்தப்படுமா? இல்லையா? அரசின் உறுதியான நிலைப்பாடு அவசியம். - என்றும் வலியுறுத்தினார்.

இதற்குப் பதிலளித்த சபை முதல்வர், அப்படி எதுவும் நடக்காது. சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் நான் வினவினேன். இவ்வாறு எதுவும் இல்லையெனக் கூறப்பட்டது. பிரச்சினை எதுவும் இல்லாத நிலையில், புதியதொரு பிரச்சினையை உருவாக்குவதற்கே பொது எதிரணி உறுப்பினர்கள் இப்படியெல்லாம் செய்கின்றனர். - என்று பதிலடி கொடுத்தார்.

அதன் பின்னர் முன்னாள் இராணுவத் தளபதியும், அமைச்சருமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவும் கருத்து வெளியிட்டார்.

ஓய்வுபெற்ற ஜனாதிபதிகளின் பொலிஸ் பாதுகாப்பை 30 ஆகக் குறைக்கவேண்டும் என்று போர் நடைபெறும் காலப்பகுதியில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச முடிவெடுத்திருந்தார். சந்திரிகாவுக்கு தீவிரவாத அச்சுறுத்தல் இருந்தும் இப்படி முடிவெடுக்கப்பட்டது. அதற்கு நான் கடும் எதிர்ப்பு வெளியிட்டேன். பிரபுக்களின் பாதுகாப்பு விவரத்தை வெளியிடக்கூடாது. ஆனால், எதிரணி உறுப்பினர்கள் வெளியிட்டுள்ளனர். தற்போதைய ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருக்கும் கூட பொலிஸ் பாதுகாப்புத் தான் வழங்கப்பட்டுள்ளது- என்றார்.

இதனால் சீற்றமடைந்து எழுந்த நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே.
ரணில், சந்திரிகாவின் பாதுகாப்புடன் மகிந்தவுக்குரிய பாதுகாப்பை ஒப்பிடாதீர்கள். இவர் தான் போரை முடித்தார். பாதுகாப்பு நீக்கப்படவில்லை என்று அமைச்சர் லக்ஷ் மன் கிரியெல்ல கூறுகின்றார். ஆனால், நீக்கப்பட்டால், அமைச்சர் தனது பதவியை இராஜினாமா செய்யவேண்டும் - என்று வலியுறுத்தினார்.

அதன் பின்னர் ரோஹித அபேகுணவர்த்தன, ரஞ்சித் டி சொய்யா உள்ளிட்ட மகிந்த ஆதரவு அணி உறுப்பினர்களும் இது பற்றி காரசாரமாக கருத்து வெளியிட்டனர். இதனால், கூச்சல் குழப்பம் ஏற்பட்டது. இதையடுத்து, சபை நடவடிக்கைகளைக் கொண்டு நடத்துவதற்கு இடமளிக்குமாறு சபாநாயகர் உறுப்பினர்களிடம் கோரிக்கை விடுத்தார். (ற-ஜ-4)



## துப்பாக்கிகள் உற்பத்தி நிலையம் மொனராகலையில் கண்டுபிடிப்பு

கொழும்பு, ஏப்.8
துப்பாக்கிகள் உற்பத்தி செய்யும் நிலையமொன்றைக் கண்டுபிடித்த பொலிஸார், விற்பனைக்குத் தயாராக இருந்த 14 துப்பாக்கிகளையும், துப்பாக்கிகளை உற்பத்தி செய்யப் பயன்படுத்தப்படும் பெருமளவிலான உதிரிப்பாகங்களையும் கைப்பற்றியுள்ளனர்.

மொனராகலைப் பகுதியின் பாலாறு என்ற இடத்தில் வீடொன்றில், சூட்சுமமான முறையில் குறித்த துப்பாக்கிகள் உற்பத்தி செய்யும் நிலையம் இயங்கி வந்துள்ளது.

மொனராகலைப் பொலிஸாருக்குகிடைத்ததகவலொன்றை அடுத்து குறிப்பிட்ட இடத்தை கடந்த 5 ஆம் திகதி சுற்றிவளைத்த பொலிஸார் அங்கிருந்து 14 துப்பாக்கிகளையும், உதிரிப்பாகங்களையும் கைப்பற்றியுள்ளனர். அத்துடன் நிலையத்திலிருந்த ஒருவரை சந்தேகத்தின் பேரில் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இது தொடர்பாக, மொனராகலைப் பொலிஸார் தீவிர புலன் விசாரணைகளைமேற்கொண்டு வருகின்றனர். (ற-ஜ)

# போதை ஒழிப்பில் பங்களிக்கும் அதிகாரிகளுக்கு ஜனாதிபதி விருது

கொழும்பு, ஏப்.8
போதைப் பொருள் ஒழிப்பு தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்கும், விசேட சுற்றிவளைப்புகளை மேற்கொள்வதற்கும் பங்களிப்புச் செய்யும் சகல அதிகாரிகளுக்கும் ஜனாதிபதி விருதுகள் வழங்கும் ஒரு நிகழ்ச்சித் திட்டம் இந்த வருடம் முதல் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது என்று - ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

போதைப் பொருள் ஒழிப்பு நடவடிக்கைகளுக்குப் பங்களிப்புக்களை வழங்கும் அதிகாரிகளின் பதவி உயர்வு தொடர்பில் முன்னுரிமை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

குருநாகல் மாளிகாபிட்டிய விளையாட்டரங்கில் நடைபெற்ற 'போதைப் பொருளில் இருந்து விடுதலை பெற்ற நாடு' போதைப் பொருள் ஒழிப்பு தேசிய நிகழ்ச்சித் திட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
இன்று முழு உலகுக்கும் பெரும் பிரச்சினையாக மாறியுள்ள போதைப் பொருள் பாவனை தொடர்பில் எல்லோரும் கவனம் செலுத்தியுள்ளனர்.

போதைப் பொருளில் இருந்து விடுதலைப் பெற்ற நாட்டை உருவாக்க வேண்டுமானால் முதலில் போதைப் பொருளில் இருந்து விடுதலை பெற்ற குடும்பங்கள் உருவாக வேண்டும்.

சகல குடும்பங்களும் போதைப் பொருளில் இருந்து விடுதலை பெறுகின்றபோது போதைப் பொருளில் இருந்து விடுதலை பெற்ற ஒரு கிராமத்தைக் கட்டியெழுப்ப முடியும். அதன் மூலம் போதைப் பொருளிலிருந்து விடுதலை பெற்ற ஒரு நாடு உருவாகும்.

> போதைப் பொருளில் இருந்து விடுதலை பெற்ற நாட்டை உருவாக்க வேண்டுமானால், முதலில் போதைப் பொருளில் இருந்து விடுதலை பெற்ற குடும்பங்கள் உருவாக வேண்டும்.

போதைப் பொருளில் இருந்து விடுதலை பெற்ற நாடு தேசிய நிகழ்ச்சித் திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு அரச அதிகாரிகளுக்கு அதிக பொறுப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

போதைப் பொருள் ஒழிப்பு மற்றும் கட்டுப்படுத்தல் தொடர்பில் நாளாந்தம் சில மணி நேரங்களை ஒதுக்கி, அதற்கு நேரடியான பங்களிப்பை வழங்குவதற்குப் பொலிஸார் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

மாவட்ட மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களின் போது, குறித்த மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படும் போதைப் பொருள் ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம் குறித்தும் கலந்துரையாடப்பட வேண்டும் என்று ஆலோசனை வழங்கியுள்ளேன் - என்றார். (ற-ஜ-5)

# விடுதலைப் புலிகளின் மூலம் மகிந்தவைக் கொல்லத் திட்டம்

## கண்டுபிடித்தார் விமல் வீரவன்ஸ



கொழும்பு, ஏப்.8
விடுதலைப் புலிகளின் தாக்குதல் ஊடாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை படுகொலை செய்யவே அவருக்கான பாதுகாப்பை நல்லாட்சி அரசு குறைத்துள்ளது. - இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

பொரளை என்.எம்.பெரேரா கேந்திர நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொது எதிரணியின் ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
சாவகச்சேரி உட்பட வடபகுதியின்சிலபகுதிகளில்தற்கொலைக் குண்டுத் தாக்குதலுக்கான வெடிபொருள்களும் அங்கிகளும் கிடைக்கப் பெற்றுள்ளன. அந்த வெடிபொருள்கள் நிலத்தினுள்இருந்துமீட்கப்பட்டவையல்ல. ஏதேனும் தாக்குதலொன்றை நடத்துவதற்குதயார்படுத்தப்பட்ட நிலையிலேயே இந்த வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன. அத்துடன், புலனாய்வுப் பிரிவிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய, மீண்டும் விடுதலைப்புலிகள் அமைப்பு தோன்றும் நிலை காணப்படுகின்றது. ஆனால், அரசு இவற்றைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் செயற்பட்டு வருகின்றது.

முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினரொருவரின் வீட்டிலிருந்து தற்கொலைக் குண்டுத் தாக்குதலுக்கான வெடிபொருள்கள் மீட்கப்படுகின்ற நிலையில்,எதிர்வரும் மே மாதம் முதல் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் பாதுகாப்பைக் குறைப்பதற்கு இந்த அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

இந்த அரசின் பிரதானிகளாக விளங்கும் ஜனாதிபதி, பிரதமர் உட்பட ஆளும் தரப்பினர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் பாதுகாப்பைக் குறைத்து அவரை விடுதலைப் புலிகள் அமைப்பினூடாககொலைசெய்ய முயற்சிக்கின்றனர். - என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தற்கொலை அங்கி விவகாரம்; இனவாதச் சக்திகளுக்கு கடிவாளம் எப்போது?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் மக்களைப் பாதுகாக்கும் வகையிலும், தேசியப் பாதுகாப்பைப் பாதுகாக்கவும் முன்வந்துள்ளது; அதனை நாடிச் செயற்படுகிறது.

நிலைமை அவ்வாறு இருக்கையில், இனவாதத்தைக் கையில் எடுத்துக்கொண்டு, சில தரப்பினர் சாவகச்சேரியில் தற்கொலை அங்கி கண்டு எடுக்கப்பட்ட சம்பவத்தைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு, தென்னிலங்கை மக்களுக்கு உருவேற்றி, நாட்டில்குழப்பத்தை உண்டாக்குவதற்கு ஆலாய்ப் பறக்கின்றனர்--

மேற்கண்ட கருத்தை வெளியிட்டுள்ளார், பிரதி அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன.

தேசிய பாதுகாப்புக் குறித்து குழப்பங்களை உருவாக்குவது, நாட்டை மீண்டும் பிரிவினையை நோக்கி நகர்த்துவதாகவே அமையும்--

நாட்டின் தேசிய பாதுகாப்பைத் தக்க வைப்பதில், அரசுக்கு மட்டுமன்றி, நாட்டு மக்களுக்கும் பெரும் பங்கு உள்ளது--

வென்றெடுத்த எமது தேசத்தின் பாதுகாப்பைப் பலப்படுத்தவும், நாட்டில் குழப்பங்கள் ஏற்படாமல், தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், மக்களும் ஊடகங்களும் அர்ப்பணிப்பு உணர்வுடன் செயற்பட வேண்டும். அதுவே இன்றைய முக்கிய தேவைகளில் முதன்மையானது என்றும் பிரதி அமைச்சர் கருத்து வெளியிட்டுள்ளார்.

போர் முடிவுக்கு வந்ததில் இருந்து, இதுவரையில் வடக்கில் அவ்வப்போது பலப்பல ஆயுதங்களும் வெடிபொருள்களும் மிகப்பெரும் எண்ணிக்கைகளில் மீட்கப்பட்டன. அவை போர் முடிவடைந்த பின்னர் மீட்கப்பட்டவை; கிடைக்கப் பெற்றவை--

அவ்வாறு இருக்கும்போது, சாவகச்சேரியில் மீட்கப்பட்ட தற்கொலை அங்கி மட்டும், நாட்டில் மிகப்பெரும் குழப்பத்தை ஏற்படுத்தி உள்ளது--என்று பிரதி அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

போருக்குப் பின்னரான நல்லாட்சி அரசின் இனநல்லிணக்கம் நாடிய செயற்பாடுகளை விரும்பாத சக்திகளே எதிர்மறை நாடி ஆலாய்ப் பறக்கிறார்கள்--என்றும் பிரதி அமைச்சர் பொருத்தமாகக் குறிப்பிட்டுள்ளமையும் இங்கு விசேடமாகக் கருத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒன்று.

மேற்போந்தவற்றைக், கூட்டிக் கழித்து, பெருக்கிப் பிரித்துப், பார்த்தால் தேறும் விடை; சாவகச்சேரிப் பகுதியில், தற்கொலை அங்கியும் குண்டுகளும் கைப்பற்றப்பட்டமை குறித்த செய்தி வெளிவந்ததும், மிகப் பலரும் பொறுப்பற்ற முறைகளில் கருத்துக்களை வெளிப்படுத்த ஆரம்பித்தனர்!!

வெறும் வாயை மெல்பவர்களுக்கு அவல் கிடைத்தது போன்று--

அதன் பாரதூரத் தன்மை தெரிந்தும், தெரியாதவர்கள் போன்று--

அகப்பட்ட பாட்டுக்குக் குறி சுடுவது போன்று--

தமது மனதில் பட்ட கருத்துக்களை ஓயாது வெளிப்படுத்தினர்.

இத்தகைய ஒரு சூழமைவில், கடந்த பல ஆண்டு காலமாக, தமிழ் மக்களுக்கு, பெரும் துன்ப துயரங்களைக் கொடுத்தவர்கள்;

அவ்வாறு மீண்டும் மீண்டும் நொந்து நொடிந்துள்ள தமிழ் மக்களுக்கு--

இனிமேலும் துன்ப துயரங்களையும் உண்டாக்குவதற்குத் துடித்துக் கொண்டிருக்கும் இனவாதச் சக்திகளுக்கு, அரசு கடிவாளம் இடவேண்டும்.

நலம் நாடி எதிர்பார்க்கலாமா?

அரசே உனது பதில் தான் என்ன? இது விவகாரத்தில் வெளிப்படைத் தன்மை வேண்டும். நம்பிக்கையுடன் எதிர்பார்க்கலாமா...?

# உட்கட்சிப் பூசலில் சிக்கியுள்ள முஸ்லிம் காங்கிரஸ்

எம்.ஐ.முபாறக்





இலங்கையின் தற்போதைய அரசியல் அரங்கில் இரண்டு கட்சிகள் உட்கட்சிப் பூசலால் அவதிப்படுகின்றன. அவற்றுள் ஒன்று சிறிலங்கா சுதந்திரக் கட்சி; மற்றையது சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ். இந்தக் கட்சிகளின் உட்பூசல்கள் பற்றிய செய்திகள் அடிக்கடி ஊடகங்களில் வெளி வந்த வண்ணமே உள்ளன.

இந்த இரண்டு கட்சிகளின் உட்பூசல்களும், பதவி மோகத்தை அடிப்படையாகக் கொண்டு உருவான ஒரே மாதிரியான பிரச்சினைகள்தான். மகிந்தவை மீண்டும் உயர்பதவிக்குக் கொண்டு வந்து தாம் இழந்த பதவிகளை மீண்டும் அடைய வேண்டும் என்பதற்காக ஒரு தரப்பினர் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் பிரச்சினையைக் கிளப்பியுள்ள அதேவேளை, தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை அடிப்படையாக வைத்து சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உட்கட்சிப் பூசலைச் சந்திக்கத் தொடங்கியுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உட்கட்சிப் பூசல் என்பது ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து உருவெடுக்கத் தொடங்கியது.

ஆனால், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உட்கட்சிப் பூச

> "சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உட்கட்சிப் பூசலானது மகிந்த ஆட்சியில் அக்கட்சியின் தவிசாளர் பஷீர் சேகுதாவூத் கட்சித் தலைமைத்துவத்தின் அனுமதியைப் பெறாமல் தனித்துச் சென்று அமைச்சுப் பதவியைப் பெற்றதில் இருந்து உருவானது. நாடாளுமன்றத் தேர்தலின் பின் அவரும் ஹசனலியும் தேசியப் பட்டியல் ஆசனங்களைக் கோரத் தொடங்கியதும் அந்த உட்பூசல் மேலும் வளரத் தொடங்கியது."

லானது, மகிந்த ஆட்சியில் அந்தக்கட்சியின் தவிசாளர் பஷீர் சேகுதாவூத் அவரது கட்சிக்கு அறிவிக்காமல் - கட்சித் தலைமைத்துவத்தின் அனுமதியைப் பெறாமல் தனித்துச் சென்று அமைச்சுப் பதவியைப் பெற்றதில்இருந்துஉருவானது.நாடாளுமன்றத் தேர்தலின்பின் அது மேலும் வளரத் தொடங்கியது.

இந்த மாதம் 19 ஆம் திகதி பாலமுனையில் இடம்பெற்ற கட்சியின் 19 ஆவது தேசிய மாநாட்டின்போதுதான் இந்தப் பிரச்சினை பூதாகரமானது.

கட்சியின் தவிசாளர் பஷீர் சேகுதாவூத்தும், செயலாளர் நாயகம் எம்.ரி.ஹசனலியும் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி கேட்டு கட்சியின் தலைமைத்துவத்துக்கு நெருக்கடி கொடுத்து வருகின்றனர் என அரசல்புரசலாக கதைகள் வெளியாகி இருந்த போதிலும்,மு.காவின் அந்த தேசிய மாநாடே அதை உறுதிப்படுத்தியது.

### உட்கட்சி மோதல் பரகசியமானது

ஹசனலி அந்த மாநாட்டைப் புறக்கணித்தும், பஷீர் அதில் கலந்து கொண்டு அவமானப்பட்டும், கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் அதில் அவர்கள் இருவருக்கும் எதிராக உரை நிகழ்த்தியும், உட்கட்சிப் பூசலை வெளியில் கொண்டு வந்தனர், அதை உறுதிப்படுத்தினர்.

இந்த மோதல் இன்று தேசிய மற்றும் சமூக ஊடகங்களின் ஊடாக உக்கிரமாக முன்னெடுக்கப்பட்டு வருவதை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது. இந்தப் பிரச்சினைக்கான உண்மையான காரணம் பதவி மோகம்தான் என்றால், தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளைக் கைப்பற்றுவதற்கான போட்டிதான் என்றால், அந்தப் போட்டி எந்த அளவுக்கு நியாயமானது என்று ஆராய்ந்து பார்க்க வேண்டியுள்ளது. ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து, புதிய அரசின் பங்காளிக் கட்சிகளுக்கு அதிஷ்டக் காற்று அடித்த போதிலும்,மு.காவுக்கு அவ்வாறு அமையவில்லை.

2010 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் இரண்டு தேசியப் பட்டியல் ஆசனங்கள் உட்பட எட்டு ஆசனங்களை மு.கா. பெற்றிருந்தது. ஆனால், 2015ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் இரண்டு தேசியப் பட்டியல் ஆசனங்கள் உட்பட ஏழு ஆசனங்களை மாத்திரம்தான் பெற்றது. இருந்த ஒன்று பறி போனது. ஆனால்,மு.கா. 10 ஆசனங்களை எதிர்பார்த்தது.

திருகோணமலை மற்றும் வன்னி ஆகிய மாவட்டங்கள் மு.காவுக்கு அதிர்ச்சித் தோல்வியைக் கொடுத்தன. அந்த மாவட்டங்களில் மு.கா. கொண்டிருந்த தலா ஒவ்வோர் ஆசனமும் பறிபோயின. பதிலுக்கு அம்பாறை மாவட்டத்தில் ஓர் ஆசனம் அதிகரித்தது. மொத்தத்தில் ஓர் ஆசனம் பறி போனது. இந்தத் தோல்விதான் தேசியப் பட்டியல் ஆசனப் பகிர்வில் மு.கா வுக்கு சிக்கலை ஏற்படுத்தியது. அந்த இரு மாவட்டங்களிலும் மு.கா. தோல்வியடைந்தது என்பதை விடவும், அந்த மாவட் டங்களில் மு.காவுக்கு சவால் விடும் வகையில் தலா இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தோன்றி இருப்பதுதான் சிக்கலான விடயம்.

திருகோணமலை மாவட்டத்தில் ஐக்கிய தேசிய கட்சியின் சார்பில் ஒருவரும், அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் சார்பில் ஒருவரும் என இருவர் தெரிவாகியுள்ள அதேவேளை, வன்னியில் ரிஷாத் பதியுதீனின் கட்சியில் ஒருவரும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் ஒருவரும் என இருவர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேரலாதன்





# இன நல்லுறவை ஏற்படுத்துவதில் பின்னடைவு

இந்த நாட்டில் வாழுகின்ற இனங்களுக்கிடையில் நல்லுறவை ஏற்படுத்துவதில் பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. இதனால் நாட்டின் எதிர்காலம் குறித்த கவலைகளும் அதிகரித்துள்ளன.

நாடு சுதந்திரம் பெற்ற தினத்திலிருந்தே இனவாதமும் தலையெடுக்க ஆரம்பித்தது. சிங்கள பௌத்தர்களுக்கே இந்த நாடு சொந்தம் என்ற இனவாதிகளின் கோசங்கள் நாட்டைப் பெரும் இக்கட்டுக்குள் தள்ளிவிட்டதைக் கடந்த கால வரலாறுகள் காட்டுகின்றன. போர் ஓய்ந்து ஆட்சி மாற்றமும் ஏற்பட்ட பின்னரும் நாட்டின் நிலைமையில் பெரிய மாறுதல்கள் இடம்பெற்றதாகத் தெரியவில்லை. அரசுக்கு எதிரானவர்கள் பலமான நிலையில் இருந்து கொண்டு தவறான பரப்புரைகளை மேற்கொண்டு வருவதால், அரசு அதை எதிர்கொள்வதில் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றது. மகிந்தவின் ஒன்பது வருடகால ஆட்சியின் போது பயனடைந்த பலரும், மகிந்த விசுவாசிகளாகவே வலம் வருகின்றனர். நீதி, நியாயம் என்பவை தொடர்பாக இவர்கள் சிறிதும் அலட்டிக் கொள்வதில்லை. அரசைக் கவிழ்த்து விட்டு மகிந்தவை மீண்டும் ஆட்சிப் பீடத்தில் ஏற்றி வைப்பதில்தான் இவர்கள் முழுக்கவனமும் செலுத்துகின்றனர். மகிந்த ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்துவிட்டால், தமது வாழ்க்கையில் வசந்தம் வீச ஆரம்பித்து விடும் என்பது இவர்களது நம்பிக்கையாக உள்ளது. இதைவிட நாட்டைப் பற்றியோ அல்லது மக்களைப்பற்றியோ இவர்கள் சிறிதும் கவலைப்படுவதில்லை.

**வடபகுதியில் போரின் எச்சங்கள்**

இதேவேளை – இறுதிப்போர் இடம்பெற்ற இலங்கையின் வடபகுதி இன்னமும் போரின் எச்சங்களைச் சுமந்து நிற்கின்றது.

போர் ஓய்ந்த பின்னரும் வடக்கில் அவ்வப்போது ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. மகிந்தவின் காலத்திலும் இது இடம்பெற்றது. ஆனால், அண்மையில் வடபகுதியில் உள்ள மறவன்புலோ கிராமத்திலுள்ள வீடொன்றில் இருந்து போர் உபகரணங்கள் மீட்கப்பட்ட செய்தி, அரசுக்கு எதிரானவர்களால் பெரிய அளவிலான பரப்புரைகளை மேற்கொள்வதற்கு உதவி புரிந்துள்ளது. அதுவும் முன்னாள் போராளி ஒருவரின் வீட்டிலிருந்து இந்தப் பொருள்கள் மீட்கப்பட்டமைதான் பிரச்சினைக்கான மூலகாரணமாக அமைந்துள்ளது.

இதேவேளை– இந்த விடயத்தை ஊதிப் பெருப்பிக்கும் வகையில் எதிரணியினர் நடந்து கொள்கின்றமை வேதனையை ஏற்படுத்துகின்றது. இனவாதத் தீயை மூட்டி, அதில் குளிர் காய்வதுதான் இவர்களது நோக்கமாக உள்ளது. மகிந்தவுடன் ஒட்டிக் கொண்டிருக்கும் முன்னாள் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் புதிய கண்டுபிடிப்பு ஒன்றையும் வெளியிட்டிருந்தார். மறவன்புலோவில் கண்டுபிடிக்கப்பட்ட பொருள்கள் வடபகுதியில் இருந்து கொழும்புக்குக் கடத்தப்படவிருந்ததாக அவர் தெரிவித்தமைதான் அந்தக் கண்டுபிடிப்பாகும். இந்த விடயம் தொடர்பாக, அவருக்கு ஏற்கனவே தெரிந்திருந்திருந்தால், உடனடியாக உரியவர்களுக்குத் தெரியப்படுத்தியிருக்க வேண்டும். ஆனால், அவர் அவ்வாறு நடந்து கொள்ளாமல் தற்போது வாய்க்கு வந்ததையெல்லாம் கூறிக் கொண்டிருப்பது வேடிக்கையாகவுள்ளது.

**பக்கச்சார்பற்ற விசாரணைகள்**

இந்தப் பொருள்கள் எவரால் அந்த வீட்டில் வைக்கப்பட்டன என்பது தொடர்பான விசாரணைகள் பக்கச் சார்பின்றி நடத்தப்பட வேண்டும். அப்போதுதான் உண்மைகள் வெளிவரும். இதை விடுத்து ஊகத்தின் அடிப்படையில் கருத்துக்களை வெளியிடுவதால் தேவையில்லாத பிரச்சினைகள் தான் உருவாகும். நாட்டில் நல்லுறவு நிலவ வேண்டுமானால், சகல இன மக்களுக்கும் இடையில் புரிந்துணர்வு இருத்தல் அவசியமாகும். இதை வளர்க்க வேண்டிய முக்கிய பொறுப்பு அரசியல்வாதிகளிடம் தான் உள்ளது.

நாட்டின் மீது மதிப்பும் மரியாதையும் வைத்திருக்கின்ற எந்தவொரு அரசியல்வாதியும் இனத்துவேசத்தைக் கிளப்பும் வகையில் கருத்துக்களை வெளியிட மாட்டார்கள். இனங்களுக்கிடையில் முறுகல் நிலை ஏற்படுமாயின், அது நாட்டின் வளர்ச்சியைப் பெரிதும் பாதித்து விடும்.

திட்டமிட்ட குடியேற்றங்களை ஏற்படுத்துவதும், தமிழர் வாழ்விடங்களில் வகை தொகையின்றி பௌத்த விகாரைகள் அமைக்கப்படுவதும் இன நல்லுறவைப் பாதிக்கவே செய்யும். நயினாதீவில் மிகப்பெரிய புத்தர் சிலை நிறுவுவதும் கூட இன ஒற்றுமையைச் சிதைக்கின்ற ஒரு செயல்தான். அகிம்சாவாதியான புத்தபெருமானை வெறுப்பவர் எவருமே இல்லை. ஆனால், அவரை வணங்குவதாகக் கூறிக்கொண்டு சிலர் செய்கின்ற காரியங்கள்தான் பிரச்சினை தோன்றுவதற்கு மூலகாரணமாகத் திகழ்வதைக் காண முடிகின்றது.

## முதியவர்களிடம் அன்பு காட்டுவோம்

“ஆண்டாண்டுதோறும் அழுது புரண்டாலும் மாண்டோர் வருவரோ மாநிலத்தே” இது முன்னோர் சொல்லிச் சென்றது. பெற்றோர், உறவுகள், உற்றார் எம்மை விட்டுப் பிரிந்து செல்வது தவிர்க்க முடியாதது. நீங்காத நினைவுகளாக, எங்கள் நெஞ்சங்களில் மாறாத ரணங்களாய் நிலைத்து வேதனையின் உச்சிக்கே போய்விடுகிறோம். அவர்களோடு பழகிய அந்த பாசமிகு நாள்கள் இனியவை. எங்கள் வளர்ச்சியில் வழிகாட்டிகளாய் தியாகங்கள் பல செய்தும் இன்னும் எத்தனையோ உதவிகள் புரிந்தும் எமது உயர்வுக்கு வழி வகுத்தவர்கள் அவர்கள். தேவைகள் வசதிகள் இயன்றவரை பெற்றதன் பின்னர் அன்போடு அவர்களை ஆதரிக்காது தனிமைப் படுத்துவது நரக வேதனை. பொறுப்போடு எங்களை அக்கறையோடு அரவணைத்தவர்களை, பொறுப்பே இல்லாது வயோதிப இல்லங்களிலும் வீதியோரங்களிலும் விட்டுவிடு கிறார்கள் சில ஈவிரக்கம் இல்லாத பிள்ளைகள். உடல் நலிவுற்ற நிலையில் இருக்கும் பெற்றோரை மனிதர்களாகவே பிள்ளைகள் மதிப்பதில்லை. கிழவன் எப்போ சாகும் திண்ணை எப்போ காலியாகும் என்ற நிலையில் இருப்பார்கள்.

வீட்டில் நடக்கும் நிகழ்வுகளில் அந்த வயதானவர் பங்கேற்க முடியாத நிலைமை. அவருக்குத் தெரியப்படுத்துவதில்லை. மூலையில் அவர் முடங்கிக் கிடப்பார். ஏனையோர் பார்வையில் அவர் வேற்றுக்கிரக வாசியாய் உலா வருவார். மூச்சு உள்ளவரை முகம் சுளித்தவர், ஆவி போனதன் பின் அவர் உடல் மீது விழுந்து அழுது புலம்புவதும் ஒப்பாரி வைப்ப தும், மயங்கி விழுவதும் நடிப்பே தவிர வேறல்ல. முதியவர் பாசத்துக்கு ஏங்கிய போது கண்ணீர் விட வைத்தவர்கள், கண்ணீர் அஞ்சலிக்கான போஸ்டர்களாக தெருவெங்கும் ஒட்டியும் இன்னும் பல ஆடம்பரச் செலவுகள் செய்தும் ஊருக்கும் உலகுக்கும் பந்தா காட்டி அசத்துவார்கள். இவையெல்லாம் தேவை தானா? வயோதிபத்தை வெறுத்து ஒதுக்காமல் புரிந்துணர்வோடும் புன்னகையோடும் அன்பை வெளிப்படுத்துவதுதான் மனிதாபிமானம்.

*உதயன் வாசகி, கல்வயல்*

## பனிப்புலம் செட்டிகுறிச்சி வீதிக்கு எவர் பொறுப்பு?

கடந்த முதலாம் திகதிய உதயன் பத்திரிகையின் வாசகர் திருமுகத்தில் வெளியான பனிப்புலம் செட்டிகுறிச்சி வீதி தொடர்பான தகவல் நூற்றுக்கு நூறு வீதம் உண்மையானதே. இவ்வீதி பல தசாப்தங்களாக திருத்தங்களைக் காணாது மிகவும் சீரழிந்து காணப்படுகின்றமை சகலரும் அறிந்ததே. பிரதேச சபையோ, வேறெந்த நிறுவனங்களோ இந்த வீதியைக் கண்ணெடுத்தும் பார்ப்பதில்லை. சென்ற வருடம் கிராமிய அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் பனிப்புலம் கிராமத்துக்கென ஒதுக்கப்பட்ட நிதியில் இந்த வீதியைத் திருத்தித் தரும்படி இந்தப் பகுதி மக்கள் கோரியபோதும், அந்த நிதி எமக்குப் பயன் படுத்தாது அடுத்த கிராமமான வலி. தென்மேற்குப் பிரதேச சில்லாலைக் கிராமத்திலுள்ள தும்பளப் பாய் குளவாய்க்காலும், மாதகல் சம்பில்துறைமதகும் திருத்துவதற்குச் செலவழிக்கப்பட்டது. எமக்கென ஒதுக்கப்பட்ட எமக்குப் பயன்படாது, எமதுவீதிகள் சீரழியும் போது அடுத்த கிராமத்துக்குப் பயன்படுத்தியமை கவலைக்குரியது.

எனவே இந்த வீதி திருத்தப்படா ததற்குப் பொறுப்புக் கூற வேண்டியது வலி.மேற்குப் பிரதேச சபையே என்பது எனது தாழ்மையான கருத்து.

*பனிப்புலம், செட்டிகுறிச்சி,*
*மக்கள் சார்பில், நலன் விரும்பி.*

## சபாஷ்! சரியான தீர்ப்பு!

ஆலய மிருகபலிக்குத் தடையுத்தரவு பிறப்பித்த நீதிவானுக்கு இம்மையில் மட்டுமல்ல மறுமையிலும் கோடி புண்ணியம் நிச்சயம். இது குறித்து இரண்டு வருடங்களுக்கு முன்பு அடியேனும் உதயனின் வாசகர் திருமுகத்தில் பிரஸ்தாபித்திருந்தேன். மாடுகள் மீது வந்த கருணை ஆடுகள் மீதும் வராதா என்ற தலைப்பில் வதிரி பிள்ளையார் ஆலயத்தில் ஆடு வெட்டும் பலிபீடத்தில் தனது தலையைச் சாய்த்து இந்த ஆடுகளுக்கு பதிலாக எனது தலையை வெட்டுங்கள் என்று தீரத்துடன் அறை கூவல் விடுத்த சைவப் பெரியார் சூரன் ஆசிரியாரைக் குறித்தும் பிரஸ்தாபித்திருந்தேன். இத்தீரச்செயலுக்காக அக்காலக் கிறிஸ்தவர்களால் சூரன் நவயுக இயேசு எனப்புகழப்பட்டதையும் குறிப்பிட்டிருந்தேன். சாந்த சொரூபியான இயேசு பகவான்கூட, ஒருமுறை கோபம் கொண்டு ஜெருசலேம் தேவாலயத்துள் புகுந்து மிருக வதை புரிவோருக்கு சாட்டையடி கொடுத்து விரட்டுகிறார்.

இந்தச் சம்பவம் பைபிளின் புதிய ஏற்பாட்டில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே மிருக வதைக்கு கிறிஸ்தவ மார்க்கமும் உடன்பாடுடையதல்ல. மேற்படி தீர்ப்பின் மூலம் சூரனின் கனவும் நனவாகியுள்ளது.

சபாஷ்! சரியான தீர்ப்பு!

*விஸ்வாஸ்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சிரியாவில் அல்-குவைதா மீது தாக்குதல் நடத்திய அமெரிக்கா

டமஸ்கஸ், ஏப்.8
சிரியாவில் அல்-குவைதா போராளிகளை அமெரிக்கா தாக்கியது என்றும், இந்தத் தாக்குதலில் அந்த அமைப்பின் ஊடகப் பேச்சாளர் உயிரிழந்துள்ளதாகவும் அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்ரகன் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளது.
அல் குவைதா போராளிகள் பலர் கொல்லப்பட்டிருப்பதாக பென்ரகன் ஊடகப் பேச்சாளர் மத்யூ அலன் உறுதிபடத் தெரிவித்தார். ஆனாலும் தாக்குதல் தொடர்பான விவரங்கள் இன்னமும் சேகரிக்கப்பட்டுக் கொண்டு இருக்கின்றன என அவர் தெரிவித்தார்.
கடந்த திங்கள், செவ்வாய்க்கிழமைகளில் போராளிக் குழுக்களுக்கு எதிராக அமெரிக்காவால் தாக்குதல் நடத்தப்பட்டது என்று அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.
தாக்குதலில் உயிரிழந்தவர் அல்-குவைதா ஊடகப் பேச்சாளர் என குறித்த அமைப்பினர் நேற்றுமுன்தினம் உறுதி செய்தனர்.
சில தினங்களில் இடம்பெறவுள்ள ஜெனிவாப் பேச்சுக்களின்போது இந்தத் தாக்குதல்கள் குறித்தும் ஆராயப்படும்.
சமாதானப் பேச்சின்போது சிரிய ஜனாதிபதி அல்-அசாத்தின் பதவிக் காலம் குறித்த கேள்விக்கு இன்னமும் பதில் தரப்படவில்லை என போராளித் தரப்பினரின் புதிய ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.
பேச்சுக் குழுவில் உள்ள உறுப்பினர் ரியாத் நசான் அக்ஹா தெரிவிக்கையில், சிரியாவின் எதிர்காலத் தலைவர் குறித்த விடயம் அதிக பாதிப்பைச் செலுத்தும். அசாத்தின் பதவிக்காலம் குறித்து தகுந்த பதில் அளிக்கவில்லை என்றால்இந்தப்பேச்சுமுயற்சிகள்வீணாகிவிடும் எனத் தெரிவித்தார். (த-ரி4)




## 15 அடி நீளமான முதலை சிக்கியது

வொஷிங்டன், ஏப். 8
அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் இராட்சத முதலையொன்று கொல்லப்பட்டுள்ளது.
ஆயிரத்து 43 பவுண்டுகள் எடையுள்ள, கிட்டத்தட்ட 15 அடி நீளம் உடைய இராட்சத முதலை வேட்டையாடப்பட்டுள்ளது என வன அதிகாரிகள் தெரிவித்தனர்.
இதுவரை இந்த அளவில் பெரியதான முதலை எதுவும் பிடிக்கப்படவில்லை என வனத்துறை ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். மாநில அளவில் இது மிகப் பெரிய முதலை எனவும் வனத்துறைக் குறிப்பில் பதியப்பட்டுள்ளது. கடந்த சனிக்கிழமை இந்த வேட்டை இடம்பெற்றுள்ளது.
15 அடி நீளமான முதலை 10 ஆயிரம் டொலர் வரைக்கும் விற்பனை செய்யப்படும் என இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டிருந்து.
இந்த முதலை அந்த பிரதேசத்தில் வசித்த கால்நடைகளை வேட்டையாடி வந்ததாகவும், இதனால் இந்த முதலை திட்டமிட்டு வேட்டையாடப்பட்டதாகவும் ஊடகங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-ரி4)

# ஐ.எஸ். பகுதிகளி
# சிறுவர்களின் எ

## பாடசாலைகளில் குண்டு தயா

பக்தாத், ஏப்.8
ஈராக்கில் ஐ.எஸ்ஸின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பாடசாலைகளில்கல்வி பயிலும் மாணவர்களுக்கு எவ்வாறு குண்டுதயாரிப்பது, எவ்வாறு போராடுவது என்பது குறித்து மூளைச் சலவை செய்யப்படுவதாக அங்கிருந்து தப்பித்து வந்த பெற்றோர் தெரிவித்தனர்.
பாடசாலைகளைத் தம் வசப்படுத்தி, தற்கொலைப் படைத் தாக்குதல்கள், ஏனைய தாக்குதல்களை நிகழ்த்துவது குறித்த ஆலோசனைகள், உத்திகள் கற்றுக்கொடுக்கப்படுவதாக அவர்கள் மேலும் தெரிவித்தனர்.
இதனை உறுதி செய்வதற்காக மனித உரிமைகள் அவதானிப்புக் குழுவினர் 12 வயதான மாணவன் ஒருவனைச் சந்தித்தனர். குண்டு தயாரிப்பது தொடர்பில் கற்பித்தல் நடவடிக்கைகள் இடம்பெற்றதாக மாணவன் தெரிவித்தான். கடந்த வருடம் மே மாதம் அன்பார் மாகாணம் ஐ.எஸ்ஸின் ஆட்சிக்கு உட்பட்டது. இதன்பின்னர் அவர்களது வன்முறைச் சம்பவங்கள் அரங்கேறின. பெண்கள் பாலியல் அடிமைகளாக்கப்பட்டனர். பெண் பிள்ளைகளின் பாதுகாப்புக் கருதி பெற்றோர் அவர்களது கல்வியை மறுத்தனர் எனப் பாதிக்கப்பட்டவர் தெரிவித்தார்.
பாடசாலைக்குச் சென்ற ஆண் பிள்ளைகள் போராளிகளாக மாறும் பயிற்சிக்கு வற்புறுத்தப்பட்டனர். ஆண் பிள்ளைகள் அவர்களது இலக்காக இருந்தது எனப் பெண்கள் நல ஆர்வலர்களின் அவதானிப்புக் குழுவினர் தெரி
தனர்.
மேலும், கற்றலுக்கான எந்
புத்தகங்களும் இருக்கவில்லை.
ஆனை மட்டுமே கற்பித்தனர் எ
பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்த
அத்துடன் பெண்களுக்கான கல
மறுக்கப்பட்டதுடன், பாட சாலை
அனுப்பப்பட்ட சிறுவர்கள் மூளை
சலவைக்கு உட்படுத்தப்பட்டனர். இஸ்லாமியச் ச
களைத்தவிர வேறு எதுவும் கற்பிக்கப்படவில்ல
உண்மையான பாடசாலையாக எதுவும் இய
வில்லை எனவும் அவர்கள் தெரிவித்தனர்.
பெண்களுக்கான ஆடையில் அதிக கட்டுப்பாடு
விதிக்கப்பட்டன. கண்களைத் தவிர உடல் எது
வெளித் தெரியக் கூடாது எனச் சட்டம் வலுப்படு



> தீவிரவாதத்தை எதிர்த்துப்போரிடும்நிலையத்தின் அறிக்கையில்,வருடத்திற்கு 89 சிறுவர்கள் போரில் போராளிகளாக உயிரிழந்துள்ளனர்.

# சிகாவைரசைக்கட்டுப்படு
# 500 மில்லியன் டொலர்

## ஒதுக்கீடு செய்தது அமெரிக்கா

வொஷிங்டன், ஏப்.8
சிகா வைரசைக் கட்டுப்படுத்த 500 மில்லியன் டொலர் நிதியை அமெரிக்கா ஒதுக்கியுள்ளது எனச் சுகாதாரத்துறை அதிகாரிகள் நேற்று முன்தினம் தெரிவித்தனர்.
சிகா வைரசைக் கட்டுப்படுத்த ஒபாமாவின் 1.9 பில்லியன் டொலர் நிதிக் கோரிக்கையை அடுத்து இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டு 2 மாதங்கள் ஆகிய நிலையில் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.
கோரப்பட்ட தொகையை எம்மால் உடனடியாக வழங்க முடியவில்லை. அவற்றின் திட்டத்துக்கான பொறிமுறையை நாம் அளவிட வேண்டும் என வெள்ளை மாளிகை ஊடகச்செயலாளர் தெரிவித்தார்.
அமெரிக்காவில் மேலும் பல சிகாத் தொற்றுகள் பதிவாகும் என எதிர்வு கூறப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.
இவற்றுக்கு எதிராக நாம் விரைந்து செயற்படவேண்டும். ஜனாதிபதி விடுத்த வேண்டுகோளுக்கு இணங்கப்



பணத்தை வழங்குவதற்கான திட்டங்கள்
என அவர் மேலும் தெரிவித்தார்.
இந்த நிதி சிகாவைக் கட்டுப்பாட்டுக்கு
போதுமானது எனவும் அவர் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ல் கருகும் திர்காலம்

## ரிக்கப் பயிற்சி




பட்டது. வேறு ஆடைகள் அணிவதற்கான சாத்தியம் அற்று இருந்தனர். இதனால் பல பெண் பிள்ளைகள் மன உளைச்சலுக்கு ஆளாகினர். சிறுவர்களின் கல்வியில் அக்கறை செலுத்தப்பட வேண்டும் என ஐ.நாவின் பாதுகாப்புச் சபை தெரிவித்துள்ளது.

போராளிகளாகவும், தற்கொலைக்குண்டுதாரிகளாகவும் சிறுவர்கள் பயன்படுத்தப்படுவதை ஐ.நா. சுட்டிக்காட்டியள்ளது. மேலும், கலிபேற்றின் குட்டிகள் என்ற ஆவணப் படத்தில் ஒரேஞ் நிற ஆடை அணிந்த காகேசியன் பொம்மைகளுடன் (ஐ.எஸ். கொலை செய்பவர்களுக்கு அணிவிக்கும் ஆடை அணிந்த பொம்மை) பாடசாலைகளில் இருந்து சிறுவர்கள் வீட்டுக்கு அனுப்பப்பட்டனர். இவற்றுடன் பயிற்சி செய்வது மாணவர்களின் வீட்டு வேலை எனப் பெற்றோர் தெரிவித்தனர்.

இனியும் இடம்பெறவுள்ள போருக்கு அதிக அளவிலான சிறுவர்களே போராளிகளாக அனுப்பப்படவுள்ளனர் என அவதானக் குழுவினர் கவலை தெரிவித்துள்ளனர்.

தீவிரவாதத்தை எதிர்த்துப் போரிடும் நிலையத்தின் அறிக்கையில், வருடத்திற்கு 89 சிறுவர்கள் போரில் போராளிகளாக உயிரிழந்துள்ளனர்.

சிறுவர்கள் வாகன ஓட்டிகளாகவும், போராளிகளாகவும், பாதுகாப் புத் தேவைக்கும் பயன்படுத்தப்பட்டுள்ளனர். சிறுவர்களின் பயிற்சிகள் ஊக்குவிக்கப்படுவதுடன், அவர்களின் எதிர்காலம் சிதைக்கப்படுகிறது எனப் பலரும் கவலை தெரிவித்துள்ளனர். இதனால் ஐ.எஸ் அமைப்பை அழிக்கும் முயற்சி மேலும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. (த-ரி4)




ஜேக்கப் என்ற பெயர் கொண்ட இந்த ஆடு ஒரு கொம்பைக் கொண்டுள்ளது. பாடசாலை மாணவர்கள் பண்ணைக்குச் சுற்றுலா சென்றபோது இதனை அவதானித்துப் ஒளிப்படம் எடுத்து பிரபல்யப்படுத்தியுள்ளனர். 16 வயதாகும் இந்த ஆடு, குட்டியில் இருந்து குறித்த பண்ணையில் வளர்வதாகவும், அயல் சிறுவர்கள் இதனை 'யுனி கோன்' என அழைத்து விளையாடுவதாகவும் பண்ணை உரிமையாளர் தெரிவித்தார். (த-ரி4)


## திமிங்கிலத்தின் வயிற்றுக்குள் 3 நாள் உயிருடன் இருந்தவர்

மட்ரிட், ஏப்.8

ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த 56 வயதான மீனவர் லுயிகி மார்க்கியூஸ் கடந்த சில தினங்களுக்கு முன்னர் கடலுக்கு மீன் பிடிக்கச் சென்று மோசமான வானிலை காரணமாக மாயமானார்.

தொடர்ந்து, உறவினர்கள் மேற்கொண்ட முறைப்பாட்டின் பேரில் கடற்கரைப் பாதுகாப்புப் படையினர் தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். இருந்தும் அவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அவர் கடலில் விழுந்து சாவடைந்திருக்கலாம் எனக் கருதினர்.





ஆனால் ஆச்சரியப்படும் விதமாக மிகப்பெரிய ராட்சதத் திமிங்கிலத்தின் கழிவில் இருந்து மயங்கிய நிலையில் அவரை மீட்டு உள்ளனர். தன்னைத் திமிங்கிலம் விழுங்கிவிட்டதாகவும், தான் 72 தற்போது மணி நேரம் திமிங்கிலத்தின் வயிற்றில் இருந்ததாகவும், தற்போது அங்கிருந்து மீண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து மார்க்கியூஸ் கூறியதாவது:-

"நான் இதுவரை உயிருடன் இருந்தது ஆச்சரியமான விடயம்தான். நான் நல்ல குளிரிலும், இருட்டிலும் இருந்தேன். எனது நீர் புகமுடியாத மணிக்கூட்டில் இருந்த வெளிச்சத்தில் திமிங்கிலத்தின் கழிவுகளைத் தான் சாப்பிட்டேன். அங்கிருந்த நாற்றம் தாங்க முடியவில்லை. அங்கிருந்த செரிக்காத உணவுகளின் துர்நாற்றம் இன்னமும் என்னை விட்டு நீங்கவில்லை. மூன்று நாள்கள் குளித்தால்தான் இந்த நாற்றம் போகும்" எனக் கூறினார். "இது உண்மையில் மிகவும் அதிசயமான விடயம்தான். எனது வேண்டுதலை கடவுள் கேட்டுள்ளார். நான் நம்பிக்கையைக் கைவிடாமல் கடவுளை வேண்டிக்கொண்டே இருந்தேன். இப்போது நான் சாவிலிருந்து மீண்டுள்ளேன்"- இவ்வாறு அவர் தெரிவித்தார். (த-ரி4)

## த்த நிதி



எம்மிடம் இல்லை

ள் கொண்டுவரப் (த-ரி4)

## நாய்களுக்குச் சிப்

லண்டன், ஏப்.8

இங்கிலாந்து நாட்டில் ஒவ்வொரு குடும்பத்திலும் செல்லப் பிராணிகளாக நாய்களை வளர்க்கிறார்கள்.செல்லமாக வளர்க்கும் நாய்கள் காணாமற் போனால் குடும்பத்தில் ஒருவர் மாயமானதாக உணரும் அவர்கள், குறித்துப் பொலிஸில் முறைப்பாடு கொடுக்கிறார்கள்.

இந்த நிலையில் இங்கிலாந்தில் நாய் வளர்ப்பில் புதிய சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி நாய்களின் கழுத்துக்கு பின்புறம் தோலின் கீழ் பகுதியில் மைக்ரோ சிப் என்ற நுண் சிப் ஒன்றைப் பொருத்தவேண்டும். அதில் 15 எண்கள் கொண்ட தனிக் குறியீடு பொறிக்கப்பட்டு அரிசி அளவில் இருக்கும். நேற்று முன்தினம் முதல் சுகாதாரம், சுற்றுச் சூழல் அமைச்சினால் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்து, ஸ்கொட்லாந்து மற்றும் வேல்ஸ் ஆகிய இடங்களில் வளர்க்கப்படும் நாய்களுக்கும், பிறந்து 8 வாரங்களுக்குள் இந்த மைக்ரோ சிப்பைப் பொருத்தவேண்டும். அறிவிப்பு விடுக்கப்பட்டு 21 நாள்களுக்குள், இவ்வாறு பொருத்தாவிட்டால் 500 ஸ்ரேலிங்பவுண்டுகள் குற்றப்பணமாக அறவிடப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நாய்களில் பொருத்தப்படும் மைக்ரோ சிப்பை ஸ்கான் செய்யும்போது அதன் உரிமையாளர் எவர் என்று அறிய முடியும். இதனால் தவறவிடப்படும், காணாமற்போகும் நாய்களை மீட்டு உரிமையாளரிடம் ஒப்படைக்க இயலும்.

இந்த சிப்பில் தகவல்களை மாற்றியமைக்கவும் முடியும். ஒருலட்சத்து 20 ஆயிரம் நாய்கள் உரிமையாளர்களால் கைவிடப்பட்டுக் காப்பகத்தில் வளர்க்கப்படுகின்றன. இதனைத் தடுக்கும் நடவடிக்கையாக இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது. இதனால் நாய்ப் பிரியர்கள் தமது நாயைத் தவறவிடுவதற்கான வாய்ப்புக்கள் குறையும் என அதிகாரிகள் தெரிவித்தனர். (த-ரி4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மாகாண அரசின்

# அரசியல் தீர்வுத் திட்ட வரைவு

**வடக்கு மாகாண சபையினால் தயாரிக்கப்பட்ட அரசியல் தீர்வுத் திட்ட வரைபை வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் சபையில் நேற்று முன்மொழிந்தார். இந்த வரைவை, முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனையும், அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானத்தையும் இணைத் தலைவர்களாகக் கொண்ட குழு தயாரித்திருந்தது. இந்தத் தீர்வுத் திட்ட வரைவின் உள்ளடக்கம் இங்கே.**

**அரசியல் தீர்வு மற்றும் அரசியல் யாப்புக்கான கொள்கை வரைவு முன்மொழிவுகளுக்குரிய முன்னுரை**

இலங்கையிலுள்ள தமிழர்கள் அவர்களுடைய பிராந்தியம், மொழி,மதம் மற்றும் பண்பாடு ஆகியவற்றின் காரணமாக சிங்கள மக்களிலிருந்து வேறாக்கப்பட்டு ஓர் தனித்துவமான குழுவாகக் கணிக்கப்படுகிறார்கள்.

மேலும் ஐரோப்பியரால் கைப்பற்றப்பட்ட தொடக்க காலத்தில் இலங்கையில் மூன்று தனித்துவமான இராச்சியங்கள் காணப்பட்டன அதாவது ஒரு தமிழ் இராச்சியம் மற்றும் இரு சிங்கள இராச்சியங்கள். தமிழ் இராச்சியமானது 1619ம் ஆண்டு போர்த்துக்கேயரிடம் வீழ்ச்சியடைந்தது. டச்சுக்காரர் போர்த்துக்கேயரை 1658ஆம் ஆண்டு வெளியேற்றியதுடன் தொடர்ச்சியாக 1796ஆம் ஆண்டு பிரித்தானியரிடம் சரணடைந்தனர்.



மேலும் வெவ்வேறு பிரதேசங்களாக உள்நாட்டில் நிர்வகிக்கப்பட்டு வந்த அத்தனித்துவமான இராச்சியங்கள் 1833ஆம் ஆண்டு பிரித்தானியரால் ஒன்றாக்கப்பட்டு தனியான நிர்வாக அலகாக்கப்பட்டது. இது தீவின் வெவ்வேறு அலகுகளிலிருந்த மக்களின் சம்மதமின்றி நிர்வாக வசதியைக் கருதியே மேற்கொள்ளப்பட்டது.

மேலும் பிரித்தானியர்கள் அதன் பின்னர் ஆங்கிலத்தை அரசாங்கத்தின் மொழியாகக் கொண்ட ஒரு பொதுவான நிர்வாகத் தொகுதியை ஏற்படுத்தினர். இதன்மூலமாக அவர்கள் காலாதி காலமாக வெவ்வேறாக வசித்த மக்கட் குழுக்கள் இரண்டையுஞ் சேர்த்து வைத்தனர்.

மேலும் 1919ஆம் ஆண்டுக்கு முன்னர் பிரித்தானியர்கள் தமது அரசியல் அதிகாரங்களில் சிலவற்றை மக்களுடன் பகிர்ந்து கொள்வதற்கு மறுத்து வந்தனர்.

மேலும் 1919ஆம் ஆண்டில் பிரித்தானியர்கள் தமது அதிகாரங்களில் சிலவற்றை உள்நாட்டுத் தலைவர்களுடன் பகிர்ந்து கொள்வதற்குத் தயாராகவிருந்தமை தெளிவாகியபோது, தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கு மிடையிலான முரண்பாடு தோற்றம் பெற்றது.

மேலும் சிங்களத் தலைவர்களாகிய சேர் ஜேம்ஸ் பீரிஸ், திரு.ஈ.ஏ.சமரவிக்ரம ஆகியோர் நிலரீதியான பிரதிநிதித்துவத்தை 1919ஆம் ஆண்டின் அரசியல் யாப்பில் பெற்றதன் பின்னர் அதிகளவில் தமிழர்களைக் கொண்டிருந்த கொழும்பு தேர்தல் தொகுதிக்குரிய தமிழ்ப் பேசும் மக்களின் குழுரீதியான சமூக உரிமைகளை மறுத்தனர். வடக்கு-கிழக்கில் தமிழ் மக்கள் தொன்று தொட்டு பெரும்பான்மையினராக இருந்து வந்துள்ளமையால் தெற்கில் அவர்கள் எந்தவித சலுகைகளையும் பெற வேண்டியதில்லை என்று வாதித்தார்கள் அவர்கள்.

அதாவது அவர்கள் தங்கள் கூற்றினால் வடக்கு-கிழக்குத் தமிழ் மக்களின் தனித்துவத்தை அங்கீகரித்தார்கள்.

மேலும் வயதுவந்தோருக்கான உலகளாவிய வாக்குரிமையானது 1931ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப் பட்டிருந்தது.

மேலும் 1945ஆம் ஆண்டு அதிகாரத்தை நாட்டு மக்களுக்குக் கையளிப்பதற்குரிய நேரம் வந்தபோது அப்போதைய அமைச்சரவையானது புதிய அரசியல் யாப்புக்காகத் தமது சொந்த முன்மொழிவுகளைச் சமர்ப்பித்தது.

மேலும் அவற்றில் இலங்கையிலுள்ள சிறுபான்மையினரைக் கீழ்நிலையிலும் பெரும்பான்மையினரில் தங்கியிருக்கும் வகையிலும் அவற்றில் குறிப்பிடப் பட்டிருந்தமையால் தமிழர்கள் அவர்களின் முன்மொழிவுகளை ஒருமித்த குரலில் நிராகரித்தனர்.

மேலும் தீவுக்கான அரசமைப்புச் சீர்திருத்தத்துக்குரிய எந்தவொரு முன்மொழிவையும் பரிசீலித்துக் கலந்துரையாடுவதன் பொருட்டு இலங்கையில் சோல்பெரி பிரபுவின் தலைமைத்துவத்தின் கீழான அரச ஆணைக் குழுவானது அனுப்பப்பட்டது.

மேலும் இந்த நாட்டு மக்களின் கைகளுக்கு அதிகாரங்களை நடுநிலைமை உடன் பிரித்தானியர்களிடம் இருந்து பெற்றுக் கொடுக்க முற்பட்டபோது சிறுபான்மையினரின் மனங்களில் அச்சவுணர்வும் ஐயமும் நிலவிய வெளிப்படையான நிலைமையின் காரணமாக, அரச ஆணைக்குழுவானது (அரசியல் யாப்பில்) சிறுபான்மையினரின் பாதுகாப்புக்கான தேவை பற்றி உசாரடைந்தது.

மேலும் பிரதானமாகச் சிங்களவர்களைக் கொண்டிருந்த அமைச்சரவையானது சிறுபான்மையினரின் மன நிறைவு சிங்கள மக்களுடைய சொந்த நலனுக்கு மட்டுமல்லாது முழுத் தீவினதும் நலனுக்கும் அத்தியாவசியமானது என்பதை முழுமையாக அறிந்திருந்தனர் என்ற நம்பிக்கையில் அமைச்சரவையின் உறுதிமொழிகளை ஆணையாளர்கள் ஏற்றுக்கொண்டனர்.

மேலும் பிரித்தானிய அரசானது ஆணைக்குழுவின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு வெள்ளை அறிக்கையை வழங்கியதுடன் பிரித்தானியர்களால் மேற் கொள்ளப்படும் எந்தவொரு சட்ட நடவடிக்கையும் அமைச்சரவையின் முன்மொழிவுகள் ஏற்றுக்கொள்ளப்படுவதை நிபந்தனையாகக் கொண்டிருக்கும் என்பது சிறுபான்மையினரால் அவர்களுக்குத்; தெளிவுபடுத்தப்பட்டது.

மேலும் சிங்களத் தலைவர்களின் பல சத்தியங்களாலும் உறுதிமொழிகளாலுமே சிறுபான்மையோர் அவர்களின் கூற்றுக்களை ஏற்றுக் கொள்ள வேண்டி வந்தது. உறுதிமொழிகள் ஈற்றில் வஞ்சகம் மிக்கதாக மாறின.

மேலும் 1947ஆம் ஆண்டின் சோல்பரி அரசமைப்பானது சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாப்பதன் பொருட்டு உறுப்புரை 29 ஐ வழங்கியிருந்தது.

மேலும் பிரித்தானிய அரசாங்கத்தால் நிறுவப்பட்ட நிர்வாக ஒருமைப்பாடானது பேணப்படும் என்ற நம்பிக்கையில் தொடர்ந்தும் தமிழர்களினதும் ஏனைய சிறுபான்மையினரினதும் நலன்களைப் பாதுகாப்பதன் பொருட்டு ஒரு கருத்தைத் தமிழர்கள் முன்வைத்தார்கள். அதாவது அதிகாரமானது ஒரு சமூகத்தில் செறிவாக்கப்படுவதற் கான அபாயத்தைத் தவிர்த்து சகல சமூகங்களிடையேயும் மக்களிடையேயும் முழுமையாக சமனாகப் பகிரப்படுவதை உறுதிப்படுத்தக்கூடியதாக அவர்கள் சமனான பிரதிநிதித்துவத்தை முன்மொழிந்தார்கள். ஆனால் இது சோல்பரி ஆணைக்குழுவால் எமக்கு அளிக்கப்படவில்லை.

மேலும் 1948இல் சோல்பரி அரசமைப்பானது இயற்றப்பட்டதைத் தொடர்ந்து உடனடியாகவே பாகுபாட்டுக்குரிய பிரஜாவுரிமைச் சட்டமும் 1949 இல் பாகுபாட்டுக்குரிய 1949ஆம் ஆண்டுக்குரிய 48 ஆம் இலக்க இலங்கை (நாடாளுமன்ற) தேர்தல்கள் (திருத்தச்) சட்டமும் நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்டமையால் மில்லியன் கணக்கான தமிழர்கள் தேசிய நீரோட்டத்திலிருந்து ஓரங்கட்டப்பட்டதுடன் முன்னர் அனுபவித்த வாக்களிப்பதற்கான உரிமையையும் இழந்தனர்.

மேலும் சுதந்திரமடைந்து ஒரு வருட காலத்தினுள்ளேயே ஒரு சமூகமானது சகல அதிகாரங்களையும் தனது கைகளில் திரட்டிக்கொள்வதற்கு முயற்சிக்கையில் ஒரே நாட்டினுள் இரண்டு வேறுபட்ட மக்களை ஒருங்கிணைப்பதற்குரிய ஒரே வழியாக சமஷ்டி அரசியல் முறையானது காணப்பட்டது. உண்மையில் முன்னாள் பிரதம மந்திரி திரு.எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்கா அவர்கள் 1926ஆம் ஆண்டிலேயே சமஷ்டி முறைமையை வன்மையாக வலியுறுத்தியிருந்தார்.

(17 ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மாகாண அரசின் .....

(16 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் தனது உரை யொன்றில் அவர்கள் கடந்தகால வரலாற்றைக் கருது வார் களேயானால் தமிழர்கள், கரையோரச் சிங்களவர்கள் மற்றும் கண்டியச் சிங் களவர்கள் ஆகிய மூன்று சமூகத்தி னரும் ஆயிரக்கணக்கான வருடங்களாக ஒருமித்து வாழ்ந்திருப்பதையும் அவர் கள் இரண்டறக்கலப்பதற்கான எந்த வொரு போக்கையும் வெளிப்படுத்தி யிராமையையும் நோக்கலாம் எனக் கூறியமையானது 1926 ஜூலை 17ஆம் திகதிய சிலோன் மோர்னிங் லீடரில் அறிக்கையிடப்பட்டுள்ளது.

மேலும் சிங்களச் சமூகம் அரசியல் அதி காரங்கள் யாவற்றையும் தனது கைகளில் திரட்டுவதற்கெதிரான பெரும் எதிர்ப்பும் மற்றும் சமஷ்டிமுறைமைக் கான தேவைப்பாடும் இருந்தபோதும், 1956ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்டமானது இயற் றப்பட்டு இலங்கையில் சிங்களமொழியே தனித்த அரசகரும மொழியாக இருக்க முடியும் என்ற ஏற்பாட்டை வழங்கியது. ஓர் அரச உத்தியோகத்தராகிய திரு. கோடீஸ்வரன் அவர்களால் தாக்கல் செய்யப்பட்ட ஒரு வழக்கில் அவர் சோல் பரி அரசமைப்பின் பிரிவு 29 இன் ஏற் பாடுகளுக்கு முரணான சிங்கள மட்டும் சட்டத்தின் செல்லுபடித்தன்மை பற்றிக் கேள்வியெழுப்பினார். இவ்வழக்கானது இயலுமானவரை உயர் நீதிமன்றத்தால் தாமதப்படுத்தப்பட்டுப் பின்னர் கோம றைக் கழகத்துக்கு அனுப்பப்பட்டது. அத் துடன் கோமறைக் கழகமானது உயர் நீதிமன்றத்தை சிங்களம் மட்டும் சட்டத்தின் செல்லுபடித்தன்மை பற்றி ஆராயுமாறு பணித்த பின்னருங்கூட, இவ்வழக்கா னது சிங்களம் மட்டும் சட்டத்தின் செல் லுபடி பற்றிய நீதிமுறையான அறிவிப் பைத் தவிர்க்கவல்லவாறு 1972ஆம் ஆண்டுக்குரிய அரசமைப்பானது நடைமுறைக்கு வரும்வரை முடக்கப் பட்டிருந்தது.

மேலும் 1970 இல் தரப்படுத்தல் செயல் முறையினூடாக தமிழ் மாணவர்களுக்கு உயர்வான தராதரம் ஒன்றானது ஒழுங்கு செய்யப்பட்டமையின் மூலமாக தமிழ் மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதி யானது மட்டுப்படுத்தப்பட்டது. சிறப்புத் தேர்ச்சி கைவிடப்பட்டு கல்வி நிர்வாகத் தில் இனரீதியான முறையொன்றை அரசு தாபித்தது.

மேலும் தொடர்ச்சியாக வந்த அரசுகளால் தமிழ் பேசும் மக்கள் வாழ்ந்த பகுதிகளில் சிங்களக் குடியேற்றமானது மேற்கொள் ளப்பட்டது. 1961 இலிருந்து வடக்கில் இராணுவம் நிலைநிறுத்தப்பட்டது.

மேலும் தமிழ் பேசும் மக்களிடமிருந்து மிகவும் பலத்த எதிர்ப்பு நிலவியபோதும் 1972 இல் ஓர் புதிய குடியரசு அரசமைப் பானது நிறுவப்பட்டது. 1972ஆம் ஆண்டின் அரசமைப்பானது சோல்பரி அரசமைப்பில் ஏற்பாடு செய்யப்பட்டி ருந்த குறைந்தளவிலான பாதுகாப்பு களைக் கூட அகற்றியதுடன் சிங்கள வரல்லாத, பௌத்தர்களல்லாத குடித் தொகையில் தடைகளைத் திணித்தது.

மேலும் தமிழர்கள் அவர்களுடைய பிராந்திய, மொழி, சமய மற்றும் பண் பாட்டு ஒருங்கமைவைப் பேணுவதன் பொருட்டுஆறுபுள்ளிவிதிமுறையொன்றை அவர்களின் ஆகக்குறைந்த தேவைப் பாடாக முன்வைத்தனர்.

**அதாவது அவ் ஆறு புள்ளி விதி முறையானது பின்வருமாறு :**

அ) அரசமைப்பில் சிங்கள மொழியைப் போன்ற அதே நிலையானது தமிழ் மொழிக் கும் வழங்கப்படல் வேண்டும்.

ஆ) இந்த நாட்டைத் தம்முடைய தாய் நாடாகக் கொண்ட சகல தமிழ்ப் பேசும் மக்களுக்கும் முழுமையான பிரஜா வுரி மைக்கான அரசமைப்பு உத்தரவாதமானது இருத்தல் வேண்டும். அவர்களுக் கிடையே வெவ்வேறு வகையான பிரஜைகளோ பாகுபாடோ இருத்தல் கூடாது. அத்துடன் ஒருவருடைய பிரஜாவுரிமையை இல் லாதொழிப்பதற்கு நாட்டிற்கு அதிகாரம் இருத்தல் கூடாது.

இ சகல மதங்களுக்கும் சமனான பாது காப்பு வழங்கும் விதமாக அரசானது மதச்சார்பற்றதாக இருத்தல் வேண்டும்.

ஈ) அரசமைப்பானது இன – பண்பாட்டு அம்சங்களில் சகல நபர்களுக்கும் சமத் துவத்தை உத்தரவாதப்படுத்தி வலுவான அடிப்படை உரிமைகளுக்குரிய ஏற்பாடு களை வழங்குதல் வேண்டும்.

உ)அரசமைப்பானது சாதி மற்றும் தீண்டத் தகாமையை இல்லாதொழிப்பதற்கான ஏற்பாடுகளை வழங்குதல் வேண்டும்.

ஊ) ஓர் ஜனநாயக சோலிசச் சமூகத்தில் அதிகாரமானது அரச அதிகாரமாக இல்லாது மக்கள் அதிகாரமாக இருப் பதற்கு அரசின் பன்முகப்படுத்தப்பட்ட அரசியல் கட்டமைப்பொன்றே பங்கேற்பு ஜனநாயகம் ஒன்றைப் பரிணமிக்கச் செய்ய உதவும்.

மேலும் அவ்வாறானதொரு இடையூறற்ற, தீங்கற்ற விதிமுறைகூட அரசால் முகச் சுளிப்புக்குரியதாகவே நோக்கப்பட்டது.

மேலும் சுதந்திரத்தின் பின்னரான எமது அண்மைக் காலத்தய வரலாற்றில் சிங்களத் தலைவர்கள் இரு தேசிய, இரு மொழிக்குரிய, பல் மத நாடாகிய இலங் கையை சிங்களவர்களாகிய ஒரே தேசி யத்தைக் கொண்ட ஒன்றுபட்ட – ஒரே நாடாக, சிங்களத்தை மாத்திரம் கொண்ட ஒன்றுபட்ட மொழிக்குரிய நாடாக, பௌத் தத்தைக் கொண்டியங்கும் ஒன்றுபட்ட மதத்திற்குரிய நாடாக மாற்றியமைத்து தமிழர்களுக்கும் ஏனையோருக்கும் எதி ராக சமூக மற்றும் பண்பாட்டு தன் மயமாக் கலுக்கான வழியமைக்கும் நோக்கத் தைக் கொண்டிருப்பது புலனாகிறது.

மேலும் 1956, 1957, 1958, 1961, 1974, 1977 மற்றும் 1983 களில் தமிழர் கள் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டனர். 1958இல் வடக்கு மற்றும் கிழக்கு மாகா ணங்களுக்கு வெளியிலிருந்த தமிழர் கள் ஒழுங்கமைக்கப்பட்ட சிங்களக் குழுக்களால் கொலை, சித்திரவதை, கற்பழிப்பு மற்றும் சூறையாடலுக்கு உட் படுத்தப்பட்டனர். 1983 இல் தமிழர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட முழுமையான இனவாதத் தாக்குதலானது ஆயிரக் கணக்கானவர்களை வெளிநாடு களுக்கும் ஏனையோரை வடக்கு மற்றும் கிழக்குக்கும் அனுப்பிய மையானது வடக்கும் கிழக்குமே இலங்கையிலுள்ள தமிழர்களுக்கு முழுமையான பாதுகாப் புடைய புகலிடம் என்பதை அங்கீகரிப் பதாக அமைந்தது.

மேலும் அதிகாரங்களைப் பகிரும் விதமாக அரசாங்கத்துக்கும் தமிழ்ச் சமூகத்தின் தலைவர்களுக்கும் இடையில் கைச்சாத் திடப்பட்ட 1957ம் ஆண்டு ஜூலை மாதத் தில் பண்டாரநாயக்கா – செல்வநாயகம் உடன்படிக்கை மற்றும் 1965ம் ஆண் டின் டட்லி – செல்வநாயகம் உடன் படிக்கை அடங்கலாகப் பல்வேறு உடன் படிக்கைகள் சிங்களப் பெரும்பான்மை அரசால் கைவிடப்பட்டு செயற்படுத் தப்படாதிருந்தன.

மேலும் தமிழ்த் தரப்பினரின் ஏமாற் றமும் விரக்தியும் 1976இல் வட்டுக் கோட்டைத் தீர்மானத்தை ஒருமித்து நிறைவேற்ற வழிவகுத்தன. 1977ஆம் ஆண்டு தேர்தலில் தமிழர் ஐக்கிய விடுதலைமுன்னணியானது(ரி.யு.எல்.எவ்) தனித்துவமானதோர் பாதையை ஏற்படுத்துவதற்கான முதலாவது தமிழர் தேசியக் கட்சியாகத் தோற்றம்பெற்றது. அது வடக்கிலும் கிழக்கிலும் பெரும் பான்மையான வாக்குகளைப் பெற்று, 18 ஆசனங்களை வென்று நாடாளும ன்றத்தில் பாரிய எதிர்க்கட்சியாக உருவெடுத்தது.

மேலும் தமிழ்ச் சமூகம் முழுவதையும் பாரதூரமாகப் பாதித்த 1983ஆம் ஆண்டு படுகொலைகளும் தமிழ் மக்களுக்கு எதி ரான இனப்படுகொலைக்கு நேரடியாக இட்டுச் சென்ற வன்முறைச் செயற்பாடு களும் தொடர்ச்சியாக முப்பது வருடங் களாக இளைஞர்கள் ஆயுதமேந்த வழிவகுத்தன. மேலும் தமிழர்களின் கருத்துக்களையும் உணர்வுகளையும் மற் றும் எதிர்பார்ப்புக்களையும் அபிலாசை களையும் கருத்திற்கொள்ளாத தீவின் பெரும்பான்மைச் சமூகத்தின் மேலாதிக்க நடத்தைக்கு எதிரான இளைஞர்களின் இயல்பான பதிலிறுத்தலாகிய ஆயுத மேந்திய புரட்சியானது பயங்கரவாதமாகத் திரித்துக்கூறப்பட்டதுடன் 1979ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடை (தற்காலிக) ஏற்பாடு கள் சட்டமானது கொண்டுவரப் பட்டது. இது நியதிச்சட்டப் பதிவேட்டை இன்று வரை தொடர்ச்சியாக அணிசெய்கிறது.

மேலும் போர்க் காலத்தில் பல உடன்பாடு கள் செய்துகொள்ளப்பட்டன. 1985ஆம் ஆண்டில் திம்புக் கோட்பாடுகள் தமிழ் மக் களின் சுயநிர்ணய உரிமையை வலி யுறுத்தியது. 1987இல் இந்திய – இலங்கை உடன்பாடு மாகாணசபைகளுக்கு வழி வகுத்தது. 2002 டிசெம்பர் மாதத்தில் ஒஸ்லோ பிரகடனமானது சமஷ்டி அடிப்படையில் பிரச்சனையைத் தீர்க்கலாம் என்ற கருத்தை வலியுறுத்தி யது. 2003ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத் தில் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை பற்றிப் பேசப்பட்டது. 2004ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் தமிழ்த் தேசி யக் கூட்டமைப்புடன் புலிகள் இயக்கம் இணைந்து 22 நாடாளுமன்ற ஆசனங் களைப் பொதுத் தேர்தலில் வடக்கு- கிழக்கு மாகாணங்களில் கைப்பற்றியது. தமிழ் மக்கள் சம உரித்துக்களுக்காகப் போராடியமை, அதிகாரப் பகிர்வை நாடி யமை, உள்ளூர் சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தியமை யாவும் தென்னவர்களா லும் பல்வேறு வெளிநாடுகளாலும் தீவிர வாதமாகவும் பயங்கரவாதமாகவும் சித் திரிக்கப்பட்டன. தமிழ்ப்பேசும் மக்களின் அபி லாசைகள் உதாசீனம் செய்யப்பட்டன.

மேலும் பயங்கரவாதத்தைக் கவனத்திற் கொண்டுள்ள பல்வேறு வலிமைமிக்க நாடுகளின் உதவியுடன் 2009ஆம் ஆண்டுமே மாதம் தமிழ் இளைஞர்களின் புரட்சியானது இலங்கை அரசால் வெற்றியீட்டப்பட்டு அவர்களின் இராணுவ அலகு அழிக்கப்பட்டுவிட்டது. எனினும் தமிழ் மக்களின் அடிப்படைக் கோரிக்கை கள் எந்தவிதத்திலும் இதுவரையில் மத்திய அரசால் முறையாகப் பரிசீலிக்கப்பட வில்லை.

மேலும் 2009 மே மாதத்திலிருந்து எந்த வொரு முறையிலும் வன்முறைமிக்க அரசியல் நடவடிக்கை தமிழ் மக்களி டையே எழாத போதிலும் இராணுவம் தொடர்ச்சியாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிலைநிறுத்தப்பட்டுள் ளமையானது மத்திய அரசு தொடர்ச்சியா கத் தமிழர்கள் மீது ஆதிக்கம் செலுத்த விரும்புவதுடன் அதிகாரப்பகிர்வில் சற்றேனும் ஆர்வங்காட்டவில்லை எனக் கருத வழிசமைக்கிறது. அதேசமயம் தமிழ் பேசும் பிரதேசங்களுக்கு வெளி யிலிருந்து சிங்களவர்களைக் கொண்டு வந்து பாரம்பரியமாகத் தமிழ் பேசும் பிரதேசங்களில் அரசால் குடியேற்றப் படும் செயற்பாடானது தமிழ் பேசும் மக் களால் இன்றுவரை வாழிடமாக்கப்பட் டுள்ள பிரதேசங்களில் தொடர்ச்சியாக மக்கட் பரம்பலில் மாற்றங்களை ஏற்படுத்து கின்றது.

மேலும் ஒளிவுமறைவற்ற பொறுப் புக்கூறும் நல்லாட்சிக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு ஆட்சிக்கு வந்துள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேனவினால் தலைமை தாங்கப்படும் தற்போதய அரசானது தமிழ் பேசும் மக் களின் எதிர்பார்ப்புக்களையும் அபி லாசைகளையும் இனங்கண்டு பொருந் திப்போவதற்கு எண்ணியுள்ளது. அந்தப் பிண்ணனியில் அரசியல் தீர்வு பெற்று அமைதியானதொரு சமூகத்தை, இத் தீவில் உருவாக்க அரசியலமைப்பு சம்பந்தமாக எமது கருத்துக்களை முன் வைப்பதற்கான தேவையெழுந்துள்ளது.

மேலும் இத்தீவிலுள்ள தமிழ் பேசும் மக் களின் அபிலாசைகளைப் பூர்த்திசெய்யும் முகமாக அவர்களின் கருத்துக்களை அரசியல் தீர்வுக்கான ஆவணமொன் றின் உருவாக்கத்தில் பிரகடனப்படுத் துவது வட மாகாண சபைக்கு இன்றி யமையாததாகவுள்ளது.

ஆகவே வட மாகாண சபையின் மக்கள் பிரதிநிதிகளாகிய நாங்கள் அரசால் தயா ரிக்கப்படும் புதிய அரசமைப்போ அல் லது அரசியல் தீர்வுக்கான முன்மொழிவு களோ பின்வரும் கொள்கை முன்மொழிவு களை கருத்திற்கொள்ளல் வேண்டும் என இத்தால் முடிவுசெய்கின்றோம் –

01. இந்தியாவில் மாநிலங்கள் மொழிரீதி யாகப் பிரிக்கப்பட்டிருப்பதைப் போல, இலங்கையானது அடிப்படையில் இரண்டு பரந்த மாநிலங்களாக, அதா வது பெரும்பான்மையாகத் தமிழ்ப் பேசும் பிரதேசத்தைக் கொண்ட வட மற் றும் கிழக்கு மாகாணங்கள் ஒரு மாநில மாகவும் மற்றும் பெரும்பான்மையாகச் சிங்களம் பேசும் பிரதேசத்தைப் கொண்ட ஏனைய ஏழு மாகாணங்கள் மற்றொரு மாநிலமாகவும் பிரகடனப்படுத்தப்படல் வேண்டும்.

02. இவ்விரு பரந்த மொழிரீதியான மாநிலங் களிலும் தமிழ்ப் பேசும் முஸ்லிம்கள் வடக்கு மற்றும் கிழக்கில் ஓர் அலகாகவும் தமிழ்ப் பேசும் மலையகத் தமிழர்கள் நாட்டின் ஏனைய பகுதியில் ஓர் அல காகவும் இனங்காணப்பட்டு, அங்கீகரிக் கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

03. சிங்களம் பேசுவோரைக் கொண்ட மாநிலமானது அதனுள்ளே பிரிக்கப்படல் வேண்டுமா என்ற கேள்வியானது சிங்கள மக்களால் தீர்மானிக்கப்படல் வேண்டும்.

04. பெருநகருக்குரிய கொழும்புப் பிரதேச மானது தனியானதோர் நிர்வாகத்தைக் கொண்டு நாட்டின் தலைநகர அலகாக அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

05. மேலே தொடர்ச்சியாக இந்த ஆவ ணத்தில் ஒப்பிக்கப்பட்டிருக்கும் வரலாற்று ரீதியான பின்புலம் மற்றும் 1833ஆம் ஆண்டுக்கு முன்னரும் பின்னருந் தமிழ்ச் சமூகத்தால் நூற்றாண்டுகளாகப் பேணப்பட்டு வந்த தனித்துவத் தன்மை யின் அடிப்படையில் எந்தவொரு சமூகத் தைச் சேர்ந்த மக்களும் ஏனைய சமூகங் களில் ஆதிக்கம் செலுத்தவோ அல்லது அவர்களில் தங்கியிருப்பவர் களாக இருக்கும் வகையில் அவர் களைச் சார்ந் திருக்கவோ வேண்டியதில்லை என்பதை உறுதி செய்து கொள் வதற்கும், ஒற்றை யாட்சி முறைக்குரிய அரசாங்கத் துக்குப் பதிலாக கூட்டாட்சி சமஷ்டி முறைக்குரிய அரசொன்றை நிறுவ வேண்டியது அத்தி யாவசியமாகின்றது. இலங்கைப் பிரஜை ஒவ்வொருவரும் சட்டரீதியாக இன்னொரு வருக்குக் கீழானவர் என அவனோ அல் லது அவளோ உணர்வதற்குரிய வழி முறையை இல்லா தொழிப்பது உறுதி செய்யப்பட வேண் டியது அத்தியாவசிய மாகும். வெறும் எண்ணிக்கையில் பெரும் பான்மையாகவிருக்கும் அவனுடைய அல்லது அவளுடைய சமூகங்கள் சட்ட ரீதியாக ஏனையோரிடமிருந்து தமக்கென்று அளவுமீறிய பயனைக் கோரக் கூடாது.

06. இலங்கையில் தமிழ் பேசுவோரைக் கொண்டுள்ள வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களினுள் தற்போதைய வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் ஒன்றிணைத்தலின்போது முஸ்லிம் தன்னாட்சி பிராந்திய சபையானது உருவாகும். இத்தன்னாட்சிப் பிராந்தி யத்தின் நிலை, பரிமாணம் மற்றும் நியாயாதிக்க எல்லைகள் ஆகியன தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் பிரதிநிதி களுக்கிடையில் கலந்துரையாடப்பட்டு முடிவு செய்யப்பட வேண்டும். மொழிரீதி யிலான தமிழ்ப் பேசும் வடகிழக்கு மாநில மானது மாநில நாடாளுமன்றத்தைக் கொண்டிருக்கும்.

*(மிகுதி நாளை)*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வரலாற்றில் இன்றைய தினம்


217 – ரோமப்பேரரசர் கறகல்லா படுகொலை செய்யப்பட்டார்.
632 – இரண்டாம் சறிபேர்ட் அரசரும் அவரது ஆண் குழந்தையான சில்பெறியும் படுகொலை செய்யப்பட்டனர்.
1913 – செனட்டர்களை நேரடித் தேர்தல் முறைமூலம் தேர்ந்தெடுக்கும் சட்டமான 17 ஆவது திருத்தத்துக்கு அமெரிக்காவில் அங்கீகாரம்.
1924 – துருக்கியில் சீர்திருத்தத்தின் ஒரு பகுதியாக ஷரியா நீதிமன்றங்கள் இல்லாமல் செய்யப்பட்டன.
1945 – இரண்டாம் உலக மகாயுத்தம். 400 வரையானவர்களை நாஸி முகாமுக்கு ஏற்றிச் சென்ற புகையிரதம் விமானத் தாக்குதலில் அழிக்கப்பட்டதனையடுத்து தப்பிப் பிழைத்தோர் நாஸிகளால் படுகொலை செய்யப்பட்டனர்.
1950 – இந்தியாவும் பாகிஸ்தானும் லியாகுத் நேரு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன.
1952 – அமெரிக்க ஜனாதிபதி ஹாரி ரூமன் நாடுதழுவிய வேலை நிறுத்தத்தைத் தடுப்பதற்காக உள்நாட்டு உருக்கு ஆலைகளை கையகப்படுத்துமாறு உத்தரவு விடுத்தார்.
1954 – கனடா றோயல் விமானப் படை விமானம் ஹவார்ட்டும், கனடா பன்னாட்டு விமான சேவை விமானம் கனடெயர் நோர்த் ஸ்ராரும், மூஸ்ஜோவுக்கு மேலாக மோதி 37பேர் சாவு.
1954 – தென் ஆபிரிக்க விமாணம் –201 இரவு கடலில் வீழ்ந்து 21 பேர் சாவு.
1959 – அமெரிக்க மாநிலங்கள் ஒன்று சேர்ந்து இன்ரர் அமெரிக்கன் அபிவிருத்தி வங்கி உருவாக்க ஒப்பந்தம் ஒன்றை வரைந்தன.
1964 – மனிதரை ஏற்றிச் செல்லாத ஜெமினி –1 பரீட்சார்த்த பறப்பு மேற்கொண்டது.
1970 – இஸ்ரேலிய குண்டுதாரிகளால் எகிப்திய பாடசாலை தாக்கப்பட்டதில் 46 சிறுவர்கள் கொல்லப்பட்டனர்.
1992 – ஓய்வுபெற்ற ரெனிஸ் வீரர் ஆதர் ஆஷ் தமது இருதய அறுவைச் சிகிச்சையின்போது இரண்டு தடவைகள் குருதி மாற்றத்தின் காரணமாக தாம் எய்ட்ஸ் நோய்க்கு உள்ளானதாக அறிவித்தார்.
1993 – மெஸிடோனியா மக்கள் குடியரசு, ஐக்கிய நாடுகள் சபையில் இணைந்தது.
2004 – டர்பர் யுத்தம்; சூடான் அரசும் இரண்டு புரட்சிக் குழுக்களும் மனிதாபிமான போர் நிறுத்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன.
2005 – பாப்பரசர் இரண்டாம் ஜோன்போலின் இறுதிச் சடங்கில் 4மில்லியன் மக்கள் சமுகமளித்தனர்.



ப.ஜோ.அன்ரியூனஸ்,
கார்மேல் முன்பள்ளி

உதயன் சிறுவர் பகுதியில் 'வர்ணம் தீட்டுவோம் வாங்க' என்ற தலைப்பில் வெளியிடப்படும் சித்திரங்களை, சிறுவர்கள் பலர் ஆர்வத்துடன் வர்ணம் தீட்டி அவற்றை எமக்கு அனுப்பி வைத்து வருகின்றனர். அவர்களுக்கு உற்சாகமூட்டும் வகையில் கச்சிதமான விதத்தில் வர்ணம் தீட்டப்படும் சித்திரங்கள் இந்தப் பகுதியில் வெளியிடப்படும்.

## வர்ணம் தீட்டுவோம் வாங்க....



## அடங்கியது கர்வம்

பச்சைப் பசேல் எனச் செழித்து வளர்ந்த வயல்களுக்கிடையே ஒரு வரப்பு மேட்டில் நெடிதுயர்ந்து தலைநிமிர்ந்து நின்றது பனைமரம் ஒன்று.

சற்றுத் தூரத்துக்கு அப்பால், ஒரு தென்னந் தோப்பும் இருந்தது.

அங்கிருந்த கோணலான தென்னை மரமொன்று பனைமரத்தைப் பார்த்து...

'ஏ..." பனையே.. என்ன இப்படிக் கொஞ்சமும் பணிவில்லாமல் விறைப்பாக நிற்கிறாய்.. இருந்தாலும் உனக்குத் தலைக்கனம் அதிகம் தான் 'என்றது'.

எனக்குத் தலைக் கனம் எள்ளளவும் கிடையாது. இயற்கையே அப்படி" என்றது அடக்கத்துடன் பனை.

"சரி... நீ இவ்வாறு அட்டைக்கரியாக இருப்பதுஉனக்குஅசிங்கமாகஇல்லையா?" மட்டம் தட்டிப் பேசியது தென்னை.

"நீ வீண் வம்புதான் வளர்க்கிறாய்... என்றாலும் பதில் கூறுகிறேன்"

"கருப்பு என்பது நிறங்களுள் ஒன்றே தவிர, தாழ்ந்தது அல்ல. மனிதர்களிடம் நிறபேதம் இருப்பதால்தான் அடிதடி, குத்து வெட்டு என அமைதியிழந்து தவிக்கின்றனர். நம்மை வெட்டி வீழ்த்துகிறவர்களுக்கும்கூட நிழல்தருவதே எமது கடமை என நினைப்பவர்கள் நாங்கள். இன்னல் புரிவோருக்கும் இனியது செய்யும் இனம் நாம்! ஒரு மரமே இன்னொரு மரத்தைப் பழித்தால் மற்றவர்கள் என்னதான் செய்யமாட்டார்கள்... கொஞ்சம் எண்ணிப் பார்."

"மேலும் நிலக்கரிக்குத்தான் 'கருப்பு வைரம்' என்று பெயர். கருத்த மேகந்தானே கனமழை தருகிறது! மழை பெய்தால்தானே உனக்கும் எனக்கும்... ஏன்?... இந்த உலகுக்கே வாழ்வு? இல்லையென்றால் எல்லாருமே கட்டையை விட்டெறிய வேண்டியது தானே? முற்றிய கருப்பு நிறச்சாந்தையே வைரச் சாந்து என்பர்; கருப்பு களங்கமானதோ கவுரவக் குறைவானதோ அல்ல. கவனத்தில் வை 'கருப்பைப் போல் அழகில்லை, காந்தலைப்போல ருசி இல்லை" என்று ஒரு பழமொழியே உண்டு தெரியுமா?" என்று பனை கூறியது!

"வேலி கட்டி நீர் பாய்ச்சி, எருப் போட்டு, மருந்து தெளித்துத் தென்னம்பிள்ளையென ஒரு குழந்தையைப் போற்றிப் பாதுகாப்பது போல என்னை வளர்ப்பார்களே... இப்படி உனக்கென ஓர் உயர்வு ஏதே னும் உண்டா? "பெத்த பிள்ளை காப்பாற்றா விட்டாலும் வைத்த பிள்ளை காப்பாற்றும்" என தென்னம் பிள்ளையை உயர்த்திப் பேசுவர்..புரிகிறதா?" சுய தம்பட்டம் அடித்தது தென்னை.

"உண்மை தான்... உன்னை வளர்ப்பதற்குள் உயிர் போய், போதும் போதும் என்றாகி விடும். அரும்பாடுபட்டு வளர்ப்போருக்கு அரைக் காசுக்கும் பயன்படாமல் வருவோர் போவோர்க்கெல்லாம் வேலிதாண்டிய வெள்ளாடாக தலையை வெளியே நீட்டி மட்டை, இளநீர், தேங்காய் எனக் கொட்டி அழும் 'முடத்தெங்கு' என்ற கெட்ட பெயர் உனக்குத்தானே? என்னைப் பொறுத்தவரை ஒரு சொட்டு நீருக்குக்கூட பிறர்கையை எதிர்பார்க்காமல் என் சொந்தக் காலில் நின்று பலருக்கும் பயன்படுவேன் நான்" பண்புடன் கூறியது பனை.

அவ்வளவுதான்! தெம்பிழந்து போன தென்னை மரத்துக்குத் தேள் கொட்டியது போல் கோபம் உச்சந்தலைக்கு ஏறியது.

"நான் இளநீர், தேங்காய் எல்லாம் தரவில்லையா?" என்றது எரிச்சலுடன்.

நானுந்தான் நுங்கு, பழம், கிழங்கு முதலியவற்றைத் தருகிறேன். 'பசிக்குப் பனம் பழம்' என்பது பழமொழி. ஏழைக்கு ஏற்ற பழமாயிற்றே...' இப்படி ஒருபெரிய பட்டியலே போட்டுக்காட்டியது பனை !

"அதிகப்படியாக அளக்காதே! தென்னம் கீற்று இல்லையெனில், கூரைவேய மாற்று வழி ஏது? ஏழைக்கு இடமளிப்பதே நான்தான்!" பதற்றப்பட்டது தென்னை.

பரம ஏழைக்கும் பனைமட்டைக் குச்சி தானே பங்களா; எதிரியை இளப்பமாக எண்ணாதே!" பக்குவமாகச் சொன்னது பனை.

பனையின் பதில்களால் படபடப்பான தென்னை"ஆயிரந்தான் நீ அடுக்கடுக்காகச் சொன்னாலும், தலை கீழாய் நின்றாலும், என் உயர்வை ஒரு போதும் உன்னால் எட்ட இயலாது என ஆர்ப்பரித்தது.

'வலியச் சண்டைக்குப் போகக் கூடாது. வந்த வம்பை விடக் கூடாது என்று எண்ணியது பனை.

'உலகப்பொதுமறையாகிய திருக்குறளை வள்ளுவர் பனையோலைச் சுவடியில் தானே எழுதினார். குறளோவியம் படைக்க நான் ஒரு சிறு கருவியாக இருந்திருக்கிறேனே. இதைவிடவா எனக்கு இன்னொரு பெருமை வேண்டும்? முக்கடலும் சங்கமிக்கும் கன்னியாகுமரியில், நூற்றுமுப்பத்து மூன்று அடி உயரச்சிலையாகத் திருவள்ளுவர் நின்று திக்கெட்டும் புகழ்பரப்புகிறார்" என அமைதியாகக் கூறியது பனை.

மேலும் வாய்திறக்க வழியில்லாத தனது நிலையை உணர்ந்து மனப் புழுக்கத்துடன் ஆடாமல் அசையாமல் அப்படியே நின்றது தென்னை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலை போகாதே பெண்ணே...

உடுவிலூர் கலா

அன்று அடிமைகளாய் வாழ்ந்து அல்லற்பட்ட பெண்கள் இன்று புரட்சிப் பெண்களாய் மாறி அடிமை விலங்கு உடைக்கப் புறப் பட்டு, பல துறைகளிலும் புதிய வரலாறு படைக்கின்றனர். பேசாமடந்தையாய் வாழ்ந்த பெண் பேசும் பொருளாய் மாறிவிட்டாள். கல்வியின் வாசனையை நுகரமுடியாதவளாய் இருந்தவள், கல்விப் புனலில் நனைந்து சமுதாயத்தையே அறிவு மழையில் நனைய வைக்கிறாள். ஒடுக்கப்பட்டு நெருக்கப்பட்ட மக்களின் கண்ணீரைத் தொட்டுத் துடைக்க கருணை உள்ளத்தோடு களமிறங்கிச் சேவை செய்கிறாள். மண் மீதும் மொழிமீதும் பற்றுக்கொண்டு, ஆயுதமேந்திப் போராடி, உயிர் துறந்து வீரவரலாறு கூடப் படைத்து விட்டாள். விண்ணைத் தொட்டாள். விண்ணுக்கும், மண்ணுக்கும் இடையே நின்று நர்த்தனம் புரிந்தாள்.

இவற்றுக்கெல்லாம் மாறாக, அதிவேகமாக தவறான பாதையில் பயணிக்கிறது இன்னொரு பெண்கள் கூட்டம். தம்மை, தம் நிலையை உணரத் தவறியவர்களாக, பெண்ணியத்தை சிதைப்பவர்களாக, பெண்ணினத்தின் எட்டப்பர்களாக இவர்கள் வீறுநடை போடுகின்றனர். இவர்கள் எமது இனத்துக்கேயுரிய பண்பாடு, கலாசாரம் மறந்தவர்களாக, தமக்குள் கொலுவிருக்கும் பெண்மையை பேரம் பேசுபவர்களாக வாழ்ந்து கொண்டிருக் கிறார்கள். எமது பண்பாடு பழம் பெருமை மிக்கது. இறுக்கமான அடிக்கட்டுமானங்களைக் கொண்டது. யாழ்ப்பாணம் என்றால் அழகிய பண்பாட்டின் உறைவிடமாகக் கருதப்பட்டது. அதன் காரண கர்த்தாக்கள் பெண்கள் என்றால், அதனை மறுப்பதற்கில்லை. வெளிநாட்டில் வேலை பார்ப்பவர்கள், யாழ்ப்பாணப் பெண்களை திருமணம் செய்வதற்கென்று ஒழுக்கமான பெண்கள் என வரையறை செய்ததை மறக்கத் தான் முடியுமா?

இரசாயனக் கலவைகளால் ஆன முக ஒப்பனைக் கிறீம்களுக்காகச் செலவிடும் பணம் எவ்வளவு? அன்று அழகாகத் தலை சீவி, பூச்சூடி, மஞ்சள் பூசி, திலகமிட்டு சேலையுடுத்திய பெண்ணை மகா லட்சுமியாகப் பார்த்தனர். அந்த அழகுக்கு நிகர் உண்டோ...? புலம்பெயர் தமிழ்ப் பெண்கள் எமது நாட்டுக்கு வரும்போது புலம்பெயர்ந்த நாடுகளின் கலாசாரங்களையே பின்பற்றுகின்றனர். சொந்த நாட்டின் அருமை பெருமைகளைச் சீர்குலைக்கும் இவர்களுக்கு தடை உத்தரவு (ஆடைகளில்) போட வேண்டியது கட்டாயமாகும். தற்போது ஆலயங்களுக்குச் செல்லும் பெண்கள்கூட நவீன ஆடைகளில் சென்று வழிபாடு செய்கின்றனர். பண்பாடும், கலாசாரமும் பெண்களின் கரங்களிலேயே ஒப்படைக்கப்பட்டுள்ளன.

பெண்கள் வாழ்வதற்கு எத்தனையோ வழிகள் உண்டு. சொந்த வீட்டிலேயே பெண்களால் பாதுகாப்பாக இருக்க முடியவில்லை. கன்னிப் பெண்கள் பொது இடத்தில் யாசகம் செய்து பாதுகாப்பாக வாழ முடியுமா? தப்பான உறவுகளால் சட்ட விரோதமாக சில பெண்கள் கருவுறுகின்றனர். இவர்களைப் பாதுகாக்க சில கை வைத்தியர்கள் அல்லது நாட்டு வைத்தியர்கள் தோற்றம் பெற்று சட்டவிரோத கருக்கலைப்புச் செய்கின்றனர். இதனால் இரத்தப் போக்கு ஏற்பட்டு இளவயதுச் சாவுகள் பல ஏற்படுகின்றன. இந்தக் கருக்கலைப்பு வைத்தியர்களில் பலர் பெண்கள் என்பதை இந்த இடத்தில் பதிவு செய்ய வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

படித்த பெற்றோரானால் பிரச்சினைகள் உருவாகும். படிப்பறிவில்லாத பெற்றோரானால் ஏமாந்து பிள்ளைகளை நம்பி இறுதியில் கண்ணீரோடு வாழும் அவலம் கூட ஏற்படுகிறது. இணையத்தளத்தில் முகமறியாக் காதலில் கசிந்துருகி செல்வந்தர்களின் பணத்தைப் பறிமுதல் செய்து வசதியான ஆடம்பர வாழ்க்கை வாழ்கின்றனர். சில பெண்கள் தம்மிடம் இருக்கும் பணத்தை உண்மைக் காதல் என நம்பி ஆடவருக்கு வழங்கி மன நிறைவு பெறுகின்றனர்.

வேலையின்மை, குடும்ப வறுமை காரணமாக தூர இடங்களில், வெளிநாடுகளில் ஆண்கள் வேலை தேடிச் செல்கின்றனர். சில காலங்களில் கணவனின் நினைவுகளுடன் வாழும் பெண், நாளாக ஆக, வேற்று ஆடவனின் தொடர்பில் தன்னிலை, குடும்பநிலை மறக்கிறாள். நாளடைவில் கணவன் மனைவிக்கிடையே பிரச்சினை வளர்ந்து விவாகரத்தில் முடிகிறது. பணம்தேட வெளிநாடு சென்ற பல ஆண்களின் மனைவியர் வேறு திருமணம் செய்ததும் உண்டு. இருவரும் பிரிந்து தனிமையில் வாழ்வதுமுண்டு. பெண்கள் வேதனையின்போது கண்ணீர் சிந்தி அழுவார்கள். ஆண்கள் மனதுக்குள் புலம்புவார்கள். வெளிநாடு சென்ற ஆண்களுக்கும் துரோகம் செய்த பல பெண்களை நாமறிவோம். இப்படிப்பட்ட பெண்களால் மரணபரியந்தம் வேதனையோடு வாடும் ஆடவரும் இருக்கத்தான் செய்கிறார்கள். தடுமாறும் மனநிலை கொண்டவர்களாக பெண்கள் வாழ்வதால் வாழ்வு தடுமாறித் திசைமாறுகிறது.



ஒரு பெண் தப்புச் செய்து கண்ணீரோடு வாழ்ந்தால், அவளைக் குத்திக்காட்டிப் பேசவென ஒரு பெண்கள் கூட்டமே உருவாகிவிடும். இதனால் மேலும் மேலும் அந்தப் பெண் வேதனையை அனுபவிக்கிறாள். தீயவர்களின் சகவாசத்தால் கடற்கரை, விடுதிகள் போன்ற இடங்களில் கூடும் பெண்களால் பெற்றோர் அமைதியை இழக்கின்றனர். சில பெண்கள் புகைத்தல், மதுப்பாவனை போன்ற தீய செயல்களில்கூட ஈடுபடுகின்றனர். இன்று பல வீடுகளில், பிள்ளைகளுக்குப் பயந்த பெற்றோரே உள்ளனர். தீய செயல்களைச் செய்துவிட்டு பெற் றோரைப் பகடைக்காய்களாகப் பயன்படுத்தும் பிள்ளைகளுக்காகத் தலையாட்டும் பெற்றோரும், பெற்றோரை ஏமாற்றி வாழ்கின்ற பிள் ளைகளையுமே அதிகமாகக் காணமுடிகிறது.

ஆக, பெண்களே நீங்கள் இறைவனின் அற்புதப் படைப்பு. உங்களுக்குள் இருக்கும் பெண்மையை நீங்களே அசுத்தப்படுத்தாதீர்கள். மேன்மேலும் புனிதப்படுத்துங்கள். என்னென்ன திறமைகள் உங்களிடம் உள்ளன எனத் தேடிக் கண்டுபிடியுங்கள். உங்களைச் சுற்றிப்பல தீயசக்திகள் உள்ளன. எவையுமே உங்களை நெருங்காதபடி சுவாசத்தை தீயாக்குங்கள். உங்களில் குளிர்காய எவருக்கும் இடமளியாதீர்கள். ஆடவர் ஆபாசமாகப் பார்க்குமளவுக்கு ஆடைகளை அணியாதீர்கள். எமது பெருமை மிக்க பண்பாட்டுக்கும், கலாசாரத்துக்கும் நீங்களே சாவுமணி அடிக்காதீர்கள். அழகை மேம்படுத்தப் பணத்தை விரயம் செய்யாதீர்கள். இயற்கைப் பொருள்களால் அழகை மேம்படுத்துங்கள். ஆரோக்கியமும் வலிமை பெறும். உங்களை நீங்களே நேசியுங் கள். உங்களைச் சுற்றியுள்ள பெண்களையும் நேசியுங்கள். வேதனைப்படும் பெண்களை ஆறுதல் படுத்துங்கள். பெற்றவர்களுக்கு உண்மையாய் வாழுங்கள். இணையத் தேடல் உங்களின் முன்னேற்றத்துக்குத் தடையாக உள்ளதை உணருங்கள். அன்பான உங்களைத் தாங்குகின்ற கணவனுக்காக நீங்களும் வாழுங்கள். கணவனுக்குத் துரோகம் செய்துவிட்டு இன்னொரு ஆடவனை வாழ்க்கைத் துணையாக்க மனதாலும் நினையாதீர்கள். மனதையோ உணர்வுகளையோ உங்களது கட்டுப்பாட்டில் வைத்திருங்கள். அலைபாய விடாதீர்கள். வேண்டாத நட்புறவுகள், தேவையற்ற செல்போன் தொடர்புகளைத் துண்டித்து விடுங்கள். தப்பு நடக்கும் இடங்களில் தட்டிக் கேளுங்கள். தப்புக்குத் துணை போகாதீர்கள். பெண்களுடன் கூடி ஏனைய பெண்களைத் துன்புறுத்தாதீர்கள். வாழ்க்கைத் துணையைச் சரியாகத் தெரிவு செய்யுங்கள். அன்பால் பிறரை ஆளுமை செய்யுங்கள். சரியான பாதையில் நடவுங்கள். அன்பான பெண்களே, எமது பாதையும் நடத்தைகளும் சரியானால், வன்முறைகளும், வன்புணர்வுகளும் [illegible] மாண்டுவிடும் என்பதை மறந்துவிடாதீர்கள். நாம் அடுத்த சந்ததியினரின் சுபீட்சமான வாழ்வுக்காக இன்றே பலமான அத்திபாரம் இடுவோமே!.

# மனித உயிர்கள் காக்கப்படவேண்டும்

சிரிய இராணுவம் சரித்திர முக்கியத்துவம் பெற்ற புராதன நகரமான பால்மைராவை ஐ.எஸ். பயங்கரவாதப் படைகளின் ஆதிக்கத்திலிருந்து மீட்டெடுத்துக் கைப்பற்றி இருப்பது மிகப்பெரிய ஆறுதலை அளிக்கிறது. நாலாயிரம் ஆண்டுகள் கால வரலாற்றைக்கொண்டுள்ள இந்த நகரத்தில் இருக்கும் கட்டடங்களும், சான்றுகளும் மனித இனம் வளர்ந்த வரலாற்றை எடுத்துரைக்கும் ஆவணங்கள்.

கடந்த ஆண்டு, தங்களை இஸ்லாமிய தேசம் என்று அழைத்துக்கொள்ளும் ஐ.எஸ். பயங்கரவாதிகளின் ஜிகாதிப் படை, பால்மைராவைக் கைப்பற்றியபோது உலகமே பதைத்தது. யுனெஸ்கோவால் புராதனமான நகரங்களில் ஒன்றாக அடையாளம் காணப்பட்ட பால்மைரா அழிக்கப்பட்டால், அங்கிருக்கும் ரோமானிய சாம்ராச்சியத்தின் அடையாளமாக இருக்கின்ற நினைவுச் சின்னங்கள் அழிக்கப்பட்டு விடுமே என்று சரித்திர ஆராய்ச்சியாளர்கள் கவலையில் ஆழ்ந்தனர். அவர்களது இரத்தக் கொதிப்பை அதிகரிக்கும்வகையில், ஐ.எஸ். பயங்கரவாதப் படையினர் பால்மைரா நகரில் இருந்த பல சரித்திரச்சுவடுகளை அழிக்கவும் முற்பட்டனர்.

பால்மைரா நகரத்துக்கு 4000 ஆண்டுகள் கால வரலாறு உண்டு. கிறிஸ்துவுக்கு முன் பல்வேறு சாம்ராச்சியங்களிடம் கைமாறிய பால்மைரா, கி.பி. முதலாம் நூற்றாண்டு காலத்தில் ரோமாபுரி சாம்ராச்சியத்தின் முக்கிய நகரங்களில் ஒன்றாகத் திகழ்ந்தது. ஆசியாவின் வர்த்தக நகரங்களில் ஒன்றாகவும், ரோமாபுரி, கிரேக்க கலாசாரங்களின் இருப்பிடமாகவும் இருந்த நகரம் இது. மொசப்பத்தேமியா நாகரிகத்தின் பகுதியாகவும் இருந்த பெருமை பால்மைராவுக்கு உண்டு.

மனித இனமே இந்த நேரத்தில் சிரிய அறிஞர் காலித்-அல்-அசாதை நினைவுகூரக் கடமைப்பட்டிருக்கிறது. பால்மைராவில் அகழ்வாராய்ச்சி நடத்தியது மட்டுமல்லாமல் கடந்த நாற்பது ஆண்டுகளாகப் பல்வேறு சரித்திர எச்சங்களைத் தேடிப்பிடித்து, சுத்தப்படுத்திப் பாதுகாத்த பெருமைக்குரியவர் அந்தப் பெரியவர்தான். பால்மைரா நகரம் பயங்கரவாதப் படையினரின் கைகளில் சிக்கிவிட்டால், மனித குலத்துக்குப் பல சரித்திர, கலாசாரச் சான்றுகளும், தொன்மைத் தடயங்களும் கிடைக்காமல் போய்விடும் என்பதால், அவசர அவசரமாக நான்கு கொள்கலன்களில் முக்கியமான பொருள்களையும், சரித்திரத் தடயங்களையும் சிரியத் தலைநகர் டமாஸ் கஸுக்கு அனுப்பி விட்டிருந்தார் காலித்-அல்-அசாத்.

கடந்த ஆண்டு மே மாதம் பால்மைராவைக் கைப்பற்றிய ஐ.எஸ். பயங்கரவாதப் படையினர், 81 வயதான காலித்-அல்-அசாதை, எங்கெல்லாம் எஞ்சியிருக்கும் பொருள்களும், சின்னங்களும், சான்றுகளும் மறைத்து வைக்கப்பட்டிருக்கின்றன என்று கேட்டுச்சித்திரவதை செய்திருக்கிறார்கள். அந்தத் தள்ளாத வயதிலும் சித்திரவதைகளைச் சகித்துக் கொண்டு உறுதி தளராமல் போராடிய அந்த முதியவர், கடந்த ஓகஸ்ட் மாதம் ஐ.எஸ். பயங்கரவாதப் படையினரால் கொல்லப்பட்டார். இப்போது பால்மைரா நகரம் சிரியப் படைகள் வசமிருந்து மீட்டெடுக்கப்பட்டிருப்பதால் அந்த மனிதரின் ஆன்மா நிச்சயமாகச் சாந்தி அடைந்திருக்கும் என்று நம்பலாம்.



பால்மைரா நகரம், சிரியப் படைகளிடமிருந்து மீட்கப் பட்டமை, ஐ.எஸ். பயங்கரவாதிகளுக்கு எதிரான தாக்குதலில் திருப்புமுனையாக அமையும். ஒருபுறம், அமெரிக்கப் படைகளின் தலைமையிலான கூட்டணிப் படைகளின் தொடர்ந்த விமானத் தாக்குதலும், ஐ.எஸ். போராளிகளின் தலைமையைக் குறிவைத்துச் செயற்பட்டதும் இந்த வெற்றிக்கு அடித்தளம் இட்டது. இன்னொரு புறம், சிரிய அதிபர் பார்-அல்-அஸாதுக்கும் எதிர்ப்பாளர்களுக்கும் இடையே சமரசப்பேச்சுத் தொடங்கியதால், ஐ.எஸ். படைகளுக்கு எதிராக சிரிய இராணுவம் தனது முழுக் கவனத்தையும் செலுத்த முடிந்தது.

பால்மைரா நகரம் மீட்டெடுக்கப்பட்டதால் எல்லாமே முடிந்துவிடவில்லை. சிரியாவின் கிழக்கு, வடக்குப் பகுதிகளைக் கைப்பற்றி இருக்கும் ஐ.எஸ். ஜிகாதிப் படைகளை எதிர்கொண்டு அவர்களது தலைநகரான ராக்கா கைப்பற்றப்பட்டால்தான், அதனை முழுமையான வெற்றியாகக் கருதலாம்.

அதுமட்டுமல்ல, பின்வாங்குவதைத் தாங்கிக் கொள்ள முடியாத, தோல்வியால் ஆத்திரம் அடைந்த ஐ.எஸ். பயங்கரவாதிகள் பாரீஸ், பிரெஸ்ஸல்ஸ் போன்று உலகின் பல்வேறு நகரங்களை தாக்கத் தொடங்கலாம். வெறி கொண்ட அந்தக் கூட்டத்தை மனிதாபிமானம் கொண்ட மனித நாகரிகம் எதிர்கொண்டு அடக்கியாக வேண்டும். பால்மைரா கைப்பற்றப்பட்டுவிட்டதில் மகிழ்ச்சி. இதைத் தொடர்ந்து, பல்லாயிரக்கணக்கான மனித உயிர்கள் காப்பாற்றப்பட்டாக வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

17 வயதில் கல்விக் கடன்;
30 வயதில் கல்யாணக் கடன்;
40 வயதில் வீட்டுக்கடன்;
50 வயதுக்கு மேல் பெத்த கடன்;
இப்படியே முடிந்து விடுகிறது,
ஆண்களின் வாழ்க்கை.
இதனால்தான் ஆண்களைத்
திட்டுபவர்கள், "டேய் கடன்காரா" என்று
திட்டுறாங்களா?


ஏன்டா அடுத்தவனை நக்கல் அடித்து சிரிக்கிற
நீ உன்னை எவனாவது நக்கலடிச்சா மட்டும்
பயங்கரமாக பதட்டமாகிறாய்?



உனக்கு வந்தா இரத்தம்
அடுத்தவங்களுக்கு வந்தா அது தக்காளி
சட்னியா?

ஸ்ரீ (sree)
தனக்கு மேலே எவரும் இருக்கக் கூடாது
என்று எண்ணுபவனை விட,
தனக்குக் கீழே எவரும் இருக்கக் கூடாது
என்று எண்ணுபவனே, உயர்ந்து நிற்பான்!!!

ரா.மணிகண்டன்
நீங்கள் நிற்கும்போது, கீழே விழுந்தவரை கை
கொடுத்து தூக்கி விடுங்கள்...
படைத்தவனுக்கு நன்றி கூற இதை விட
சிறந்த வழி வேறில்லை.



கல்
யாணமாகி
கணவனும் மனைவியும்
தனிக்குடித்தனம் போனது
அந்தக் காலம்.
ஸ்மார்ட்போன் வாங்கி
வீட்டுக்குள்ளேயே குடும்பமே
தனித்தனியா போறது
தான் இந்தக் காலம்.

அப்பா
50 ருபா மிச்சப்படுத்த
30 நிமிடம் நடந்ததற்கும், நான்
30 நிமிடம் மிச்சப்படுத்த 50 ருபா
ஓட்டோவுக்கு கொடுக்கிறத்துக்கும்
பேரு தான் தலைமுறைக்கான
இடைவெளி!


வேலைக்குப்
போகிறவர்களின் திங்
கட்கிழமையை விட, வேலை
கிடைக்காதவர்களின் திங்
கட்கிழமைகள் கொடூர
மானவை.

மொபைல் போனை
முதலில் வைத்திருந்தவர்கள்
ஆச்சரியப்படுத்தினார்கள். இப்போது
வைத்திருக்காதவர்கள் ஆச்சரி
யப்படுத்துகிறார்கள்...!!!



இவன்
என்ன நினைப்
பான், அவன் என்ன
நினைப்பான், என்று
நினைச்சே வாழ்கிறோம்.
ஆனா உண்மையிலை ஒருத்
தனும் நம்மளைப் பத்தி
நினைக்கிறதேயில்லை!..
இதுவே நிதர்சனம்.

கடவுளுக்கு
நீங்களாகவே ஒரு
உருவம் கொடுத்து விட்ட
படியால்..கடவுள் உங்கள் எதி
ரில் இருந்தாலும் தெரிவ
தில்லை.



# சிலையான சொக்லேற் ரஜினி

தற்போது ரஜினி நடித்துவரும் கபாலி படத்தில் அவரது தோற்றத்தால் கவரப்பட்ட தனியார் பேக்கரி நிறுவனம் ஒன்று, 600 கிலோ சொக்லேற்றில் அவரது உருவத்தைச் சிலையாக வடிவமைத்துள்ளது. அட்டக் கத்தி பா.ரஞ்சித் இயக்கிவரும் இந்தப் படத்தில் வெள்ளைத் தலைமுடி மற்றும் வெள்ளை தாடியுடன் ரஜினி நடித்து வருகிறார். இந்த நிலையில், ரஜினியின் இந்த தோற்றத்தால் கவரப்பட்ட சென்னையில் உள்ள தனியார் பேக்கரி நிறுவனமொன்று 600 கிலோ சொக்லேற்றைக் கொண்டு ரஜினியின் கபாலி தோற்றத்தைப் போன்ற ஒரு சிலையை வடிவமைத்துள்ளது. பொது மக்கள் பார்வைக்கும் வைக்கப்பட்டுள்ள இந்த சொக்லேற் ரஜினியை, பொதுமக்கள் பெரிதும் ரசித்து வருகின்றனராம்.

கபாலி படத்தில் அட்டக்கத்தி தினேஷ், கலையரசன், தன்ஷிகா, ராதிகா ஆப்தே உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். படத்தின் படப்பிடிப்பு சென்னை, மலேசியா, தாய்லாந்து உள்ளிட்ட இடங்களில் படமாக்கப்பட்டுள்ளது. படப்பிடிப்புகள் முடிவடைந்து தற்போது இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது. இந்தப்படத்தை கலைப்புலி எஸ்.தாணு தயாரித்துள்ளார்.





# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?



**மேடம்:** எதிலும் நிதானத்துடன் இருப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் புதிய வாய்ப்பு மூலம் ஆதாயம் அடைவீர்கள். உறவினர் வருகையால் வீட்டுச் செலவு அதிகரிக்கும். ஆரோக்கியம் பலம் பெறும்.

**இடபம்:** எதிரிகள் இடம் மாறிப் போவர். தொழில், வளர்ச்சியால் ஆதாயம் அதிகரிக்கும். நண்பர்கள் மூலம், இனிய அனுபவம் காண்பீர்கள். வீட்டுத் தேவை தாராள செலவில் நிறைவேறும்.

**மிதுனம்:** பொது விடயத்தில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள். சமூகத்தில் அந்தஸ்து உயரும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்திப் பணி எளிதாக நிறைவேறும். பெண்கள் ஆடம்பர நாட்டத்துடன் செயற்படுவர்.

**கடகம்:** பிறர் சொல்லும் விமர்சனத்தால், மனம் தளர வேண்டாம். தொழில், வியாபாரத்தில் இருந்த இடையூறு விலகும். இலாபம் சீராகும். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**சிங்கம்:** குறிக்கோள் உணர்ந்து பணி புரிவது அவசியம். தொழில், வியாபாரத்தில் மாறுபட்ட சூழல் உருவாகலாம். இலாபம் சுமார். உற வினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**கன்னி:** சாமர்த்தியத்துடன் செயற்பட்டு வருவீர்கள். தொழில், வியாபாரத்தில் நிலுவை எளிதாக வசூலாகும். வருமானம் உயரும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர்.

**துலாம்:** எளிமையைப் பின்பற்றுவது நல்லது. தொழிலில் வளர்ச்சிப் பணி திட்டமிட்டபடி நடந்தேறும். நிலுவைப் பணம் வசூலாகும். அரசியல் வாதிகளுக்கு விவகாரத்தில் சமரசத் தீர்வு கிடைக்கும்.

**விருச்சிகம்:** பொது விவகாரத்தில் கருத்துச் சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில் பொறுப்பு அதிகரிக்கும். இலாபம் சீராகும். இஷ்ட தெய்வ வழிபாடு மன அமைதிக்கு வழிவகுக்கும்.

**தனுசு:** உங்களின் யதார்த்தப் பேச்சு சிரமம் தரலாம். தொழிலில் நிதானத்தைக் கடைபிடிப்பது நல்லது. மிதமான இலாபம் கிடைக்கும். ஆரோக்கியத்தில் அக்கறை கொள்வது நல்லது.

**மகரம்:** நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழிலில் ஆதாயம் அதிகரிக்கும். தாராள பணவரவில் சுபச்செலவு செய்து மகிழ்வீர்கள். குடும்பத்தில் ஒற்றுமை மேம்படும்.

**கும்பம்:** அனுபவசாலியின் ஆலோசனையால் நன்மை கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். இயந்திரப் பிரிவு பணியாளர்கள் கவனமாக இருப்பது நல்லது.

**மீனம்:** மனதில் உற்சாகம் பிறக்கும். தொழில், வியாபாரத்தில் உருவான இடையூறைச் சரி செய்வீர்கள். பெண்கள் ஆடம்பர விடயத்தில் நாட்டம் கொள்வர். மாணவர், பெற்றோரின் விருப்பத்தை நிறைவேற்றுவர்.

# சுடோக்கு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | | 3 | | 7 | | 1 | | |
| 6 | | | | | 9 | | | |
| | 8 | 1 | | | | | | |
| 2 | | | | 1 | | | 4 | |
| | | | 7 | 5 | 4 | | | |
| | 7 | | | 8 | | | | 9 |
| | | | | | | 8 | 7 | |
| | | | 5 | | | | | 2 |
| | | 9 | | 3 | | 4 | | 5 |

# எண் விளையாட்டு

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 4 | 9 | 1 | 5 | 6 | 3 | 2 | 8 |
| 2 | 6 | 1 | 3 | 8 | 9 | 5 | 7 | 4 |
| 3 | 5 | 8 | 7 | 4 | 2 | 6 | 1 | 9 |
| 4 | 8 | 5 | 9 | 3 | 1 | 7 | 6 | 2 |
| 1 | 3 | 2 | 6 | 7 | 8 | 4 | 9 | 5 |
| 9 | 7 | 6 | 4 | 2 | 5 | 1 | 8 | 3 |
| 8 | 2 | 7 | 5 | 6 | 4 | 9 | 3 | 1 |
| 5 | 9 | 3 | 2 | 1 | 7 | 8 | 4 | 6 |
| 6 | 1 | 4 | 8 | 9 | 3 | 2 | 5 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கலாம்)

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது.

2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | கொடிகாமம் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 40 | 40 | 40 | 60 | 60 | 20 | 30 |
| கத்தரி | 60 | 40 | 50 | 50 | 50 | 40 | 35 | 40 |
| கரட் | 100 | 100 | 80 | 120 | 100 | 120 | 80 | 120 |
| மரவள்ளி | 40 | 50 | 40 | 40 | 50 | 60 | 40 | 40 |
| பயிற்றை | 60 | 40 | 80 | 60 | 60–50 | 40 | 30 | 50 |
| பாகல் | 120 | 100 | 120 | 100 | 100 | 100 | 100 | 100 |
| கருணைக்கிழங்கு | 100 | 80 | 80 | – | 50–60 | – | 50 | 50 |
| பெ.வெங்காயம் | 80 | 80 | 80 | 80 | 80 | 100 | 72 | 60 |
| சி.வெங்காயம் | 60 | 70 | 60 | 80 | 60 | 120 | 70 | 60 |
| பூசணி | 50 | 30 | 40 | 40 | 40–30 | 50 | 15 | 35 |
| தக்காளி | 50 | 50 | 40 | 80 | 40–45 | 80 | 60 | 45 |
| வாழைக்காய் | 50 | 40 | 50 | 40 | 30–40 | 40 | 35 | 30 |
| கீரை | 30 | 30 | 40 | 15 | 20–30 | 20 | 20 | 25 |
| பொன்னாங்காணி | 25 | 30 | 30 | 35 | 25–30 | 30 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 100 | 120 | 100 | 80 | 100–120 | 120 | 100 | 140 |
| புடோல் | 50 | 40 | 60 | 60 | 50–60 | 40 | 30 | 40 |
| கோவா | 50 | 60 | 50 | 80 | 40–60 | 100 | 60 | 60 |
| வெண்டி | 80 | 60 | 60 | 80 | 80–70 | 60 | 50 | 60 |
| போஞ்சி | 120 | 100 | 140 | 140 | 120–100 | 120 | 100 | 100 |
| லீக்ஸ் | 140 | 120 | 100 | 140 | 100–120 | 120 | 100 | 90 |
| தேங்காய் | 40 | 40 | 50 | 40–50 | 30–35 | 40 | 30 | 30 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 80 | 80 | 70–80 | 100 | 72 | 100 |
| தேசிக்காய் | 200 | 220 | 200 | 140 | 160–170 | 200 | 200 | 180 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 15 | 10 | 20 | 10 | 10 |
| கறிமிளகாய் | 80 | 80 | 140 | 100 | 100–120 | 120 | 50 | 80 |
| இராசவள்ளி | 140 | 140 | 140 | 160 | 140–120 | – | 110 | 70 |
| முருங்கைக்காய் | 600 | 400 | 400 | 300 | 350–500 | 300 | 350 | 250 |
| பனங்கிழங்கு | – | – | – | – | – | – | – | – |

## ஆடம்பரமான சுடிதார்கள்



ஆடம்பரமான சுடிதார்கள் அறிமுகமாகியுள்ளன. பகட்டான வேலைப்பாடுகளுடன், கழுத்தில் இருந்து இடுப்புவரை வேலைப்பாடுகள் நிறைந்த சுடிதார்கள் விற்பனை செய்யப்படுகின்றன. இவற்றின் விலை 3,000 ரூபாவில் இருந்து 5,500 ரூபா வரை ஆகும்.

இது புதுசு



**நாளை**
பங்குனி -27
சனிக்கிழமை
09.04.2016
திதி: துதியை
பி.ப.12.41 வரை
நட்சத்திரம்:
பரணி பி.இ.12.16 வரை
ராகுகாலம்:
09.06-10.36 வரை
சுபநேரம்:
03.06-04.36 வரை



## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | வவுனியா | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 650 | 800 | 650 | 700 |
| நண்டு | 250 | 400 | 300 | 400 | 300 | 200 | – |
| கணவாய் | 500 | 600 | 500 | 500 | 600 | 650 | – |
| பாரை | 500 | 500 | 500 | 600 | 500 | 600 | 420 |
| சுறா | 500 | 600 | 600 | 800 | 600 | – | 650 |
| சீலா | 250 | 500 | 400 | 400 | 500 | 500 | 400 |
| விளை | 650 | 500 | 400 | 500 | 450 | 500 | 400 |
| முரல் | 250 | 400 | 350 | 400 | 300 | 400 | – |
| கும்பிளா | 350 | 350 | 300 | 400 | 400 | 500 | – |
| கிளாக்கன் | 850 | 800 | – | – | 500 | – | – |
| ஓரா | 400 | 400 | – | – | 600 | – | 350 |
| திரளி | 250 | 300 | 200 | 200 | 300 | 150 | 350 |
| நகரை | 200 | 300 | – | 300 | 300 | – | 300 |
| சூடை | 150 | 200 | 100 | 180 | 100 | 100 | – |
| ஒட்டி | 300 | 250 | 150 | 200 | 300 | – | 250 |
| திருக்கை | 200 | 350 | 200 | 300 | 400 | 300 | 150 |
| மதனம் | 150 | 250 | 180 | 300 | 400 | – | 250 |
| கொய் | 100 | 150 | 60 | 100 | 100 | 100 | – |
| பாலை | 400 | 200 | 250 | – | 400 | – | – |
| வாழை | 100 | 200 | 200 | 300 | 300 | – | – |

## அரிசிக் கஞ்சி



**தேவையானவை:**
புழுங்கல் அரிசி - 2 கப்
பாசிப்பருப்பு - 1 கைப்பிடி
சுக்குப்பொடி - அரை தேக்கரண்டி
உப்பு - தேவையான அளவு

**செய்முறை:**

- வெறும் சட்டியில் புழுங்கல் அரிசியை லேசாக வறுத்து ஆற விட்டு மிக்ஸியில் போட்டு ரவை போல உடைத்துக் கொள்ளவும்.
- பாசிப் பருப்பையும் பொன்னிறமாக வறுக்கவும்.
- உடைத்த அரிசியையும், பருப்பையும் தேவையான அளவு தண்ணீர் விட்டு குக்கரில் வேக வைக்கவும்.
- 4 விசில் வந்ததும் இறக்கிவிடவும். சற்றுக் குழைந்து இருக்க வேண்டுமெனில் 5 விசில் வரை வைத்துக் கொள்ளலாம்.
- கஞ்சியில் உப்பு, சுக்குப்பொடி சேர்த்துக் கலந்து குடிக்கலாம். இதற்கு இணையாக எலுமிச்சை, மாங்காய் ஊறுகாய்கள் சுவையாக இருக்கும்.
- இந்த கஞ்சி வெயில் காலத்தில் உடல் இழக்கும் நீர்ச்சத்தையும் சக்தியையும் மீட்டுத் தர வல்லது.

## பயன் தரும் வீட்டுக் குறிப்புகள்!

- புளித்த பாலில் (மோரில்) வெள்ளிப் பாத்திரங்களையோ, வெள்ளி நகைகளையோ அரை மணி நேரம் ஊறப் போட்டுப், பின்னர் துலக்கினால் அவை புதியவை போல் இருக்கும்.
- வெண்ணெயில் உப்பைத் தூவி விட்டால் அது நாட்பட்டாலும் கெடாமல் இருக்கும்.
- வெயில் காலத்தில் எங்கு நோக்கினும் ஈக்கள் மொய்த்துக் கொண்டிருக்கும். வீட்டைக் கழுவும்போது நீரில் சிறிது உப்பைச் சேர்த்துப் பின்பு கழுவுங்கள். காய்ந்தபின் அறையில் ஈக்கள் வராது.
- காய்கறி மற்றும் பழங்களை சிறிதளவுவினிகர் கலந்தகுளிர்ந்தநீரில் ஒரு சில நிமிடங்கள் போட்டு வைத்தால் கிருமிகள் இறந்து விடும்.
- பூண்டு, [illegible] கத்தியில் ஏற்படும் துர்நாற்றத்தைப் போக்க, சிறிதளவு உப்பை கத்தியில் தடவி குளிர்ந்த நீரில் கழுவவும்.
- பால், பாத்திரத்தின் அடியில் ஒட்டிக் கொள்ளாமல் இருக்க பாத்திரத்தை முதலில் குளிர்ந்த நீரால் நன்கு கழுவ வேண்டும்.
- இரவில் படுப்பதற்கு முன் ப்ளீச்சிங் பவுடரைச் சிறிது எடுத்து கழிப்பறையிலும், குளியலறையிலும் தூவி விட்டு அப்படியே விட்டு விட வேண்டும். கரப்பான் பூச்சித் தொல்லை இருக்காது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மக்கள் அதிகம் விரும்பி அருந்தும் எலிபன்ட் ஹவுஸ் கிறீம் சோடா

தொடர்ச்சியாக பத்தாவது ஆண்டாகவும் "ஆண்டின் சிறந்த பான வர்த்தக நாமம்" விருதை, எலிபன்ட் ஹவுஸ் கிறீம் சோடா தனதாக்கிக் கொண்டுள்ளது. இலங்கை சந்தைப்படுத்தல் கல்வியகம் மற்றும் நீல்சன் நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த, 2016 மக்கள் விருதுகள் வழங்கும் நிகழ்வின் போது, இந்த விருது கிறீம் சோடாவுக்கு வழங்கப்பட்டிருந்தது. 2006ஆம் ஆண்டு மக்கள் விருதுகள் ஆரம்பிக்கப்பட்டமை முதல், இந்த விருதை எலிபன்ட் ஹவுஸ் கிறீம் சோடா ஆதிக்கம் செலுத்தி கைப்பற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.
இலங்கை சந்தைப்படுத்தல் கல்வியகம் மற்றும் நீல்சன் கம்பனி ஆகியவற்றின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மக்கள் விருதுகள் என்பதன் மூலமாக, நுகர்வோரின் தெரிவுகள் பதிவு செய்யப்பட்டு, அதிகளவு தெரிவைப் பெற்ற நாமங்களுக்கு விருதுகள் வழங்கப்படுகின்றன.
பொது மக்கள் இந்த வெற்றியாளர்களைத் தெரிவு செய்கின்றமையால், தமக்கு விருப்பமான வர்த்தக நாமங்கள், நபர்கள், விளம்பரங்கள், திரைப்படங்கள், தொலைக்காட்சி நாடகங்கள் போன்றவற்றை தெரிவு செய்திருந்தனர். வெற்றியாளர்கள் நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்டிருந்த நேருக்கு - நேர் கருத்துக் கணிப்புகளை நீல்சன் நிறுவனம் மேற்கொண்டிருந்தது. இதில் 15 - 60 வயதுக்குட்பட்ட ஆண் மற்றும் பெண் இரு பாலாரும் நாட்டின் சகல மாவட்டங்களிலிருந்தும் ஐந்து மாதங்களுக்கு இவ்வாறு நேர் காணல்களுக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர்.

**வணிகம்**

எலிபன்ட் ஹவுஸ் கிறீம் சோடா 2016 மக்கள் விருதுகள் வழங்கலில் விருதை பெற்றுக் கொண்ட வரலாற்றுச் சிறப்பு மிக்க விடயம் தொடர்பில், சிலோன் கோல்ட் ஸ்ரோர்ஸ் பிஎல்சியின் பானங்கள் பிரிவின் தலைமை அதிகாரியும், ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பதில் தலைவருமான தமிந்த கம்லத் கருத்துத் தெரிவிக்கையில், "இலங்கையின் மிகவும் புகழ்பெற்ற பானமாக 10 வருட காலமாக எலிபன்ட் ஹவுஸ் கிறீம் சோடா தொடர்ந்து மக்களின் தெரிவாக அமைந்துள்ளது. இவை அனைத்துக்கும் காரணமாக, நிலைபேறான வாடிக்கையாளர் அர்ப்பணிப்பு மற்றும் எமது நீண்ட கால மற்றும் புதிய வாடிக்கையாளர்களின் மகிழ்ச்சிகரமான ஈடுபாடு போன்றவை அமைந்துள்ளன. அவர்களின் தொடர்ச்சியான அன்பு மற்றும் உதவி இன்றி எம்மால் இவற்றை முன்னெடுத்திருக்க முடி யாது, இதற்காக நாம் அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்" என்றார். (த)

# செலிங்கோ காப்புறுதிதாரர்களுக்கு போனஸ்

செலிங்கோ லைஃப் தமது வாடிக்கையாளர்களுடன் 2.9 பில்லியன் ரூபாவைப் போனஸாகப் பகிர்ந்து கொள்ளவுள்ளதாக அறிவித்துள்ளது.
இந்தத் திட்டம், 300,000த்துக்கும் அதிகமான காப்புறுதிதாரர்களுக்கு நன்மை அளிக்கும். வருடாந்த போனஸ், பண்டிகை கால "கேஷ் போனஸ்" என்பனவற்றை உள்ளடக்கியதாக இது அமையும் என நிறுவனம் அறிவித்துள்ளது.
செலிங்கோ லைப்பின் வரலாற்றில் இவ்வாண்டு வழங்கப்படவுள்ள தொகை, ஆகக்கூடிய போனஸ் தொகையாக அமையவுள்ளது. 2015 நிதி ஆண்டில் நிறுவனம் திரட்டிய ஆயுள் நிதி மிகை தொகையை அடிப்படையாகக் கொண்டே இது வழங்கப்படவுள்ளது. 2015 டிசெம்பரில் ஒரு காப்புறுதிக் கொள்கையைப் பெற்றுக் கொண்டவருக்கும், இந்தப் போனஸ் தொகை வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். காப்புறுதிக் கொள்கை வழங்கப்பட்ட முதலாவது ஆண்டிலிருந்தே போனஸும் வழங்கப்படும் என்ற நிறுவனத்தின் கொள்கைக்கு இசைவாக இது வழங்கப்படவுள்ளது.



**செலிங்கோ லைப்பின் வரலாற்றில் இவ்வாண்டு வழங்கப்படவுள்ள தொகை ஆகக்கூடிய போனஸ் தொகையாக அமையவுள்ளது. 2015 நிதி ஆண்டில் நிறுவனம் திரட்டிய ஆயுள் நிதி மிகை தொகையை அடிப்படையாகக் கொண்டே இது வழங்கப்படவுள்ளது.**

மொத்த போனஸ் தொகையான 2.9 பில்லியன் ரூபா உரிய முறையில் காப்புறுதிதாரர்களிடம் பகிரப்பட்டு உரிய தொகைக்கான சான்றிதழ் ஏப்ரல் மற்றும் மே மாத காலப்பகுதியில் உரியவர்களுக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்.
அத்தோடு இவர்களுள் சிலருக்கு தமது ஆயுள் காப்புறுதித் தொகையை அதிகரித்துக் கொள்ளுமாறு அல்லது ஓய்வுகால கணக்குத் தொகைகளை அதிகரித்துக் கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்துக் கடிதம் ஒன்றும் அனுப்பி வைக்கப்படும். இதன் மூலம் சிங்கப்பூர் சென்று வருவதற்கான ஒரு கட்டணப் பொதி அல்லது திறன்பேசி ஒன்றை வெல்வதற்கான வாய்ப்பு அவர்களுக்குக் கிட்டும். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நுட்பம்



### வரவேற்பைப் பெறாத அன்ரோயிட் மாஸ்மலோ

இன்றைய காலகட்டத்தில் தொடுதிரைக் கைபேசிச் சாதனங்களில் அதிகளவில் பயன்படுத்தப்பட்டு வரும் இயங்குதளங்களில் கூகுளின் அன்ரோயிட் இயங்குதளமும் ஒன்று.
இந்த இயங்குதளத்தில் பல பதிப்புக்கள் வெளியிடப்பட்டுள்ள நிலையில், சில மாதங்களுக்கு முன்னர் அதன் புதிய பதிப்பான அன்ரோயிட் மாஸ்மலோ அறிமுகம் செய்யப்பட்டிருந்தது.
எனினும், பயனர்கள் மத்தியில் பெரிய அளவில் வரவேற்பைப் பெற்றிராத இந்த இயங்குதளம் 4.6 சதவீதமான சாதனங்களில் மாத்திரமே பயன்படுத்தப்பட்டு வருகின்றது எனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.
இதற்கிடையில் அன்ரோயிட் லொலிபொப் பதிப்பானது 35.8 சதவீத சாதனங்களில் பயன்படுத்தப்பட்டு முன்னணியில் இருப்பதுடன், கிற்கற் ஆனது 33.4 சதவீதங்களுடன் இரண்டாவது நிலையில் உள்ளது.



### பார்வையில்லாதோருக்கு பேஸ்புக்கின் புதிய வசதி

உலகளாவிய ரீதியில் ஒரு பில்லியனுக்கும் அதிகமான பயனர்களைத் தன்னகத்தே கொண்டு வேகமாக வளர்ந்துவரும் சமூக வலைத்தளமான பேஸ்புக், மற்றுமொரு புதிய வசதியை அறிமுகம் செய்கின்றது.
அதாவது பார்வையிழந்தவர்களும் பேஸ்புக்கில் பதிவேற்றம் செய்யப்படும் ஒளிப் படங்களை பார்வையிடும் பொருட்டு செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்கின்றது.
இந்தத் தொழில்நுட்பமானது ஒரு ஒளிப்படத்தைப் பற்றித் தெளிவான விளக்கத்தைத் தருவதுடன் அந்த ஒளிப்படத்தை லைக் செய்தவர்களின் எண்ணிக்கை, கருத்துப் பதிபவர்களின் எண்ணிக்கை என்பவற்றையும் எடுத்துக் கூறுகின்றது.
தற்போது ஆங்கில மொழியில் மட்டும் கிடைக்கப்பெறும் இந்தத் தொழில்நுட்பம், விரைவில் ஏனைய மொழிகளிலும் கிடைக்கப் பெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## வடக்கின்

க.வி.விக்னேஸ்வரன் இதனை முன்மொழிந்தார். இதன் பின்னர் சபை உறுப்பினர்கள், இந்த வரைவில் மேற்கொள்ள வேண்டிய திருத்தங்கள் தொடர்பில் கருத்துக்களை முன்வைத்தனர். இருப்பினும் வரைவு இறுதி செய்யப்படவில்லை. இதன் காரணமாக எதிர்வரும் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை விசேட அமர்வு இடம்பெறவுள்ளது. அன்றைய தினம் எஞ்சிய விவாதம் இடம்பெற்று தீர்வுத்திட்ட வரைவு இறுதி செய்யப்படும்.

பூர்த்தி செய்யப்பட்ட வரைவு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தனிடம் எதிர்வரும் 16 ஆம் திகதி யாழ்.பொது நூலகத்தில் வைத்துக் கையளிக்கப்படும்.

இதன்போது சபை உறுப்பினர்கள் அனைவர் முன்னிலையிலும், முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா ஆகியோர் இணைந்து இதனைக் கையளிப்பார்கள்.

(த-வ-5-ரி5)

**WANTED**

Part Time Accountant / Visiting Accountant

Contact Number- 076 685 6808

**பணியாளர் தேவை**

சிட்டை எழுதுநர், விற்பனை உதவியாளர், ஆண், பெண் இருபாலாரும் நேரில் வரவும்.

**300, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

**துன்பம் தீர்க்கும் கலியுக தெய்வம் நாகபூஷணி அம்பாள்**



வெள்ளவத்தையில் பொன்னாந்து வீதியில் அமைந்துள்ள நாகபூசணி அம்மன் ஆலயத்தில் அருள்வாக்கு கூறும் ஞான கணேஸ்வரி அம்மன் அவர்கள் சனிக்கிழமையில் இருந்து திங்கட்கிழமை வரை (9,10,11 ) ஆம் திகதிகளில் ஞானவைரவர் ஆலயம் கலாசாலை வீதி, 2 ஆவது ஒழுங்கை, திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணத்தில் அருள்வாக்குக் கூறுவார்.

★ **11.04.2016 சங்காபிஷேகம் நடைபெற்று அன்னதானம் வழங்கப்படும்.**

**பூசை நேரம்:** முற்பகல் 10.30 - 12.30 மணிவரை
மாலை 5.30 - 6.30 மணிவரை

**குறிப்பு:** கலாசார உடையுடன் வருகை தரவும்.

**தொடர்பு:** 021 221 9127, 077 801 2226

(J.152) (13.18)

**Jaffna College Institute of Technology - Vaddukoddai**

**Comprehensive English & Sinhala (with Spoken Component ) for School leavers.**

CANDIDATES WILL BE CALLED SHORTLY

Apply to Director
**Jaffna College Institute of Technology Vaddukoddai**

**Tel.no: 021 321 3139 and 021 225 0975**

email: ejcitsltnet.lk

**இதோ வெளிவந்துவிட்டது உங்கள் வீட்டுச் சஞ்சிகை**

ஏப்ரல் மாத இதழ்!

- தமிழரும் சித்திரைப் புத்தாண்டும்
- எப்போதும் தோல்வி! என்ன செய்யலாம்?
- தந்தையின் முகநூல் மகளுக்கு ஆப்பு!
- பை - சொல்லும் கதை
- உணர்வுகளே உன்னத்தின் திறவுகோல்
- விண்ணிலிருந்து பேசுகிறோம்
- Shrilanka நன்மைதரும்
- நடத்தைப்பிறள்வுகளும் ஆசிரியர்களும்
- கழுகுப்பார்வையும் திண்ணைச்சங்கதியும்
- அந்த ட்ரிங் மாதிரி வருமா
- நம்ம குடும்பம் நல்ல குடும்பம்
- மலையக அவலம்;உண்மை நிலை என்ன?

*சுயதொழில் கையேடு
*கட்டுரை
*கவிதை
*தொடர்/சிறு/நிமிட/துளி - கதை
*ஆன்மிகம்
*நட்சத்திர இல்லத்தரசி
*இம்மாத மங்கை
*இலக்கியம்
*சிறப்பு நேர்காணல்கள்
*கேள்வி - பதில்
*தரம்-5பரீட்சை
*கலைப்பிரிவு எதிர்பார்க்கை வினாக்கள்
*7திறன் போட்டிகள்




இன்னும் பல சுவாரஸ்யமான அம்சங்களுடன் வெளிவந்துள்ளது. இன்றே சுடர்ஒளி,உதயன் முகவர்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.

பிரதிகளைப் பெற்றுக்கொள்ள:- வடக்கு: 077-6569617/071-8628369, கிழக்கு: 071-8724057, வவுனியா: 077-2772726 மலையகம்: 071 - 8724056, ஏனைய மாவட்டங்கள்: 071 - 4114990 மற்றும் உதயன், சுடர்ஒளி முகவர்களிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

மருதடியான் துணை



# மானிப்பாய் மருதடி விநாயகர் தேவஸ்தானம்
# 18ஆம் திருவிழா சிறப்பிதழ் 2016

**மெய்யடியார்களே!**

நிகழும் மங்கலகரமான மன்மத வருடம் பங்குனி 26ஆம் நாள் (08.04.2016) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அபிஷேகத்துடன் திருவிழா ஆரம்பமாகும். 11 மணிக்கு பூஜை, 11.15 மணிக்கு ஸ்தம்ப பூஜை, 12 மணிக்கு வசந்த மண்டப பூஜையும் தொடர்ந்து உற்சவமும் நடைபெறும்.

காலை உற்சவத்தின் போது உற்சவகால மங்கல இசைக்குழுவினரான ஆஸ்தான வித்துவான் நடராஜா குழுவினருடன் நாதஸ்வர இளவரசு தொல்புரம் வழக்கம்பரை R. சிவகுமார் குழுவினரின் கச்சேரி இடம்பெறும். வசந்தமண்டப பூஜையைத் தொடர்ந்து விநாயகப் பெருமான் உள்வீதிவலம் வந்து அடியார்களுக்கு அருள்பாலிப்பார்.

அதனைத் தொடர்ந்து மகேஸ்வர பூஜை (அன்னதானம்) இடம்பெறும்.

மாலை நிகழ்வாக 5.00 மணிக்கு பூஜையும், 5.15 மணிக்கு ஸ்தம்ப பூஜையும், 6.00 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையும் நடைபெற்று எல்லாம் வல்ல விநாயகப் பெருமான் உள்வீதி வலம் வந்து தொடர்ந்து 7.00 மணிக்கு அலங்கரிக்கப்பட்ட அழகிய பூந்தண்டிகையில் வெளிவீதி உலாவந்து அடியார்களுக்கு அருள்பாலிப்பார்.

**மேளக்கச்சேரி : உற்சவகால ஆஸ்தான வித்துவான் திரு.நடராஜா குழுவினர்.**

**விஷேட தவில் நாதஸ்வரக் கச்சேரி பிற்பகல் 4.00 மணிக்கு இடம்பெறும். (சுவாமி வெளிவீதி உலாவினைத் தொடர்ந்து இரவு 8.00 மணி தொடக்கம் தொடர்ந்து கச்சேரி இடம்பெறும்.)**

| நாதஸ்வரக் கலைஞர்கள் | தவில் கலைஞர்கள் |
|---|---|
| நாதஸ்வர இளவரசு தொல்புரம், வழக்கம்பரை<br>R. சிவகுமார் | லயஞான குபேரபூபதி, அளவையூர்,தட்சணாமூர்த்தி அவர்களி ன் புதல்வன்<br>T. உதயசங்கர் |
| நாதகான லோலன், நாதவினோதன் - ஈழநல்லூர்<br>P.S. பாலமுருகன் | தவிலிசை ஞானவேந்தன் - மானிப்பாய்<br>N. பிரசன்னா |
| நாதசங்கமம், நாதஸ்வர இன்குழல் வேந்தன்<br>V.K.P. குமரேசன் (குமரன்) | தவில் இளவரசு - யாழ்ப்பாணம்<br>N. நந்தகுமார் |
| நாதஸ்வர இளவேனில் - கோண்டாவில்<br>K. நாகதீபன் | தவில் வித்துவான் - சித்தங்கேணி<br>S. சிவகுமார் |
| நாதஸ்வர வித்துவான் - மானிப்பாய்<br>N. ராஜ்குமார் | தவில் வித்துவான் - யாழ்ப்பாணம்<br>M. சுதாகரன் |

**அனைத்து அடியார்களும் விழாவில் கலந்துகொண்டு விநாயகப் பெருமானின் இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் அன்பாக வேண்டுகின்றோம்.**

டச்சு வீதி,
தோறாந்தோட்டம், மானிப்பாய்.

(A22497)(17.8)

சுபம்

18ஆம் திருவிழா உபயகாரர்கள், திரு.சு.பீதாம்பரம் குடும்பம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

After O\L or A\L
COMPUTER COURSES
Diploma in Computerized **Accounting** Tally, Quick Book, Accpack, M.Y.O.B
Diploma in **Video Editing** Premiere Pro CS6, Adobe Photoshop, Adobe AfterEffet, Pinnacle Studio,
Diploma in **Web Designing & Development**
Advanced Diploma in **Hardware & Networking**
**Java** (for Developers) | C, C++, V.B.NET, PHP
தகவல் தொழில் நுட்ப கல்விக்கு முழு மையான கற்கை நெறி
DiTEC
DIPLOMA IN INFORMATION TECHNOLOGY
சிறந்த வேலை வாய்ப்புக்கும் உள்நாட்டு/ வெளிநாட்டு உயர் கல்விக்கு
DMI COMPUTER EDUCATION
Diploma in **AutoCAD** 2D & 3DModeling
புதிய பிரிவுகள் ஆரம்பம்- சனி, ஞாயிறு 9.30
மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற் கல்வி ஆணைக்குழு (TVEC) ஆல் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்
**DMI COMPUTER EDUCATION**

| No.113, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் Tel.: 021-222 4403 | M.M.V. வீதி, நெல்லியடி Tel.: 021-226 2470 | No. 174 கண்டி வீதி, HNB வங்கி அருகில் சாவகச்சேரி Tel.: 021-227 0775 | No. 130 K. K. S வீதி, NSB வங்கி அருகில் சுன்னாகம் Tel.: 021-224 1970 | No.19, A9 வீதி, கிளிநொச்சி Tel.: 021-228 5655 |
|---|---|---|---|---|

# காலநிலைபோல் அமைச்சரவை

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1252 சீட்டிழுப்பு திகதி 2016.04.07
வெற்றி இலக்கங்கள் 17 21 22 25 T
அடுத்த திங்கட்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 12,792,580/=

SUPER BALL
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 484
சீட்டிழுப்பு திகதி 2016.04.07
வெற்றி இலக்கங்கள் 11 12 57 73 K
அடுத்த சனிக்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 50,852,400/=

காலநிலை குறித்து நிலையான கருத்தைக் கூற முடியாதுள்ளது போன்று, அமைச்சர்களின் எண்ணிக்கை எத்தனை ? என்பதை இந்த நாட்டில் கூற முடியாதுள்ளதாக ஜே. வி. பி.யின் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார். அமைச்சுப் பதவி வழங்குவதில், கடந்த அரசைப் போன்றே இந்த அரசும் செயற்படுகின்றது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (வ)

## வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் அட்டவணைப்படுத்தப்படாத பதவி வெற்றிடத்தை நிரப்புதல்-2016

வலிகாமம் வடக்கு பிரதேச சபையில் தற்பொழுது வெற்றிடமாகவுள்ள கீழ்க்காணும் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக வலிகாமம் வடக்கு பிரதேச சபை எல்லைக்குள் நிரந்தரமாக வதியும் உரிய தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| பதவி இல | பதவிப்பெயர் | வெற்றிடம் |
|---|---|---|
| 01 | ஆயுர்வேத மருந்தாளர் | 01 |

சேவை நிபந்தனைகள்

1. இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதிய உரித்துடையதுமாகும்
2. ஊழியர் விதவைகள்/தபுதாரர்கள் அநாதைகள் ஓய்வூதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்.
3. நியமனம் பெறுபவர்கள் 03 வருட தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவார்கள்

அடிப்படைத்தகைமைகள்

1. விண்ணப்பதாரி இலங்கைப்பிரஜையாக இருத்தல் வேண்டும். அத்துடன் வலிகாமம் வடக்குபிரதேச சபை எல்லைக்குள் தொடர்ச்சியாக 5 வருடங்கள் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும். கிராம உத்தியோகத்தரால் வழங்கப்பட்ட வதிவிட சான்றிதழ் பிரதேச செயலாளரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும். அல்லது நிரந்தர வதிவிடத்தினை உறுதிப்படுத்தும் வாக்காளர் பட்டியலின் மூலப்பிரதி மூலம் உறுதிப் படுத்தப்பட வேண்டும்.
2. விண்ணப்பங்கள் பொறுப்பேற்கும் இறுதித்திகதி 29.04.2016 அன்று 18 வயதிற்கு குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே உள்ளூராட்சி சேவையில் நிரந்தரமானதும், ஓய்வூதியம் உரித்துடையதுமான நியமனங்களை கொண்டிருப்பவர்களிற்கு உயர் வயதெல்லை ஏற்புடையதாகாது.
3. நன்னடத்தை உடையவராகவும் தேகாரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

கல்வித் தகைமை

கல்விப்பொதுத்தராதர சாதாரண தரப்பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் தமிழ்/சிங்களம் உள்ளடங்கலாக இரு பாடங்களில் திறமைச்சித்திகளுடன் ஆகக் குறைந்தது ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். ஒரே தடைவையில் ஐந்து (05) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
அத்துடன்
அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் ஆறுமாதங்களுக்கு குறையாத வகையில் தொழிற்பயிற்சி பெற்றமைக்கான சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

சம்பளம்:- 25.02.2016ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இல. 03/2016 இற்கமைவாக மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ( PL- 2 2016) ரூ. 25250 - 10x270 - 10x300 - 10x330 - 12x350 – 38450 .
இதற்கமைவாக மாதாந்தவேதனம் ரூபா 14818.00 உம்,சீராக்கல் படி ரூபா 9974.00 உம் வழங்கப்படும்.

தெரிவு செய்யப்படும் முறை
அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப்பரீட்சைக்குழுவினால் நேர்முகப்பரீட்சை நடாத்தப்படுவதுடன் விண்ணப்பதாரி நேர்முகப்பரீட்சைக்குரிய ஒழுங்குவிதிகளுக்கு அமைந்து ஒழுகுதல் வேண்டும்.

விண்ணப்பிக்கும் முறை

* வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் தலைமையலுவலகத்தில் ரூ.100.00 ஐ செலுத்தி விண்ணப்பபடிவத்தினைப் பெற்று பூரணப்படுத்தி தகைமைகளுக்கு ஆதாரமான சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் அனுப்பி வைக்கப்படவேண்டும். உள்ளக விண்ணப்பதாரிகளும் விண்ணப்பிக்கமுடியும்.
* விண்ணப்பத்தில் உரிய முறையில் தேவையான தகவல்கள் பூரணப் படுத்தப்படாதிருப்பின் அத்தகைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
* விண்ணப்பங்கள் விண்ணப்பதாரியின் சொந்தக் கையெழுத்தில் பூரணப் படுத்தப்பட்டு செயலாளர், வலிகாமம் வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை (மல்லாகம்) என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்படவேண்டும்
* தபாலுறையின் இடது பக்க மேல்மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் எழுதப்படல் வேண்டும்
* ஆட்சேர்ப்புத்திட்ட விதிமுறைகளின்படி விண்ணப்பதாரி விண்ணப்பிப்பதற்கு தகைமையற்றவர் என நியமனத்திற்கு முன்னரோ நியமனத்திற்கு பின்னராகவோ நியமனத்தின் போதோ அல்லது முன்வைக்கப்படும் ஏதேனும் தகவலொன்று பொய்யானதெனவோ தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் இந்நியமனம் நிறுத்தப்படும்.

விண்ணப்ப முடிவுத்திகதி 2016.04.29ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

செல்வி.க.திருக்குமாரி,
செயலாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேசசபை,
காங்கேசன்துறை.மல்லாகம்.
08.04.2016.

NORTH LANKA IIT
NLIIT CITY CAMPUS
கல்வியியல் முதுமாணி [M.Ed.] கற்கை நெறி
ஆரம்ப செயலமர்வு 10-04-2016 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணி
இடம் - **North Lanka IIT** வளாக பிரதான மண்டபம்
*கல்வி அமைச்சின் அனுமதி
*தேசிய கல்வி நிறுவக கல்வியியல் முதுகலைமாணி பாடத்திட்டம்
*தமிழ் மொழி மூல பாடநெறி
*பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கிகாரத்துடன்
***Costa Rica** சர்வதேச பல்கலைக்கழகப்பதிவுடன்
"மிகத்தரம் வாய்ந்த **M.Ed.** பாடநெறி ஆரம்பமாகின்றது. பங்குபற்ற விரும்புவோர் தவறாது சமுகமளிக்கவும்"
*விரைவில்
1. கல்வியியல், விஞ்ஞானம், கணிதம், தகவல் தொழில்நுட்பம்,ஆரம்பக்கல்வி, தமிழ், சமயம் ஆகிய துறைகளில் **M.Phil, Ph.D** பாடநெறிகளும் வெளிநாட்டுப்பல்கலைக்கழகங்களுடன் இணைந்து ஆரம்பிக்கப்படவுள்ளன.
2. பாடசாலை அதிபர்கள், உப அதிபர்கள், ஆர்வமுள்ள ஆசிரியர்களுக்கான **PGDEM,** கல்விமுகாமைத்துவ டிப்ளோமா, பாடசாலை முகாமைத்துவ சான்றிதழ், டிப்ளோமா பாடநெறிகளும் எமது மண்ணின் அதிபர், ஆசிரியர் வாண்மை விருத்தி கருதி ஆரம்பமாக உள்ளன.
3. சர்வதேச - தேசிய - உயர் கல்வி ஆய்வுகள் சமர்ப்பிப்புக்களுக்கான வழிகாட்டல்கள், பாடசாலை முகாமைத்துவ, பெறுபேறுகளை அதிகரிக்க முகாமைத்துவ பிரச்சனைகளைத்தீர்க்க ஆய்வுகளை மேற்கொண்டு தீர்வுகளைக்காண ஆலோசனைகளைப் பெற நிபுணத்துவ ஆலோசனைச்சேவையை உரிய தகுதி வாய்ந்த நிபுணர்களால் வழங்கவுள்ளோம்.
4. தற்போது எமது வளாகத்தில்
**B.Sc. in Comp.Sc., PGD, M.Sc., M.BA, Degree in Physical Ed.**
ஆகிய பாடநெறிகள் நடைபெறுகின்றன.
**MEd** தொடர்பான மேலதிக விபரங்களுக்கு:
கலாநிதி பா. தனபாலன்
T.P - 0770681958
Dr.B.Thanabalan [Ph.D]
Dean
Faculty of Education
University of Costa-Rica and
Nort Lanka IIT collabration Project-2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்கும்பானில் கடற்படைக்கு 17 ஏக்கர் காணி பறிக்க முயற்சி;

## எதிர்த்து இன்று மக்கள் போராட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 8

மண்கும்பான் மேற்கு சாட்டி சுற்றுலாக் கடற்கரையை அண்டிய பகுதியில் தனியாருக்குச் சொந்தமான 17 ஏக்கர் காணியை, வேலணை கடற்படை முகாம் விஸ்தரிப்புக்குச் சுவீகரிப்பதற்காக இன்று காணி அளவீடு மேற்கொள்ளப் படவுள்ளது.

இந்த நிலையில் அதனை நிறுத்துமாறு வலியுறுத்தி, அங்கு மக்கள் இன்று போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

காணி அளவீட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதைக் கண்டித்து, அதனைத் தடுத்து நிறுத்துமாறு காணி உரிமையாளர்களால் அரச அதிபருக்குக் கடிதம் அனுப்பப் பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில்,

காணி அளவீடு தொடர்பாக வேலணைப் பிரதேச செயலகத்துக்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் அறிவுறுத் தப்பட்டுள்ளது. ஆனால் இதுவரை காணி உரிமையாளராகிய எமக்கு எந்தவித முன்னறிவித்தலும் வழங்காமல் எதேச்சதிகாரமாக எமது பூர்விக நிலங்கள் சுவீகரிப் படுகின்றன.

இதனை உடனடியாகத் தடுத்து நிறுத்துவதற்கு ஆவன செய்யுமாறும், மேற்படி காணியைக் கடற்படையினரிடம் இருந்து நிரந்தமாக விடுவித்துத் தருமாறும் கேட்கப்பட்டுள்ளது.

இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு நில அளவைத் திணைக்களத்தினர் காணி அளவிடுவதற்கு வருகைதரும் சமயத்தில், அந்த இடத்துக்கு நேரில் சென்று எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப் போவதாகக் காணி உரிமையாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

(த-வ-ரி)

## காங்கேசன்துறை

தெரிவிக்கப்பட்டது.

காங்கேசன்துறைக் கடலில் பயணித்துக் கொண்டிருந்த 40 அடி நீளப் படகு ஒன்றை வழிமறித்த கடற்படையினர், அவர்களின் தொழில் அனுமதி மற்றும் ஆவணங் களைப் பரிசோதனைக்கு உட்படுத்தினர்.

இவ்வாறு சோதனைக்கு உட்படுத்திய பட கில் சிலிண்டர்கள் மற்றும் பயணப் பைகளும் சந்தேகத்துக்கு இடமாக இருந் தமையால், குறித்த படகில் இருந்த 11 பேரையும் கடற் படையினர் கைது செய் துள்ளனர்.

கைது செய்யப்பட்ட 11 பேரும் படகு மற்றும் உடைமை களுடன் மாவட்டக் கடற்றொழில் பிரதிப்பணிப் பாளர் ரமேஸ்கண்ணாவிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளனர்.

இது தொடர்பில் யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரி யல் வளத் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் ரமேஸ்கண்ணாவிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது,

குறித்த படகில் முறைப்படி 7 பேர் மாத்திரம் பயணிக்க முடியும். ஆனால் மேலதிகமாக 4 பேர் சேர்ந்து மொத்தம் 11 பேர் பயணித்துள்ளனர். அத்துடன், அந்தப் படகில் 20 சிலிண்டர்களே எடுத் துச் செல்ல முடியும். ஆனால் அவர்களிடம் மேலதிகமாக 10 சிலிண் டர்கள் என 30 சிலிண் டர்கள் இருந்துள்ளன. மேலும் அவர்கள் தனி யாகச் சிறிய 2 படகுகளை யும் கொண்டு சென்றுள் ளனர். அது பற்றி விசா ரிக்கிறோம்.

குறித்த படகு, அதில் பயணித்தவர்கள் மற் றும் உடைமைகள் என் பவற்றைக் கடற் படை யினர் உரிய சட்டத்தின் பிரகாரம் கையளித்திருந் தனர் . இதனால் அவர் களைப் பொறுப்பேற்ற நாமும் சட்டத்தின் பிரகா ரம் நீதிமன்றில் முற்படுத் தவுள்ளோம் - என்றார்.

(த-வ-4-101)

## இந்திய

நாகபட்டினத்தைச் சேர்ந்த இந்திய மீன வர்கள் 9 பேர் ஒரு படகில் எல்லை தாண்டி வந்து நெடுந்தீவுக் கடற்பரப்பில் தொழி லில் ஈடுபட்டிருந்த வேளையிலேயே இவ் வாறு கைதுசெய்யப்பட்ட னர்.

கைதுசெய்யப்பட்ட அனை வரும் காங்கேசன் துறைக்குக்கொண்டுசெல் லப்பட்டு மருத்துவப் பரி சோதனையின் பின்னர் யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக் களத்தினரிடம் ஒப்படைக் கப்பட்டனர். அவர்களைத் திணைக்களத்தினர் ஊர் காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தினர். அவர் களை எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதி மன்று உத்தரவிட்டது.

இதுதவிர நேற்றுமுன்தினம் இதே குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 4 மீனவர்களையும் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதி மன்று உத்தர விட்டுள்ளது.

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருந்த இந்திய மீனவர்கள் 76 பேர் விடுவிக்கப்பட்டிருந்தனர். விடுவிக் கப்பட்டவர்கள் இன்னமும் தமது சொந்த நாட்டுக்குத் திரும்ப முன்னர் மீண்டும் அத்துமீறல் நடந்துள்ளது.

(ற-ஜ-4-101-106-107)

## கண்ணீர் அஞ்சலி



**சசிகரன் சுதர்சன்** அவரின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**சிவகுமார்** (மாமன்)

## மரண அறிவித்தல்

### செல்லையா செல்வரத்தினம்



மண்கும்பான் கிழக்கு, 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், ஆறுகால்மடத்தில் வசித்தவரும், தற்போது சபாபதிவீதி, கொக்குவில் கிழக்கில் வசித்தவருமாகிய செல்லையா செல்வரத்தினம் நேற்று (07.04.2016) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - சிவகாமி,விசாலாட்சி தம்பதியரின் அன்பு மருமகனும், சின்னம்மாவின் பாசமிகு கணவரும், கலா, குமார் (பிரான்ஸ்), ரூபன் (பிரான்ஸ்), கோகிலன் (பிரான்ஸ்), காந்தன் (பிரான்ஸ்), தாரணி (ஜேர்மனி),செல்வன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்: **வை.சந்திரகுமார்**
**(மருமகன்)**
**077 248 9134**

சபாபதி வீதி,
கொக்குவில் கிழக்கு.

குமார் - 0033 7773 67202, ரூபன் - 0033 6165 32107,
கோகிலன் - 0033 6517 53543, காந்தன்-0033 6035 81456,
றமேஸ் - 0049 1752 474108, செல்வன் - 0033 7819 22989

(எசி/89)(11,18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்தங்கம் சின்னத்துரை



தோற்றம்: 1939.07.15
மறைவு: 2016.04.07

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் கச்சேரியடியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தங்கம் சின்னத்துரை நேற்று (07.04 . 2016) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.04.2016) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப 10.00 மணிக்கு பூதவுடல் செம்மணி இந்து மயனத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
றக்கா வீதி,
யாழ்ப்பாணம்.
(68232)
(12. 17.19) **குடும்பத்தினர்.**

### அன்னம்மா விஸ்வலிங்கம்

கொழும்புத்துறையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ராசு என அன்பாக அழைக்கப்படும் அன்னம்மா விஸ்வலிங்கம் நேற்று (07.04.2016) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயிலு- ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற விஸ்வலிங்கத்தின் அன்பு மனைவியும் லோகேஸ்வரி, மனோகரன், சிறிநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற முருகேசு, தனேஸ்வரி (யாழ் போதனா வைத்தியசாலை தாதிய உத்தியோகத்தர்) கௌரிசிவம் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஜெயசுதன்(சுதன்-பிரான்ஸ்), வாசுகி(பிரான்ஸ்),சுகந்தன்(பரந்தன் சித்த அயுள் வேத வைத்தியசாலை உதவி சகாதார உத்தியோகத்தர்), தாருனி, உஷானி, சங்கீர்த்தனன் (லண்டன்) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.04.2016) வெள்ளிக்கிழமை 9/1 முதலாம் குறுக்குத்தெரு கொழும்புத்துறையில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

### சரஸ்வதி முருகேசு



சங்கானையைப். பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சரஸ்வதி முருகேசு நேற்று (07.04. 2016) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற முருகேசுவின் அன்பு மனைவி யும் காலஞ்சென்றவர்களான சின்னையா, பாலசிங்கம் (MPM-கொழும்பு) மற்றும் இராசரத்தினம் (MRS சங்கானை) காலஞ்சென்ற இராசம்மா மற்றும் நவரத்தினம் ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற பெரியதம்பி மற்றும் செல்வம் (ஜேர்மனி), அப்பு (கனடா), பிரபா(கனடா), பிரதி(கனடா), வவா, வவி ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஆஸ்பத்திரி வீதி,சங்கானை. **குடும்பத்தினர்.**

### சுப்பிரமணியம் செல்வராஜா

(பொறியியலாளர் UK)

புன்னாலைக் கட்டுவன் வடக்கைச் சேர்ந்த சுப்பிரமணியம் செல்வராஜா கடந்த 03.04. 2016 லண்டனில் காலமானார்.

அன்னார் புன்னாலைக் கட்டுவன் வடக்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் சுப்பிரமணியம்- திலகரத்தினம் தம்பதியரின் மூத்த புதல்வனும் கமலேஸ்வரி (ரஞ்சி)யின் அன்புக் கணவரும் கமாலின் அன்புத் தந்தையும் நீலாயதேவி மகாதேவன் (UK), வில்வராஜா (பொறியியலாளர்UK), பரமராஜா (இளைப்பாறிய மேல் நீதிமன்ற நீதிபதி), குலசேகரம் (UK), காலஞ்சென்ற இராஜேஸ்வரி தங்கசாமி ஆகியோரின் சகோதரனும் கந்தையா தங்கசாமி, சின்னத்துரை மகாதேவன், இரஜனி, கௌரி, திலகேஸ்வரி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 12.04.2016 இல் **SLOUGH, UK** யில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண் பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**சு.பரமராஜா (சகோதரன்)**

## கண்டாவளை பிரதேச முடிவுகள்

கிளிநொச்சி, ஏப். 8
கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் பதிவுசெய்த கழகங்களுக்கு இடையில் நடத்தப்பட்ட பெருவிளையாட்டுக்களில் வலைப்பந்து, துடுப்பாட்டம், கரப்பந்து ஆகிய விளையாட்டுக்களில் பெண்கள் பிரிவில் பரந்தன் இளைஞர் வட்டம் முதலிடம் பெற்றுள்ளது. அத்தோடு எல்லே, கபடி போன்ற விளையாட்டுக்களில் கல்மடு பெண்கள் அணி முதலிடம் பெற்றுள்ளது.
பரந்தன் இளைஞர் வட்ட பெண்கள் அணிகளே கடந்த ஐந்து வருடங்களாகத் துடுப்பாட்டம், கரப்பந்து ஆகிய விளையாட்டுகளில் முதலிடத்தைப் பெற்றுள்ளனர். தற்போது நடந்து முடிந்த விளையாட்டுக்கள் அடிப்படையில் பரந்தன்இளைஞர்வட்டஅணியே முதலிடத்தில் உள்ளது. (ம)

## முல்லையில் விளையாட்டு தொகுதி

மாங்குளம், ஏப். 8
முல்லை மாவட்டத்தில் உள்ளக விளையாட்டு மைதானம், நீச்சல் தடாகம், விளையாட்டு அரங்குடன் கூடிய விளையாட்டுத் தொகுதி அமைப்பதற்கான அங்கீகாரம் கிடைக்கப்பெற்று, இதற்கான வேலைத் திட்டங்கள் தற்போது தேசிய விளையாட்டு அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முல்லைத்தீவு நகருக்கு அண்டியதாக 14 ஏக்கர் காணியொன்று தெரிவு செய்யப்பட்டு 571 மில்லியன் ரூபா செலவில் குறித்த வேலைத்திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (ம-422)

# ஆதிசக்தி, விக்னேஸ்வரா அணிகள் முன்னேற்றம் திக்கம் இளைஞரின் கால்பந்தாட்டத் தொடரில்



கரணவாய், ஏப். 8
திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் நடத்திவரும் கால்பந்தாட்டத் தொடரில் வல்வை ஆதிசக்தி விளையாட்டுக் கழகமும் புத்தூர் சிறிவிக்னேஸ்வரா விளையாட்டுக் கழகமும் அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளன.

**ஆதிசக்தி - நக்கீரன்**

பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் நடத்தும் இந்தத் தொடர் குறித்த கழகத்தின் மைதானத்திலேயே இடம்பெற்று வருகின்றது. தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் வல்வை ஆதிசக்தி விளையாட்டுக் கழகமும் அல்வாய் நக்கீரன் விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சை நடத்தின.
கோல் கணக்கு ஆரம்பிக்கப்படாமலேயே முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியும் கோல்கணக்கு இல்லாமல் நகர்ந்த போதிலும், 15ஆவது நிமிடத்தில் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஆதிசக்தியின் பிரசாந் கோல் ஒன்றைப் பதிவுசெய்ய அக்கோலின் மூலம் வெற்றி பெற்றது வல்வை ஆதிசக்தி விளையாட்டுக்கழகம்.

**பாரதி - விக்னேஸ்வரா**

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் பொலிகை பாரதி விளையாட்டுக் கழகமும் புத்தூர் விக்னேஸ்வராக் கல்லூரி அணியும் மோதிக்கொண்டன.
பரபரப்பாக இடம்பெற்ற முதல் பாதி ஆட்டத்தின் 15 ஆவது நிமிடத்தில் தமது கோல்பகுதியில் வைத்து விதிகளுக்கு முரணாக பாரதி வீரர் விளையாட, எதிரணிக்கு தண்டனை உதை வழங்கப்பட்டது. வாய்ப்பு கச்சிதமாகப் பயன்படுத்தப்பட விக்னேஸ்வரா சார்பாக முதல் கோல் பதிவானது. 18 ஆவது நிமிடத்தில் பதிலடி கொடுத்து ஆட்டத்தை சமநிலைக்குக் கொண்டு வந்தது பாரதி. மேலதிக கோல்கள் எவையும் பதியப் படாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம்பாதியின் இறுதிக் கட்டம் வரை கோல்கணக்கில் மாற்றங்கள் ஏற்படாததால் ஆட்டம் சமநிலையில் நிறைவடையும் நிலை ஏற்பட்டது.
இருப்பினும் இறுதி நிமிடத்தில் அசத்தலான கோல் ஒன்றை விக்னேஸ்வரா வீரர் பிரசாந் பதிவு செய்ய 2:1 என்று வெற்றியைப் பறித்தெடுத்தது புத்தூர் விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகம். (ம-108)

# யாழ்., உடுவில் பிரதேச செயலகங்கள் கூடைப்பந்தில் அரையிறுதிக்குத் தகுதி

கரணவாய், ஏப். 8
பிரதேச செயலகங்களுக்கு இடையிலான மாவட்ட மட்ட கூடைப்பந்தாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவில் யாழ். பிரதேச செயலக அணியும் பெண்கள் பிரிவில் உடுவில் பிரதேச செயலக அணியும் அரையிறுதி ஆட்டங்களுக்குத் தகுதி பெற்றுள்ளன.
வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுமதியுடன் யாழ். செயலக விளையாட்டுப் பிரிவினர் நடத்தும் பிரதேச செயலகங்களுக்கு இடையிலான மாவட்ட மட்ட கூடைப்பந்தாட்டத் தொடர்கள் யாழ். மத்திய கல்லூரி, வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலைகளின் கூடைப்பந்தாட்டத் திடல்களில் இடம்பெற்று வருகின்றன. யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆண்களுக்கான ஆட்டத்தில் யாழ். பிரதேச செயலக அணியும் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணியும் மோதின. விறுவிறுப்பாக இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் 61:55 என்ற புள்ளிகள் அடிப்படையில் யாழ். அணி வெற்றிபெற்று அரையிறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றது.
வேம்படி மகளிர் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற பெண்களுக்கான ஆட்டத்தில் உடுவில் பிரதேச செயலக அணியும், கோப்பாய் பிரதேச செயலக அணியும் பலப்பரீட்சை நடத்தின. இதில் 38:18 என்ற புள்ளிகளின் அடிப்படையில் உடுவில் பிரதேச செயலக அணி வெற்றி பெற்று அரையிறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றது. (ம-108)

## வல்வையை வீழ்த்தியது கொலின்ஸ்

கரணவாய், ஏப். 8
திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் நடத்திவரும் கால்பந்தாட்டத் தொடரில் கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேற்றம் கண்டுள்ளது.
பருத்தித்துறை காலப்பத்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நடத்தப்பட்டுவரும் இந்தத் தொடரில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் வல்வை விளையாட்டுக் கழகமும் கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.
ஆட்டத்தின் ஆரம்பம் கொலின்ஸுக்கு சற்று சறுக்கலாக அமைந்தது. மத்தியில் வைத்து முன்னகர்த்தப்பட்ட பந்தை வல்வையின் சஞ்சீவன் எவரும் எதிர்பாராத விதமாக கோலாக மாற்றினார்.
தொடர்ந்து 5 ஆவது நிமிடத்தில் கொலின்ஸ் சார்பாக பதில் கோல்போட்டு அதிர்ச்சி கொடுத்தார் விஷ்ணு. அடுத்த 5 ஆவது நிமிடத்தில் பின்கள வீரர் பானுராஜ் மீண்டும் கொலின்ஸ் சார்பாக மற்றொரு கோலைப் பதிவுசெய்ய 2:1 என்ற கொலின்ஸின் ஆதிக்கத்துடன் முடிவடைந்தது முதல் பாதி.
இரண்டாவது பாதியில் 3 ஆவது நிமிடத்தில் கொலின்ஸின் வீரர் குமார் பிறிதொரு கோலைப் பதிவுசெய்ய 3:1 என்ற அடிப்படையில் வென்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது கொலின்ஸ் விளையாட்டுக்கழகம். (ம-108)

# இன்றைய மோதல்கள்

**நாமகள் வி.கழகத் தொடர்**

தெல்லிப்பழை நாமகள் சனசமூக நிலையத்தின் 53ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் நாமகள் கிண்ணத்துக்கான வடக்கின் சமர் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் நாமகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பாசையூர் சென்.அன்ரனிஸ் அணியை எதிர்த்து தாவடி காளியம்பாள் அணி மோதவுள்ளது. தொடர்ந்து மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் அணியை எதிர்த்து கரணவாய் மத்திய அணி மோதவுள்ளது.

**அல்ஹிஜிரா வி.கழகத் தொடர்**

வவுனியா அல்ஹிஜிரா விளையாட்டுக்கழகம் வவுனியா கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையில் நடத்தும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலய அஸ்ரப் ஞாபகார்த்த மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறும் ஆட்டத்தில் ஈகிள்ஸ் அணியை எதிர்த்து வளர்பிறை அணி மோதவுள்ளது.

**அரியாலை கரப்பந்தாட்டம்**

அரியாலை சுதேசிய திருநாள் கொண்டாட்டத்தை முன்னிட்டு யாழ். மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் கரப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை இடம் பெறும் அரையிறுதி யாட்டங்களில் இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில், மல்லாகம் நியூ வொறியர்ஸ் அணியை எதிர்த்து நீர்வேலி காமாட்சி அம்பாள் அணி மோதவுள்ளது. இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் அரையிறுதி யாட்டத்தில் இளவாலை மத்திய அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் வசந்தசிறி அணி மோதவுள்ளது. (ம-23)

## கண்டாவளைப் பிரதேச முடிவுகள்

கண்டாவளைப் பிரதேச செய லர் பிரிவில் கழகங்களுக்கு இடையில் நடத்தப்பட்ட பெரு விளையாட்டுகளில் வலைப்பந்து, துடுப்பாட்டம், கரப்பந்து ஆகிய விளையாட்டுக்களில் பெண்கள் பிரிவில் பரந்தன் இளைஞர் வட்டம் முதலிடம் பெற்றுள்ளது. அத்தோடு எல்லே, கபடி போன்ற விளையாட்டுக்களில் கல்மடு பெண்கள் பிரிவு முதலிடம் பெற்றுள்ளது.பரந்தன் இளைஞர் வட்ட பெண்கள் அணிகளே கடந்த ஐந்து வருடங்களாக துடுப்பாட்டம், கரப்பந்து ஆகிய விளையாட்டுக்களில் முதலிடத்தைப் பெற்றுள்ளன. தற்போது நடந்து முடிந்த விளையாட்டுக்கள் அடிப்படையில் பரந்தன் இளைஞர் வட்ட அணியே முதலிடத்தில் உள்ளது. (ம)


## வவுனியா பாடசாலைகளுக்கு ஹொக்கி உபகரணங்கள்

வவுனியா மாவட்டப் பாடசாலைகளில் ஹொக்கி விளையாட்டை ஊக்குவிக்கும் முகமாக இலங்கை ஹொக்கி விளையாட்டுச் சங்கம், வவுனியா ஹொக்கி விளையாட்டுச்சங்கம் என்பன இணைந்து சில உபகரணங்களை வழங்கியுள்ளன.
வவுனியா தமிழ் மகாவித்தியாலயத்தின் மண்டபத்தில் அதிபர் சீ.மரியநாயகம் தலைமையில் நடந்த இந்த நிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கு ஹொக்கி உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. (ம)

## யங்ஸ்ரார் அணிக்கு வெற்றி

வவுனியா அல் ஹிஜிரா விளையாட்டுக்கழகம் வவுனியா கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையில் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் யங்ஸ்ரார் அணி வெற்றிபெற்றது.
வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலய அஸ்ரப் ஞாபகார்த்த மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் யங்ஸ்ரார் அணியை எதிர்த்து நியூ டைட் அணி மோதிக் கொண்டது. இதில் யங்ஸ்ரார் அணி 6:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சமிக்கு உயர் கௌரவம்

மேற்கிந்தியத் தீவுகளில் உள்ள ஒரு மைதானத்துக்கு தற்போதைய தீவுகளின் தலைவரான சமியின் பெயர் சூட்டப்படவுள்ளது.

நடப்பு வருடத்தின் ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் கிண்ணம் வென்ற மேற்கிந்தியத் தீவுகளுக்கு தலைமை தாங்கியவர் சமி. இதுவரை தீவுகள் இரண்டு தடவைகள் ரி-20 உலகக்கிண்ணம் வென்றுள்ளது. இரண்டிலும் சமியே தலைவராகச் செயற்பட்டார். இதனால் சமிக்கு ஓர் உயரிய கௌரவத்தை கொடுக்க முற்பட்ட அவரது சொந்த நகரமான சென்.லூசியாவின் கிரிக்கெட் நிர்வாகம், தனது ஆளுகைக்கு உட்பட்ட பியோஸ்ஜோர் மைதானத்தை டேரன் சமி சர்வதேச மைதானம் என பெயர் மாற்றம் செய்யவுள்ளதாக அறிவித்துள்ளது. இதற்கு மேற்கிந்தியத் தீவுகளின் கிரிக்கெட் கட்டப்பாட்டுச் சபையும் உடன்பட்டுள்ளது. (ம)

# கட்டுப்பாட்டுச் சபை மேல் எனக்கு நம்பிக்கையில்லை

## கிறிஸ் கெயில் காட்டம்



டேரன் சமி மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையைப் பற்றி வெளிப்படையாகப் பேசியதற்கு சக வீரர் கிறிஸ் கெயில் ஆதரவு தெரிவித்துள்ளார்.

ரி-20 உலகக்கிண்ண இறுதியாட்டம் முடிந்த பிற்பாடு நடந்த பரிசளிப்பு விழா வில் மேற்கிந்திய தீவுகள் அணியின் தலைவர் டேரன் சமி தனது ஆதங்கத்தை கொட்டி தீர்த்தார். அதிலும் 'ஜெர்சி கூட இல்லாமலேயே இந்தியா வந்தோம். எங்கள் கிரிக்கெட் சபை எங்களை மதிப்பதில்லை.' போன்ற கருத்துக்கள் அனைவரினதும் கவனத்தை ஈர்த்தன. இதையடு ஆதர வைத் தெரிவித்துள்ளார்.

கெயில் மேலும் தெரிவிக்கையில்: - சமி மேற்கிந்தியத் தீவுகளின் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையைப் பற்றி பேசியது 100 சதவீதம் சரியானது. டேரன் சமி டெஸ்டில் இருந்து ஓய்வு பெற்று விட்டார். ஆனால் நான் ஓய்வு பெறவில்லை. இருப்பினும் டெஸ்ட், ஒருநாள் ஆட்டங்களுக்கு என்னைத் தெரிவு செய்ய மாட்டார்கள். மேற்கிந்திய தீவுகள் அணிக்காக இந்தஆண்டு விளையாடும் கடைசி தொடர்நடந்து முடிந்த உலகக் கிண்ணத் தொடராகத் தான் இருக்க முடியும். 2017ஆம் ஆண்டு மீண்டும் ரசிகர்களைப் பார்க்க முடியும் என்று நினைக்கிறேன். நல்லவேளை யாக பரிசுத் தொகை கிடைத்தது. கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை ஊதியம் தருவதாக கூறுவது எல்லாம் ஒரு நகைச்சுவை. அவ்வாறு தந்தால் நான் எனது ஊதியத்தைநல்லகாரியங்களுக்கு கொடுக்க தயாராக இருக்கிறேன்' - என்று குறிப்பிட்டுள்ளார். (ம)

## இலங்கை வருகிறது ஆஸ்திரேலியா

ஆஸ்திரேலிய அணி ஜூலை மாதம் இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடவுள்ளது.

எதிர்வரும் ஜூலை 11ஆம் திகதி முதல் செப்ரெம்பர் 9ஆம் திகதி வரை இரண்டு மாதங்கள் இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ள ஆஸ்திரேலிய அணி, 3 டெஸ்ட், 5 ஒருநாள் மற்றும் 2 ரி-20 ஆட்டங்களில் மோதவுள்ளது. (ம)

CRICKET AUSTRALIA VS Sri Lanka Cricket




## மராட்டிய மாநிலத்தில் ஐ.பி.எல். வேண்டாம்




மராட்டிய மாநிலங்களில் ஐ.பி. எல். தொடர்களை நடத்துவதற்கு வதுக்கு எதிர்ப்புத் தெரிவித்து மும்பை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

9ஆவது ஐ.பி.எல். ரி-20 தொடர் நாளை தொடங்கி மே 29ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

தொடரின் 19 ஆட்டங்கள் மராட்டிய மாநிலத்தில் உள்ள மும்பை, புனே மற்றும் நாக்பூர் ஆகிய நகரங்களில் நடைபெறவுள்ளன. மராட்டியத்தில் தற்போது கடும் வறட்சி நிலவி வருவதால் ஆட்டங்களை இங்கு நடத்தக்கூடாது என்று உயர்நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில் - மராட்டியத்தில் தற்போது கடும் வறட்சி நிலவி வருகிறது. ஐ.பி.எல். தொடருக் காக மைதானத்தை பராமரிக்க 60 லட்சம் லீற்றர் தண்ணீர் வரை தேவைப்படுகிறது. இந்த நிலையில் இங்கு ஆட்டங்கள் நடைபெற்றால் தண்ணீர் பஞ்சம் இன்னும் தீவிரம் அடையும். எனவே ஆட்டங்களை வேறு மாநிலங்களில் நடத்த உத்தரவிட வேண்டும் - என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

## கோக்லி என்னை ஒரு வீரராக மதிக்கவில்லை
## ஆதங்கத்தைக் கொட்டித் தீர்க்கிறார் ஜோன்சன்



அடிலெய்ட் டெஸ்டில் கோக்லியுடன் ஏற்பட்ட மோதல் குறித்து முன்னாள் ஆஸ்திரேலிய வேகப்பந்துவீச்சாளர் மிச்செல் ஜோன்சன் மனம் திறந்து பேசியுள்ளார். குறித்த ஆட்டத்தில் கோக்லி தன்னை ஒரு வீரராகக்கூட மதிக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ரி-20 உலகக்கிண்ணத் தொடரின் போது ஜோன்சன், கோக்லியின் 2015ஆம் ஆண்டு உலகக்கிண்ண செயற்பாட்டை கிண்டலடித்து டுவிட்டரில் பதிவு செய்திருந்தார். ஆனால், ஆஸ்திரேலியாவுக்கு எதிரான அரையிறுதியில் அதிரடி காட்டிய கோக்லி 51 பந்தில் 82 ஓட்டங்கள்குவித்துஇந்தியஅணியை வெற்றி பெறவைத்தார். தான் இதை எதிர்பார்க்கவே இல்லை என்று குறிப்பிட்ட ஜோன்சன், கோக்லிக்கு பாராட்டு தெரிவித்துள்ளதுடன் 2014ஆம் ஆண்டு அடிலெய்ட் மைதானத்தில் நடைபெற்ற டெஸ்ட் ஆட்டத்தையும் நினைவுபடுத்தியுள்ளார்.

அடிலெய்ட் டெஸ்ட் குறித்து ஜோன்சன் தெரிவிக்கையில்:- அந்த டெஸ்ட் ஆட்டத்தில் நான் கோக்லியை ஆட்டமிழக்க செய்ய முயற்சித்தபோது நான் எறிந்த பந்து அவர் மீது பட்டது. ஆனால் அப்போது கோக்லி என்னைப் போல் நடந்து கொள்ளவில்லை. அதற்கு பதிலாக அன்று இரவு நடந்த செய்தியாளர் சந்திப்பில் 'என்னை ஒரு வீரராகவே மதிக்கவில்லை' என்று கூறினார். மைதானத்திலும் அவர் பந்துவீச்சாளர்கள் மத்தியில் இத்தகைய போக்கையே கடைப்பிடிப்பவர். இது எனக்கு கோபத்தை உண்டாக்குகிறது. ஐ.பி.எல். தொடரில் அவரை எதிர்கொள்ள ஆவலுடன் காத்திருக்கிறேன்' - என்றார். ஷ(ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**காணி விற்பனைக்கு**

கைதடி கிழக்கில் கொத்தாக்குடை என்னுமிடத்தில் அமைந்துள்ள " ஒயிட்டி செம்பாடு புலம் " என்னும் நி.பர. 9 குளி 12.7 விஸ்தீரணக் காணி விற்பனைக்குண்டு.

**076 700 8559**

**Majestic Cineplex Jaffna**

**கார்கில்ஸ் ஸ்குவெயர்**

(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)

இப்பொழுது திரையில் CEYLON THEATRES




விசாரணை ☎ 021- 2227712

Find us on facebook. CeylonTheatres

www.ceylontheatres.lk

## ரொனால்டோவை விற்கக்கூடாது என்கிறார் ரியல் மட்ரிட் அணியின் தலைவர் ஜென்டோ



ரியல் மட்ரிட் அணியின் நட்சத்திர வீரரான கிறிஸ்டியானோ ரொனால்டோவை, அந்த அணி விற்கக்கூடாது என, அந்தக் கழகத்தின் தலைவர் பாசோ ஜென்டோ தெரிவித்துள்ளார்.

ரொனால்டோ தொடர்பாக ஜென்டோ தெரிவிக்கையில் - ரியல் மட்ரிட் சார்பாகத் தனது பெயரை நிலைநாட்டியுள்ள ரொனால்டோ, உலகின் முன்னணி வீரர்களுள் ஒருவராகவும் காணப்படுகிறார். ஆனால், ரியல் மட்ரிட் கழகத்திலிருந்து அவர் விலகலாம் என்ற தகவல்கள் வெளியாகி வருகின்றன. குறிப்பாக, பரிஸ் செயின்ட் ஜேர்மன் அணிக்கோ அல்லது ரொனால்டோவின் முன்னாள் கழகமான மன்செஸ்டர் யுனைற்றெட் கழகத்துக்கோ அவர் செல்லலாமெனச் சொல்லப்படுகிறது. ரியல் மட்ரிட் ரொனால் டோவை விற்கக்கூடாது. ஒவ்வொரு நாளும் உங்களுடைய கழகத்துக்காகப் பல கோல்களைப் பெற்றுத்தரும் ஒரு வீரரை, நீங்கள் எவ்வாறு விற்கப்போகிறீர்கள்? இல்லை, இல்லை. அத்தோடு, விற்கும் கழகமாக ரியல் மட்ரிட் எப்போதும் இருந்ததில்லை. எல்லாவற்றுக்கும் மேலாக, வீரர்களை ரியல் மட்ரிட் வாங்கி யிருந்தது. மட்ரிட் விற்கக்கூடாது, அவர்கள் வாங்க வேண்டும். இங்குள்ள மக் களை கிறிஸ்டியானோ அறிவார். இந்தக்கழகத்தின் அதிகாரிகள் அவரை அதிகம் விரும்புகின்றனர் என்றார். (ம)

**தேவை**

யாழ் நகரில் இயங்கும் கட்டட ஒப்பந்த நிறுவனத்துக்கு வேலையாள்கள் தேவை.

1) அலுவலக பணியாளர் (பெண்கள்)
கல்வித்தகைமை G.C.E A/L ஆங்கில அறிவு
2) மேசன்
3) கூலியாள்கள்

**தொடர்பு: 077 354 9625**

**விற்பனைக்கு**

வாகனாங்கள் விற்பனைக்கு உண்டு.

1) கன்ரர் Issusu LG xxxx
2) மகேந்திரா ஜீப் PE xxxx
3) வான் Super GL57 xxxx

**தொடர்பு: 077 354 9625**

**விசேட கருத்தரங்கு**

May மாதம் நடைபெறவுள்ள
SLAS/SLEAS (OPEN/LIMITED)
பிரதி சனி 9-4PM
விரிவுரையாளர்
P. உமாசங்கர்
P. கமல்தாசன்
மற்றும் துறைசார்ந்த விரிவுரையாளர்

போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்
★ சமுர்த்தி உத்தியோகத்தர்
★ கிராமசேவையாளர்
★ சட்டக்கல்லூரி அனுமதி
பிரதி சனி 2-5 PM
விரிவுரையாளர்
P. உமாசங்கர்
P. கமல்தாசன்

**நாவலர்**
கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ்நகர்.
T.P: 0774696695

## பார்சிலோனா அபார ஆட்டம்

ஐரோப்பிய கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையே இடம்பெற்று வரும் சம்பியன்ஸ் லீக் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பார்சிலோனா, அத்லெட்டிகோ மட்ரிட் அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் பார்சிலோனா வெற்றிபெற்றுள்ளது.

ஆட்டத்தின் 25ஆவது நிமிடத்தில் அத்லெட்டிகோ மட்ரிட் சார்பாக முதல் கோல் பதிவானது. வேறெந்தக் கோல்களும் பதிவாகாமல் 70ஆவது நிமிடம் வரை அத்லெட்டிகோ மட்ரிட் அணியே 1:0 என்று ஆதிக்கம் செலுத்தி வந்தது. ஆட்டத்தின் 75ஆவது, 85 ஆவது நிமிடங்களில் லூயிஸ் சுவாரஸ் அடுத்தடுத்து இரு கோல்களைப் பதிவுசெய்ய முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது பார்சிலோனா. (ம)




அனுசரணை Anchor SEYLAN Sri Lanka Insurance

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.04.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.